புத்தக ஸ்பெஷல்!

கல்கி

KALKI 15.6.97 ரூ. 4.00



கடைகளில் கிடைக்கும் நண்பர்கள்!

கல்கி

6.7.97 இதழில்

கன்னியாகி நிலவினில் ஆடி...



வையவன்

எழுதும்

புரட்சித் தொடர்
ஆரம்பம்!



• பொதுக்குழுவுக்கு வரும் ஜெ....



● ஏற்கெனவே கோடம்பாக்கம் மேம்பாலப் பகுதியில் இருந்து வடபழனி வரை கடுமை யான போக்குவரத்து நெரிசல் உண்டு. ஜெ.வும் – திருநாவுக்கரசுவும் தங்கள் பொதுக் குழுக் களை அந்தப் பகுதியில் வைத்துக் கொண்ட தால், ஏக நெருக்கடியாகப் போய்விட்டது. அலுவலகம் செல்பவர்கள் பாடு பெரும் பாடாகி விட்டது.

● திருநாவுக்கரசு அணியினருக்கு இரவு முழுவதும் பொதுக்குழு ஏற்பாடு சம்பந்தமான வேலைகள் இருந்ததோ என்னவோ, கொடிகள், தோரணங்கள் கட்டுவதில் கோட்டை விட்டு விட்டார்கள். ஆனால் ஜெ. அணி அப்படி யல்ல; மதுசூதனனின் ஆட்களான பாலகங்கா வும், சேகர்பாபுவும், கைகளில் செல்போனை வைத்துக் கொண்டு, ஆட்களை விரட்டி,

விரட்டி வேலை வாங்கி, அம்மா படம் போட்ட கட்சிக் கொடி தோர ணங்களைக் கட்டி, ஆர்க்காடு ரோட்டையே திக்குமுக்காட வைத்து விட் டார்கள்.

● விஜயன் வழக்கு புகழ் ஆதிராஜாராம் வைத்திருந்த விளம்பரத் தட்டி அதிகம், 'எங்கள் இயக்கம் நீயே; எங்களது இயக்கமும் நீயே!' என்று எழுதி அம்மாவை அசத்தியிருந்தார் அவர்.

● ஜெ. வரும் வரை சேடப்பட்டியாரும், சத்தியமூர்த்தியும், பாதுகாப்பைப் பலப்படுத்தி, பல கெடுபிடிகளுக்குப் பிறகே ஆட்களை உள்ளே அனுமதித்தார்கள். ஆனால் விஜயா சேஷ மஹாலுக்கு ஒரு கி.மீ. முன்பே அம்மா வரும்போது தகவல் தெரிந்து விட்டதால், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனப்பட்டுப் போயின. முதலில் நடந்த செயற்குழு ஹாலில்

அம்மா நுழைந்தவுடன், கூடவே ரத்தத்தின் ரத்தங்களும் உள்ளே புக முயன்றதால், கண்ணாடிகள் உடைந்தன.

● கொஞ்சம் டார்க் பொடிக் கலரில் பூ போட்ட புடைவை. மூக்கில், காதில், கழுத்தில்... ஹூம்... குண்டுமணி கூட கிடையாது. "அம்மா எப்படி பூட்டாங்க... பார்த்தியா..." என்று தனது தோழியிடம் விசனப்பட்டுக் கொண்டார் ராயபுரம் மகளிர் அணித் தொண்டர் ஒருவர்.



• திருநாவுக்கரசு பொதுக்குழு—

● மதிய உணவுக்கான இடைவேளை விடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே, டைனிங் ஹால்களில் ரத்தத்தின் ரத்தங்கள் உட்கார்ந்து விட்டார்கள். உணவு பரிமாறுதல் தாமதம் ஆகவே, ஆங்காங்கே சின்ன, சின்னத் தகராறுகள் அரங்கேறின. பின்னர் ஜெ. தொண்டர்களுக்கு மகிழ்ச்சியூட்டும்விதமாக, அவர்களுடனேயே அமர்ந்து சாப்பிட்டார். முட்டை, மீன், சிக்கன் என்று என்.வி. ஐட்டங்கள் ஒரு பக்கம். தவிர, நான்கு விதமான பொறியலுடன் அட்டகாசமான சைவச் சாப்பாடு. ஆனால் பரிதாபம் என்னவென்றால், கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாததால், எந்தவித ஒழுங்குமுறையையும் உண்டாக்க முடியவில்லை. அதனால் முன்னாள் அமைச்சர்கள் பலர் வெளியே கிளம்பிப் போய்ச் சாப்பிட வேண்டியதாகி விட்டது. 'ஜெ. சாப்பிடுவதை வேடிக்கை பார்க்கிறோம்' என்ற ஆர்வத்தில் ஒரு கூட்டம், கண்ணாடி ஜன்னலை உடைத்து விட்டது.

● அ.தி.மு.க. ராஜ்யசபை எம்.பி.யான ஆர்.கே. குமார் ஜெயலலிதாவின் ரசனையை நன்கு அறிந்தவர் போல ஆங்கில கவிதைகளையும், மேற்கோள்களையும் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தார். "வேட்டி கட்டிய தமிழர்கள் இருவர் சேர்ந்து, வேட்டி கட்டிய தேவேகவுடாவைக் கவிழ்த்து விட்டார்கள். ஆனால், இன்னமும் நான்கைந்து மாதங்களில் பாராளுமன்றத்துக்குத் தேர்தல் வரப் போகிறது. அதன்பின் 'அம்மா' சொல்பவர் பிரதமர் அல்ல; 'அம்மா'வே பிரதமர்" என்று கூறி கைதட்டலைப் பெற்றுக் கொண்டார்.

● நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளரிடம் பேசிக் கொண்டிருந்தோம். "எங்கள் மாவட்டத்

"அம்மா எப்படிப் பூட்டாங்க, பார்த்தியா..!"

யாரைப் போல பிறக்க ஆசை?



பட்டுக்கோட்டை பிரபாகர்:

"இந்தப் பிறவியில், ஒரு எழுத்தாளராக, பெண்களின் அழகையும், உணர்வுகளையும் எழுத்தில் கொண்டு வர முடிந்திருக்கிறது என்றாலும், மறுபிறவியில் ஏதாவது ஒரு பெண்ணாகவே பிறந்து, அந்த உணர்வுகளை அனுபவரீதியில் உணரவே ஆசைப்படுகிறேன்.

— மௌலி

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

தில் உள்ள இரண்டு ராஜ்ய சபை உறுப்பினர்களும் அந்தப் பக்கம் போய் விட்டாலும், அவர்களால் ஒரு பொதுக்குழு உறுப்பினரைத்தான் கொண்டு போக முடிந்தது" என்றார். "உங்களுக்கெல்லாம் ஜெ. 50,000 ரூபாயும், தங்க மோதிரமும் கொடுத்ததாகச் சொல்கிறார்களே!" என்று கேட்டதற்கு "அப்பட்டமான பொய்; இந்த பத்திரிகைக்காரர்கள் ஏன்தான் இப்படிக் கிளப்பி விடுகிறார்களோ?" என்று நொந்து கொண்டார்.

● திருநாவுக்கரசு பொதுக்குழு கூட்டிய ரஜினியின் ராகவேந்திரா மண்டபத்திலும் நல்ல கூட்டம். வருபவர்களுக்கெல்லாம் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர் என்ற பேட்ஜ் வழங்கப்பட்டது. 'தி.அரசு பொதுக் குழுவை கூட்டக் கூடாது' என்று முதல் நாள் ஜெ., போட்ட வழக்கு காரணமாக, மறுநாள் விசாரணைக்கு அந்த வழக்கு வரும் முன்னரே தி. அரசு அணியினர் 'பொதுக்குழுவை' நடத்தி முடித்து விட்டனர். பின்னர் ஹாய்யாக தலைவர்கள் ஏ.ஸி. அறையில் அமர்ந்து கொண்டு பல்வேறு பொறுப்புகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுத்தனர்.

● பண்ருட்டி, கே.ஏ.கே., ராசாராம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவாவது வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் மிஸ்ஸிங். 'Wait and Watch' என்று இருக்கிறார்களாம் அவர்கள். ஆர்.எம்.வீயுடனும் பேச்சு வார்த்தை நடக்கிறதாம்.

● தமிழ் மாநில காங்கிரஸைச் சேர்ந்த பல்லாவரம் நகரசபைத் தலைவர் அடைக்கலம், மிகப் பெரிய மாலையை தி. அரசுக்குப் போட்டார். பின்னர் நெடுநேரம் மண்டபத்தில் இருந்து தொண்டர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். 'மூப்பனார் அணியில் அவர் இருந்தாலும், தி. அரசுவின் பழைய தோழர்... அந்த பாசத்தில் வந்திருக்கிறார்' என்று சொன்னார் சக பத்திரிகையாளர் ஒருவர்.

● கட்சியிலிருந்து இரண்டு முறை 'வெளியேற்றப்பட்ட' பெருமை ஜெ.வுக்கு உண்டு. முதலில் கண்ணப்பன் பொதுக் குழுவை கூட்டி ஜெ.வை வெளியேற்றினார். இப்போது தி.அரசு. "இந்த முறை ஜெயலலிதாவிடம் இருந்து கட்சியை இவர்கள் காப்பாற்றவில்லை என்றால், பாதிக்கப்பட்டுப் போவது இவர்கள் மட்டுமல்ல; தமிழ்நாடும்தான்!" என்று நம்மிடம் சொன்னார் எம்.ஜி.ஆர். காலத்துத் தொண்டர் ஒருவர்.

● ஜெ. பொதுக்குழுவை ஒப்பிடும்போது சாப்பாட்டு விஷயத்தில் கொஞ்சம் அடக்கி வாசித்தது தி. அரசு அணி. சாதாரண சாப்பாடுதான். "தென்னை மரத்து வௌவாலு; திருநாவுக்கரசு நம்ம ஆளு" என்று கூவிக் கொண்டே வந்த இளைஞர் கூட்டம் ஒன்று டைனிங் ஹாலுக்குள் நுழைந்தது. அங்கு சாப்பாடு இல்லையென்று தெரிந்ததும், கொந்தளித்துப் போனது.

● தி. அரசு, பொதுக்குழு மேடை கோயம்பேடாகக் காட்சியளித்தது. போதாததற்கு பொறுப்பாளர்களை அறிவிக்கும்போது கொஞ்சம் கசமுசா வேறு. தொழிற்சங்கத்திற்கு வீராச்சாமி என்பவரை அறிவிக்க, அதை எதிர்த்து மேடையிலேயே குரல்கொடுத்தார்கள். இதனால் உண்டான வாய் மோதல் கொஞ்சம் பரபரப்பை உண்டாக்கி விட்டது.


● நீதிமன்றத் தீர்ப்பின்படி, திருநாவுக்கரசு அணி எடுத்த முடிவுகளுக்கு ஒரு வாரம் இடைக்கால தடை போடப்பட்டிருக்கிறது. பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பற்றி இரு அணியினருமே ஏறுக்கு மாறாக கணக்குச் சொல்வதால், எந்த அணியினருக்கு அதிக உறுப்பினர் ஆதரவு என்பதை அறிவது கடினம். இரண்டு அணிகள் நடத்தியதுமே பொதுக்குழுவா அல்லது பொதுக் கூட்டமா என்ற சந்தேகம் பலருக்கு. ஆனாலும் கிட்டத்தட்ட 80 சதவீத ஒன்றியச் செயலாளர்கள் ஜெ. அணி நடத்திய பொதுக்குழு கூட்டத்திற்கு வந்திருந்தார்கள் என்று நம்பகமான தகவல் ஒன்று சொல்கிறது.

— ப்ரியன்

படங்கள் : **சாய்வர்ஷா**

மணிமேகலைப் பிரசுரத்தின் 75 வருடப் பஞ்சாங்க நூல்கள்!

திருக்கணிதப் பஞ்சாங்கம் 1926 முதல் 2000 வரை 6 புத்தகங்கள் விலை ரூ. 460.00; இதேபோல் வாக்கியப் பஞ்சாங்கம் 1926 முதல் 2000 வரை ரூ. 460.00;



விற்பனையாகும் இதர ஜோதிட நூல்கள்.

1997 ஆம் ஆண்டு ராசி பலன் 12.00; சனிப் பெயர்ச்சிப் பலன்கள் (15.2.1996 முதல் 16.4.1998 வரை) 15.00; ஜோஸ்யம் கற்றுக் கொள்ளுங்கள் 57.00; பிறந்த நாள் ஜோஸ்யம் 11.00; உங்கள் லக்னப் பலன்கள் 13.25; நல்ல காரியங்களைச் செய்ய நல்ல நேரங்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி? 15.50; பல்வகை ஆருடங்களும் உங்களுக்கான பலன்களும் 10.00; நவரத்தினங்களும் உங்கள் அதிர்ஷ்டங்களும் 9.00; பிரச்ன ஆருட இரகசியங்களைத் தெரிந்துகொள்ளுங்கள் 10.00; காலச் சக்கர திசை 14.00; மூச்சு ஜோதிடம் பார்ப்பது எப்படி? 10.50; மேலை நாட்டு ஜோதிடர்கள் சொல்லும் ஜோதிடம் 37.00; ஜாதகம் பார்ப்பது எப்படி? 40.00; ஜாதகம் இல்லாதவர்கள் ஜாதகம் பார்ப்பது எப்படி? 13.00; திருமணப் பொருத்தம் பார்ப்பது எப்படி? 39.00; கூட்டுக் கிரகப் பலன்கள் 32.50; குழந்தைகளுக்கு வரும் பாலக் கிரக தோஷமும் பரிகாரங்களும் 22.50; கிரகங்கள் பேசுகின்றன! 28.00; தசவர்க்க ஜாதக விளக்கம் 32.00; வராகமிகிரரின் பிருகத் ஜாதகச் சாரம் 18.00; ஜாதக அலங்காரச் சாரம் 27.00; புத்திர தோஷமும் பரிகாரமும் 10.00; அஷ்டவர்க்க ஜாதகப் பலன்கள் 17.00; புலிப்பாணி முனிவரின் ஜாதக இரகசியங்கள் 57.00; ஜாதக தோஷ சாந்திப் பரிகார முறைகள் 17.00; புகழ் பெற்றவர்களின் ஜாதகங்கள் 39.00.

விற்பனையாகும் இதர பக்தி நூல்கள் : தெய்வ நம்பிக்கையும் தெளிவுமிக்க வாழ்க்கையும் 18.00; கோயில்களும் தெய்வீக முயற்சிகளும் 13.50; கீதை காட்டும் பாதை 42.00; சந்தியாவந்தனம் செய்வது எப்படி? 13.00; அஷ்டலட்சுமிகள் வரலாறும் வழிபாடும் 17.00; சர்வ தோஷ நிவர்த்தி தரும் சர்வேஸ்வரன், சிவன், சங்கரன் வழிபாடு 11.00; எந்தக் காரியம் வெற்றி பெற எந்தக் கடவுளை எப்படி வணங்க வேண்டும்? 31.00; ஸ்ரீ சத்திய சாயிபாபா வரலாறும் மகிமைகளும் 26.00; காஞ்சிப் பெரியவர்களின் வரலாறு 11.00; அறுபத்து மூவரும் பன்னிரு ஆழ்வாரும் 39.00; ஸ்ரீ ராகவேந்திரரின் வரலாறும் மகத்துவமும் 15.50; மந்திர சாம்ராட் (ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்) 65.00; இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா 31.00; திருப்பாவை, திருவெம்பாவை - மூலமும் தெளிவுரையும் 10.00; அபிராமி அந்தாதி - மூலமும் உரையும் 14.00; சக்திவாய்ந்த சண்முகக் கவசம் 11.00; சௌந்தர்ய லஹரி கனகதாரா ஸ்தோத்திரம் மூலமும் தெளிவுரையும் 17.00; திருவாசகம் 33.00; திருமந்திரம் (மூலமும் உரையும்) பாகம் - 1 ரூ. 90.00; திருப்பதி வெங்கடாசலபதியின் வரலாறும் வழிபாட்டு முறைகளும் 25.00; காளஹஸ்தி தலபுராணமும் பெருமைகளும் 33.00; பக்த விஜயம் 11.50; சிவ புராணம் 28.00; கந்த புராணம் 65.00; விஷ்ணு புராணம் 39.00; அனுமார் புராணம் 39.00; பிள்ளையார் புராணம் 49.00; விநாயகரும் விநோதச் செய்திகளும் 17.00.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம் : காலை 9.00 முதல் மாலை 6.00 மணி வரை. ஞாயிறு விடுமுறை. கடிதம் எழுத வேண்டிய முகவரி :

மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447, 4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926 தொலைநகல் : 044-4346082

திருப்பதிக்கு லட்டு:

“எதிர்பாராத சூழலில் வேறு மெக்கானிக்கிடம் உதவி கோர வேண்டிய சந்தர்ப்பங்கள் நேர்ந்ததுண்டா?'' என்று ஐ.ஐ.டி. பகுதியின் அருகே டூ-வீலர் மெக்கானிக்குகளாகப் பணி புரியும் பாஸ்கரன் மற்றும் குணாவிடம் கேட்டோம்.

“நாங்களும் வெளியூருக்கெல்லாம் கூட டூ வீலரிலேயே போவதுண்டு. போகும் வழியில் ஏதாவது வண்டி நின்று போய், அதன் சொந்தக்காரர் தனக்குத் தெரிஞ்ச வித்தைகளைக் காண்பித்தும் வண்டி ஸ்டார்ட் ஆகாததால் தலையிலே கையை வச்சுக்கிட்டு சோகமா நிற்பதுண்டு. நாங்க அவங்களுக்கு உதவ எண்ணி, வண்டியை ரிப்பேர் செய்து தருவோம். வழியில் செய்கிற இப்படிப்பட்ட உதவிகளுக்கெல்லாம் காசு வாங்கிக் கொள்வதில்லை.

“அதே மாதிரி நாங்கள் போகும் வண்டியே பாதி வழியில் கழுத்தறுத்து எங்களைச் சங்கடப்படுத்தியதும் உண்டு. ஒருமுறை திருப்பதி கிட்டே போய்க்கிட்டு இருந்தபோது, வண்டியின் பின் சக்கரம் பங்க்சர் ஆனது. ரொம்ப தூரம் தள்ளிக்கிட்டுப் போய் ஒரு கடையிலே பங்க்சர் ஒட்டினோம். இதற்கு இருபத்தைந்து ரூபாய் கேட்டார் அவர். அதிர்ச்சியுடன் ‘நானும் மெக்கானிக்தான். இப்படி அநியாயமான தொகையை என்னிடமே வசூலிக்கலாமா?'' என்று கேட்டோம். கொஞ்சம் அசட்டுச் சிரிப்புடன் ‘என்ன செய்ய? மெட்ராஸ் மாதிரி இங்கல்லாம் நிறைய வண்டிகள் பங்க்சர் ஒட்ட வராது. அதனால வேற வழியில்லே...' என்று கூறிவிட்டு கறாராகப் பணத்தை வாங்கிக் கொண்டார்!

“ஒருமுறை குஷியாக கொடைக்கானலுக்கு மோட்டார் பைக்கிலேயே சென்றிருந்தோம். வழியில் ஆள் அரவமில்லாத இடங்களை எல்லாம் கடக்கவேண்டும் என்பது தெரியும். ஆனாலும் கைவசம் சில அடிப்படை ரிப்பேர் செய்யும் கருவிகளை எடுத்துச் சென்றதால், கவலைப்பட எதுவுமில்லை என்று அலட்சியமாக இருந்துவிட்டோம்.

“சொல்லி வைத்த மாதிரி, கண்ணுக்கெட்டிய தூரம் கடைகளோ கட்டடங்களோ இல்லாத ஓரிடத்தில் வண்டி நின்று விட்டது. செயின்-ஸ்பாக்கெட் சகட்டுமேனிக்கு ஜாம் ஆகிப் போயிருந்தது. மிகவும் கஷ்டப்பட்டுச் சுமார் ஒரு கிலோ மீட்டர் தள்ளிக் கொண்டு போனோம். அங்கு ஒரு மெக்கானிக் கடையைப் பார்த்ததும் சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை. ஆனால் நாங்கள் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், ‘உங்கள் ரூட் வேற, என்னோட ரூட் வேற' என்றபடி தமது போக்கில் வேறு ஏதேதோ பாகங்களையெல்லாம் சுழற்றி, எங்களை டென்ஷனாக்கினார். கடைசியில் ஒருவழியாக நாங்கள் சொன்னதை ஒத்துக் கொண்டார். அங்குள்ள டூல்ஸைக் கொண்டு அவரும் நாங்களுமாகச் சேர்ந்து வண்டியைச் சரிசெய்தோம்!”



• பாஸ்கரன், குணா

“ஏழைகளிடமே கறந்தெடுக்கிறார்கள்!”

— ஜி.எஸ்.எஸ்.
படம்: ஸ்ரீஹரி

கடைகளில் கிடைக்கும் நண்பர்கள்!

"மோகினி, உங்களுக்குப் படிக்கிற பழக்கம் உண்டா?"

"என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்! படிக்காமல் கூட ஒருவரால் இருக்க முடியுமா என்ன?"

"என்ன படிப்பீர்கள்?"

"ராமகிருஷ்ண விஜயம். தொடர்ந்து படிக்கிறேன்!"

"அப்புறம்?"

"ஐஸ் வைப்பதாக நினைத்துக் கொள்ளக் கூடாது."

"இல்லை."

"கல்கி, மங்கையர் மலர், மங்கை... அப்புறம், பாரதியார் கவிதைகள்... 'மனதில் உறுதி வேண்டும்' பாடலும் பாஞ்சாலிசபதமும் ரொம்பப் பிடிக்கும். பள்ளியில் படிக்கிற போது அகிலனின் 'வேங்கையின் மைந்தன்' நாவலைக் கொஞ்சம் படித்திருக்கிறேன். கல்கியின் 'பொன்னியின் செல்வ'னைக் கொஞ்சம் படித்திருக்கிறேன். 'சிவகாமியின் சபதம்' படிக்க ஆசை. அப்போது சிறு வயது என்பதால் அவ்வளவாக அவை புரியவில்லை. இப்போது படிக்க ஆசை."

"சரித்திர நாவல்கள்தான் பிடிக்குமா, சமூக நாவல்கள் பிடிக்காதா?"

"அவ்வளவாகப் பிடிக்காது. ஆனாலும் சிவசங்கரி மேடத்தின் நாவல்கள், லக்ஷ்மியின் நாவல்கள் படித்திருக்கிறேன். வைரமுத்து சாரின் கவிதைகளையும் படித்திருக்கிறேன்."


• தமிழ்ப்புத்தகாலயத்தில்...

"சரி, வாருங்களேன் புத்தகக் கடைகளுக்கு ஒரு ரவுண்ட் போய் வருவோம்!"

"ஓ! போகலாமே!" என்று சந்தோஷமாகப் புறப்பட்டார் மோகினி.

முதலில் ராமகிருஷ்ண மடத்துக்கு அழைத்துச் சென்றோம்.

"மயிலாப்பூரில்தான் எங்களுக்குச் சொந்த வீடு இருக்கிறது. எனது சிறுவயதெல்லாம் அங்குதான் கழிந்தது என்றாலும் ராமகிருஷ்ண மடத்துக்கு இதுவரை நான் வந்ததேயில்லை. இந்தச் சூழ்நிலையே சந்தோஷமாக இருக்கிறது!" என்ற மோகினியை ராமகிருஷ்ணமடம் வெளியிடும் புத்தகங்கள் விற்பனையாகும் இடத்துக்குக் கூட்டிச் சென்றோம்!

அன்னை சாரதாதேவி பற்றி ரா. கணபதி எழுதிய 'அம்மா' புத்தகத்தைப் பார்த்தவர் "சூப்பர் புத்தகம் இது! அப்படி இதை விழுந்து விழுந்து படித்திருக்கிறேன்!" என்று பல்வேறு

புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடங்களைப் பார்த்துக் கொண்டே வந்தார்.

"உங்களுக்கு எந்தெந்தப் புத்தகங்கள் தேவையோ, அவற்றையெல்லாம் எடுத்துக் கொள்ளலாம் மோகினி!" என்றோம்.

சகோதரி நிவேதிதா எழுதிய 'KALI THE MOTHER' மற்றும் 'CRADLE TALES OF HINDUISM' ஆகிய சிறு புத்தகங்களை எடுத்துக் கொண்டவர், விவேகானந்தர் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அலமாரிக்குச் சென்று எல்லாப் புத்தகங்களையும் ஒவ்வொன்றாக எடுத்து எடுத்துப் புரட்டிப் பார்த்தார். மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

கடைசியில் 'WOMEN OF INDIA' என்ற ளுங்கள்!" என்றோம்.

மறுபடியும் விவேகானந்தர் புத்தகங்களையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தவர், கொழும்பிலிருந்து அல்மோரா வரை சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவு களடங்கிய புத்தகத்தை எடுத்துக் கொண்டார்.

தாம் எடுத்துக் கொள்கிற எந்த நூலுக்கும் அவர் பணம்தரத் தேவையில்லை என்பதால் ஏற்பட்ட கூச்சமோ என்னவோ, "இது போதும் எனக்கு!" என்றார்.

மடத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னால் மோகினியை அழைத்துச் சென்று சுவாமி கமலாத்மானந்தரிடம் அறிமுகப்படுத்தினோம். ஆசீர்வதித்த அவர், மோகினி எடுத்துக்



• வானதி பதிப்பகத்தில்.....

விவேகானந்தரின் நூலையும் 'TALKS WITH SWAMY VIVEKANANDA' வையும் எடுத்து வைத்துக் கொண்டார். இருந்தாலும் திருப்தி வரவில்லை.


"இதற்கெல்லாம் நான் பணம் கொடுத்து விடலாமில்லையா?" நம்மைப் பார்த்துக் கேட்டார்.

"தேவையில்லை. அது பற்றிக் கவலைப்பட வேண்டாம். தேவையானதை எடுத்துக் கொள்

கொண்ட புத்தகங்களை வாங்கிப் பார்த்தார்.

"நல்ல விஷயம். உன் போன்ற இளம்பெண்கள் இதுபோன்ற புத்தகங்கள் படிப்பதில் ஈடுபாடு காட்டுவது ரொம்ப நல்ல விஷயம்!" என்றார் சுவாமி கமலாத்மானந்தர்.

சந்தோஷமான மோகினி, அவரது அறு



''உங்களை, தலைவர் கட்சியை விட்டு நீக்கிட்டாரே! அடுத்த கட்டமா நீங்க என்ன செய்யறதா இருக்கீங்க?''

''ஏதாவது ஒரு வார இதழ்ல தலைவரை விமர்சனம் பண்றாப்ல ஒரு தொடர் கட்டுரை எழுத வேண்டியதுதான்!''

— மணியம்பட்டு. வ. திருநாவுக்கரசு

வலக அறையில் மாட்டப்பட்டிருந்த காளிபட காலண்டரைப் பார்த்தார்.

"உனக்கு காளியைப் பிடிக்குமா?"

"ஆமாம் சுவாமிஜி. கல்கத்தா காளிதான் எனது இஷ்ட தெய்வம். காளி பட டாலரைத் தான் நான் கழுத்தில் அணிந்து கொண்டிருக்கிறேன்!" என்று எடுத்துக் காட்டினார்.

"நல்லது. சகோதரி நிவேதிதா எழுதிய 'Kali the Mother' என்னும் புத்தகத்தை எடுத்து வந்திருக்கிறாயே, அதிலுள்ள அட்டைப் படக் காளிதான் ராமகிருஷ்ண பரமஹம்சர் வணங்கிய காளி. இந்தக் காளிதான் பரமஹம்சரோடு பேசிய காளி!" என்று சுவாமி கமலாத்மானந்தர் சொன்னபோது, மோகினிக்குக் ஏக சந்தோஷம்.

''ஒருமுறை கல்கத்தா சென்று அந்தக் காளியை தரிசித்து வர ஆசை சுவாமிஜி!"

"நல்லது!" என்று விடைகொடுத்தார் சுவாமி கமலாத்மானந்தர்.

ஆனாலும் மோகினிக்கு விடைபெறத் தயக்கம். திரும்பத் திரும்ப அங்கே மாட்டியிருந்த காலண்டரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''சுவாமிஜி எனக்கு அந்தக் காலண்டர் வேணும்..." தயங்கித் தயங்கிக் கேட்டார்.

"தாராளமாக எடுத்துக் கொள்!" என்று அவர் சொன்னதும் ஓடிப்போய் அந்தக் காளி படக் காலண்டரை மிகவும் பயபக்தியோடு கழற்றி எடுத்துக் கொண்டு புறப்பட்டார் மோகினி.

அடுத்து, தமிழ்ப் புத்தகாலயத்துக்கு வந்தோம்.

அங்கே அகிலனின் 'வேங்கையின் மைந்தன்' நாவலைக் கண்டதும் உடனடியாக எடுத்து வைத்துக் கொண்டார்.

பிறகு பல்வேறு புத்தகங்களையும் புரட்டிப் புரட்டிப் பார்த்து விட்டுக் கடைசியாக ராஜம் கிருஷ்ணன் எழுதிய 'காலந்தோறும் பெண்', 'மாறி மாறிப் பெண்ணும்' ஆகிய நூல்களை எடுத்துக் கொண்டார்.

"சமூக நாவல்கள் ஏதும் தேவையா? எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார் அகிலனின் மகனும் பதிப்பகத்தின் உரிமையாளருமான அகிலன் கண்ணன்.

"சமூக நாவல்களெல்லாம் வேண்டாம்!" என்ற மோகினி, டாக்டர் முத்து சிதம்பரம் எழுதிய 'பெண்ணியம் : தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலையும் எடுத்துக்கொண்டு, "இப்போதைக்கு இவை போதும்!" என்று புறப்பட்டார்.

கடைசியாக வானதி பதிப்பகத்துக்குள் சென்றோம். "எந்தப் புத்தகம் தேவையானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார் வானதி திருநாவுக்கரசு.

கண்ணில் பட்ட பாரதியாரின் கவிதைத் தொகுப்பை முதலில் எடுத்து வைத்துக் கொண்டார் மோகினி.

அப்புறம், ராஜாஜி எழுதிய 'ராமாயணம்'. பிறகு ரா. கணபதி எழுதிய 'ஜய ஜய சங்கர'.

மீண்டும் மீண்டும் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டே வந்தவர், ரா. அ. பத்மநாபன் எழுதிய 'பாரதியைப் பற்றி நண்பர்கள்' நூலையும் புலவர் செந்துறைமுத்து எழுதிய 'மகாகவி சுப்ரமணிய பாரதியார்' என்னும் நூலையும் எடுத்துக் கொண்டார்.

மறுபடியும் சுற்றிச் சுற்றி வந்தவர், "கல்கியின் 'சிவகாமியின் சபதம்' வேண்டுமே.. அது எங்கேயிருக்கிறது?" என்று கேட்க, "இங்கே தீர்ந்து போய் விட்டது. இதோ, குடோனிலிருந்து எடுத்துவரச் சொல்கிறேன்!" என்று ஆளனுப்பி எடுத்து வந்து கொடுத்தார் வானதி திருநாவுக்கரசு.

இறுதியாக, 'தம்பதிகளுக்குச் சில ஆலோசனைகள்' என்னும் புத்தகத்தை மோகினி எடுத்தபோது, "என்ன சீக்கிரமாகக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?" என்று நாம் கிண்டல் செய்தோம்.

''சேச்சே! எனது தோழியொருத்திக்குக் கொடுப்பதற்காக எடுத்தேன். வெறும் பொருள்களைத் திருமணப் பரிசாகத் தருவதை விட புத்தகங்களைப் பரிசளிப்பது சிறப்பாக இருக்குமல்லவா!" என்றார் மோகினி.

— பிரின்ஸ்

அட்டை வண்ணப்படமும் படங்களும் :
பிரவீன்குமார்

கல்கி-பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

முதலிரவு ஜோக்

போட்டி - 7

முடிவு

''உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா, டார்லிங்?''

''லேட்டஸ்ட் டயலாக் எதுவும் உங்களுக்குத் தெரியாதாங்க?''

–நெல்லை. குரலோன்

''பாருங்க, நீங்க 'ஹெல்த் டிபார்ட்மெண்ட்'ல வேலை பார்க்கலாம். அதுக்காக சொம்பு பால்ல கொஞ்சம் எடுத்து 'டெஸ்டுக்கு' அனுப்பறது சரியில்ல.''

– ஏ. இராசேந்திரன்

''கண்ணே! இந்த இரவை என்னால் மறக்கவே முடியாது.''

''ஏன் அத்தான்?''

''பின்னே! என் வாழ்நாளில் இவ்வளவு பதார்த்த வகைகளை நான் ருசி பார்த்ததே கிடையாதே!''

– எம். கோவிந்தராஜன்



''இதை ஏன் 'முதலிரவு'ன்னு சொல்றாங்க?''

''உற்சாகமா இருக்கிற நம்ம வாழ்க்கை இருள்லே மூழ்க ஆரம்பிக்கிறது இந்த இரவிலிருந்துதானே!''

– எஸ். இராஜேந்திரன்

''உங்க மாப்பிள்ளை என்னை ரொம்ப அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போவார்னு நினைக்கறேன்.''

''எதை வெச்சு சொல்றே?''

''முதல் இரவுல பால் சொம்பைக் கையில கொடுத்தேன். வாங்கி டேபிள்ல வெச்சுட்டு, தடால்னு என் காலில் விழுந்து தொலைச்சுட்டார்.''

– கடலூர் சார்லி

''என்னோட மாப்பிள்ளை பக்கா அரசியல்வாதி!''

''அதுக்காக தெரு முழுக்க 'முதலிரவு கண்ட முதல்வனே வருக'ன்னு நீங்க போஸ்டர் ஒட்டினது கொஞ்சம் கூட நல்லா இல்லே!''

— வே. செந்தில் குமார்


''முதலிரவு அறைக்குள்ளே போன மாப்பிள்ளை ஏன் அலறிக்கிட்டு வர்றார்?''

''முதலிரவுக் கட்டிலைப் பார்த்தவுடன் தேக்கு மர ஊழல் சம்பந்தமா அவங்க வீட்டுல நடந்த சி.பி.ஐ. ரெய்டு ஞாபகத்துக்கு வந்துடுச்சாம்.''

– எஸ். ஆனந்தபத்மாவதி

''என்னடி... பால் சொம்பைக் கொண்டு வர்றதுக்குப் பதிலா.. பசுமாட்டைக் கூட்டிட்டு வர்ற?''

''நீங்கதான் 'கறக்குறதில' கெட்டிக்காரராச்சே... இதுவரைக்கும் எங்கப்பாகிட்டேயிருந்து எவ்வளவோ கறந்துட்டீங்க...



பாலையும் நீங்களே கறந்து குடிச்சுக் கோங்க...''

— சுந்தர் அழகேசன்

"ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டே யிருந்தா எப்படி... ஏதாவது பேசு..."

"ஏங்க... நமக்குக் குழந்தை பிறந்தா உங் களை மாதிரியிருக்குமா... அல்லது அழகா யிருக்குமா?"

- லட்சுமி ஆவுடைநாயகம்

பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்கும்
ரூ. 100 பரிசு பெறுகிறது...

ஒருபுறம் மறுபுறம்

"நான் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது என் உடலில் தொழுநோய்க் கிருமிகளின் பாதிப்பு ஏற்பட்டது. பதின்மூன்று ஆண்டுகள் தொழுநோயால் தொடர்ந்து அவதியுற்றேன். மருந்து ஏதும் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படாத காலம் அது. தொழுநோயின் அறிகுறி முகத்தில் தென்பட்டதும் நான் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டேன்!" என்கிறார் மேக்ஸ்.

இருந்தாலும் மேக்ஸின் உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்த சாதனை தாகத்துக்குள் அனைத்து எதிர்ப்புகளும் எரிந்து போயின.

குடிசைவாழ் பகுதியில் இருந்த ஒரு பள்ளியில் சேர்ந்தார். மற்ற மாணவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டி, வகுப்புக்குள் கடைசியாக நுழைந்து, முடிந்தவுடன் முதல் மாணவனாக வெளியேறி விடுவார்.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் இப்படி எல்லா நிலைகளிலும் முதல் மாணவனாகவே தேர்ச்சி பெற்றார் மேக்ஸ். நிர்வாக அறிவியலில் டாக்டர் பட்டமும் சேர்ந்து கொண்டது.

இப்போது பேராசிரியர் டாக்டர் இம்மானுவேல் மேக்ஸ், சென்னைப் பல்கலைக்கழக அளவியல் பொருளாதாரத் துறையின் தலைவர்.

அதென்ன அளவியல் பொருளாதாரம்?

ஆங்கிலத்தில் 'எக்கனாமெட்ரிக்ஸ்' என்கிறார்கள். பொருளாதாரத்தில், வெறும் விளக்கங்களை மட்டுமே கொண்ட உரைநடையிலிருந்து மாறுபட்டு, கணிதமும் புள்ளியியலும் பொருளாதார நிருபணங்களுக்குப் பெருமளவு துணை நிற்க முடியும் என்று நிருபிக்கும் அறிவியல்.

"இந்த இடத்தில் நான் என் அம்மாச்சியைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். சின்ன வயதில் என் நோயின் அறிகுறி தொடங்கியதுமே தன் வாழ்க்கையையே எனக்காக – என் சிகிச்சைக்காக – அர்ப்பணித்துக் கொண்ட என் அம்மாவின் அம்மாதான் என் தெய்வம். அவர் மட்டும் அன்று எனக்கு ஆதரவுக் கரம் நீட்டவில்லை என்றால் நான் இந்நேரம் எங்காவது ஒரு தெருவில் ஒரு தொழுநோய் பிச்சைக்காரனாகப் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பேன்."

இதைச் சொல்லும்போது மேக்ஸ் நெகிழ்ந்து போகிறார்.

டாக்டர் மேக்ஸ் பல்கலைக்கழக மானியக் குழுவின் விருது பெற்றார். தொழுநோயில் பொருளாதார விஞ்ஞான ஆய்வை மேற்கொண்டார். பல சர்வதேச அரங்குகள் இவருக்கு அழைப்பு விடுத்தன. தம் பணிகள் அனைத்திலும் ஏதேனும் ஒரு வடிவில் தொழுநோய் பற்றிய ஆராய்ச்சி மையம் கொள்ளும்படியே இவர் அமைத்துக் கொண்டார். இவரது ஆராய்ச்சித் திறனைப் பாராட்டி 'டகமி' விருது தந்து அமெரிக்கா கௌரவித்தது.

டேரோ டகமி ஒரு ஜப்பானிய டாக்டர். உலக மருத்துவ உலகில் இவரது பெயர் இன்று உச்சரிக்கப்பட்டாலும் ஒரு ஞானியை வணங்குவது போல் மருத்துவ நிபுணர்கள் வணங்குகிறார்கள். அவர் பெயரால் ஒரு விருது. இவருக்கு அது வழங்கப்பட்டது என்பது இந்தியாவுக்குப் பெருமை.

ஒரு பக்கம் டாக்டர் மேக்ஸின் பல்வேறு பரிமாணங்களை உலகம் அங்கீகரித்துக் கொண்டே வந்தது.


இன்னொரு பக்கம் தனிப்பட்ட வாழ்க்கையில் சோதனைகள் இவரைச் சூழ்ந்து கொண்டே இருந்தது.

அம்மாச்சியின் பாசத்தாலும், அயர்வில்லாத உழைப்பாலும் பல்வேறு மருத்துவர்களின் முயற்சியாலும் அறுவை சிகிச்சைக்குப் பின் பெருமளவு குணமடைந்து விட்டாலும் சமூகத்தின் விரோதங்கள் மேக்ஸ்ஸை தீண்டிக் கொண்டே இருந்தன.

இவரைப் புரிந்து கொண்டு கரம்பிடித்த மனைவி – செல்வம் என்று பெயர். இரண்டு மகன்களைப் பெற்று வளர்த்து தன் கணவருக்கு உதவியாய் இருந்தபின் 1991-ல் புற்றுநோயில் இறந்து போனார்.

உலகமே இருண்டு போனது பேராசிரியருக்கு.

"என்ன பண்ணுவது என்றே எனக்குத் தெரியவில்லை. நான் அமெரிக்கா, ஜப்பான் என்று பல்வேறு சர்வதேச அரங்குகளில்



• தமது மகன்களுடன் மேக்ஸ்

அதன்பின் டாக்டர் மேக்ஸ் தம் வாழ்வில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கினார் என்றே சொல்ல வேண்டும்.

தாயில்லாத தம் இரு மகன்களுக்குத் தாயும் தந்தையுமானார். தொழுநோயாளிகளின் தோழனாகவும் ஆனார்.

அலைந்து திரிந்தார். தமது அளவியல் பொருளாதார அனுபவமும், அறிவும் கைகொடுக்க, தொழுநோயாளிகளின் பல்வேறு பிரச்னைகளை அணு அணுவாக ஆராய்ந்தார்.

கூடவே சில கசப்பான உண்மைகளையும் அவர் சந்திக்க நேர்ந்தபோது மனம் நொந்து இடிந்து போனார்.

"தவறான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. 'தொழுநோயை எந்த நிலையிலும் குணப்படுத்தலாம்' என்ற விளம்பரம் தவறானது. விரல்கள் அழுகிய பின் யாரை எப்படிக் குணப்படுத்துவது? சர்ஜரி செய்து கொண்டால் அந்த இடம் மரத்துப் போகும் என்பதை சர்ஜன்களே உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்வதில்லை.

சாதனை; வேதனை!

உரையாற்றித் திரும்பியதும் என் மனைவியிடம் எனக்கு அங்கு கிடைத்த மரியாதையைச் சொல்லி மகிழ்வேன். ஒருநாள் அவள் அமைதியாகச் சொன்னாள். 'எல்லாம் சரி. இவ்வளவு புகழ் வருகிறது. சந்தோஷம். நீங்கள் தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்கு ஏதேனும் செய்யக் கூடாதா?' அந்த வார்த்தைகள் என்னை சொடேர் என்று தாக்கின."

எனக்கும் விரல்களில் பல ஆபரேஷன்கள் நடந்தன. இன்றும் என் அந்த விரல்களுக்கு உணர்வு கிடையாது. ஏதோ நான் நன்றாகப் படித்திருக்கிறேன். நல்ல நிலையில் இருக்கிறேன். விரல்களைக் கொண்டு உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய நிலையில் இல்லை. ஏதோ பேனா பிடித்து கையெழுத்திட்டால் போதும். அல்லது சாக்பீஸ் பிடித்து கரும்பலகையில் எழுதினால் போதும். ஆனால் இந்த வசதி எத்தனை பேருக்கு உண்டு? கைகளை வைத்து உழைக்க வேண்டிய நோயாளிகளின் நிலை என்ன?

"தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஐந்து சதவீதம் கூட தொழுநோயால் பாதிக்கப்படவில்லை. ஆனால் பிச்சைக்காரர்களில் அறுபது சதவீதம் பேர் தொழுநோயாளிகளாய் இருக்கிறார்கள்.

என்ன காரணம்? தொழுநோய் தொண்டு நிறுவனங்கள் என்ற பெயரில் இயங்கி வரும் பல அமைப்புகள் உலகெங்கும் நிதி திரட்டுகின்றன. தொழுநோயாளிகளைப் படம்பிடித்து நோட்டீஸ் அடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி லட்சலட்சமாய் நன்கொடை வசூலிக்கின்றன. ஆனால் அவை சரியான முறையில், யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு- இந்த அப்பாவி நோயாளிகளுக்குப் போய்ச் சேர்வதில்லை. நெல்லுக்குப் போக வேண்டிய நீர் புல்லுக்குப் போகிறது.

"எளியவனை வலியவன் விழுங்குவது நோயாளிகளுக்கு இடையேயும் நடைபெறுகிறது. எனக்குத் தெரிந்து நோய் மிக முற்றிய நிலையில் இருக்கும் நோயாளிகளை சில வலுவான நோயாளிகள் அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவித் தொகை மறுக்கப்படுகிறது.

"இப்படி நான் கண்டுபிடித்த சில கோளாறுகளை வெளிப்படுத்தியபோது எனக்கு மிரட்டல்கள் வந்தன. வந்து கொண்டும் இருக்கின்றன. நான் கவலைப்படவில்லை. என்னுடைய ஒரே யோசனை :

"நன்கொடை தருபவர்களுக்கும், அதனால் நன்மையடையப் போகிறவர்களுக்கும் இடையே தரகர்கள் கூடாது. அது அமைப்போ, அல்லது தனி ஆட்களோ இடைத் தரகர்கள், ஏஜென்ஸிகள் கூடாது. தருபவர்கள், பெறுபவர்கள் நேருக்கு நேர் சந்திக்க வேண்டும். நன்கொடையாளர்கள் தாங்கள் கொடுக்கும் பணமோ இதர பொருட்களோ உண்மையிலேயே துன்பமுறும் தொழு நோயாளிகளிடம் போய்ச் சேருகிறதா என்று நேரடியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு நான் எந்தவிதத்தில் வேண்டுமானாலும் உதவத் தயார்!"

பரமபிதாவை நம்பும் பேராசிரியர் மேக்ஸு"க்கு பரமஹம்சரின் சிந்தனைகளும் பிடிக்கின்றன. பல்கலைக் கழகத்தில் இவரது அலுவலக அறையில் இவர் இருக்கைக்குப் பின்னணியை ராமகிருஷ்ண பரமஹம்சர் படம் ஒன்று அழகு செய்து கொண்டிருக்கிறது. "மெழுகுவர்த்தியாக இருந்தால் என்ன? ஊதுவத்தியாக இருந்தால்தான் என்ன? மனிதநேயம் வேண்டும். கருணை உள்ளம் வேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகின்ற மனம் வேண்டும்."

சந்திப்பு : **ராணிமைந்தன்**

சமூக ஒற்றுமைக்குக் காமராஜர் வழி காட்டுகிறார்!


இப்போது காமராஜர் மாவட்டத்திலுள்ள ஏழாயிரம் பண்ணை என்ற சிற்றூர், காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது ராமநாதபுரம் (பிரிக்கப்படாத) மாவட்டத்தில் இருந்தது. அந்தச் சிற்றூரில் நாடார் மற்றும் தேவர் இன மக்கள் சம அளவில் வசித்து வந்தனர்.



நாடார்கள் தாங்கள் நடத்தி வந்த உயர்நிலைப் பள்ளியை விஸ்தரிக்கும் நோக்கத்தில், பள்ளியின் பக்கத்தில் இருந்த புறம் போக்கு நிலத்தைத் தங்களுக்கு ஆர்ஜிதப்படுத்தித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் தேவர் இனத்தைச் சேர்ந்தவர்களும் அந்த இடத்தில் ஓர் ஆஸ்பத்திரி கட்ட வேண்டும் என்றும், அதற்காகத் தங்களுக்கு அந்த நிலத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். காமராஜரின் நெருங்கிய நண்பர் மாரியப்ப நாடார் அந்த நிலத்தைப் பள்ளிக்குத் தரச் சொல்லி காமராஜரிடம் பல முறை நேரிலும் எடுத்துச் சொன்னார்.

அரசிடமிருந்து உத்தரவு வந்தது. சம்பந்தப்பட்ட புறம்போக்கு நிலம், சம பங்காகப் பிரிக்கப்பட்டு, பள்ளிக் கூடத்தின் அருகிலுள்ள பகுதியை, பள்ளியின் வளர்ச்சிக்காகச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும், இன்னொரு பகுதியில் ஆஸ்பத்திரி கட்டிக் கொள்ளலாம் என்றும் உத்தரவில் சொல்லப்பட்டிருந்தது. பொதுமக்களுக்குச் செய்யப்படும் நல்ல காரியத்தில் கூட ஒரு தீமை முளைத்துவிட இடம் தரக்கூடாது என்பதில் அத்தனை உறுதியாக இருந்தார் காமராஜர். வேண்டியவர்-வேண்டாதவர் என்ற கண்ணோட்டமின்றி, சமூகத்தில் சகல தரப்பினரும் ஒற்றுமை உணர்வோடு வாழ வேண்டும் என்பதில் அவருக்கிருந்த அக்கறை அவர் எடுத்த முடிவில் தெரிந்தது. அதற்கு சாட்சியாக ஏழாயிரம் பண்ணையின், அந்தப் புறம்போக்குத் திடலில், பள்ளியும், ஆஸ்பத்திரியும் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

– 'சின்னக்குத்தூசி' எழுதிய 'மறக்க முடியாத மாபெருந்தலைவர்' என்ற புத்தகத்திலிருந்து: ஆரெஸ்வி.





1997 ஜூன் 15
ஈசுவர ஆனி 1
மலர் : 55
இதழ் : 46

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ரஜினியின் கருத்து; டோனியின் எதிரொலி!

'சிறந்த நடிகர் விருதைப் பெற்றுக் கொண்டு உரையாற்றிய ரஜினிகாந்த் சொன்னார் :


"ஜாதியையும் அதை வைத்துக்கொண்டு அரசியல் பண்ணும் தலைவர்களையும் நம்ப வேண்டாம். அதெல்லாம் பயன் தராது. நாம் செய்ய வேண்டியவை இரண்டே காரியங்கள்தான். அப்பா, அம்மாவைக் கருத்துடன் காப்பாற்ற வேண்டும்; கடுமையாக உழைக்க வேண்டும். உழைப்பு மட்டுமே நம்மைக் காப்பாற்றக் கூடியது."

தமிழக முதல்வர் அமர்ந்திருந்த மேடையிலேயே இவ்வாறு துணிந்து பேசினார் ரஜினி. இதே கருத்து அக்கரைச் சீமையிலிருந்து அண்மையில் எதிரொலித்துள்ளது.

பேசியவர் : பிரிட்டனின் புத்தம் புது பிரதமர் டோனி பிளேர்.

டோனி பிளேர், லேபர் கட்சிக்காரர் என்பதை அறிவோம். லேபர் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் சோஷலிஸம் சார்ந்தவை. மக்கள் பாதுகாப்பும் பராமரிப்பும் அரசாங்கக் கடமைகள் என்பது அக்கட்சியின் கோட்பாடாகவே நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது.

இப்போது 'அதெல்லாம் பழங்கதை' என்கிறார் டோனி பிளேர். 'ஒரு நாட்டின் மக்கள், அளவுக்கு மீறி அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது சரியில்லை...' என்கிறார். 'அதை இத்தனை காலமாக அனுமதித்ததால், இலவச உதவிகளும் மானியங்களும் தந்து நாம் ஒரு புதிய 'வேலையில்லா பிரிவினரை' உருவாக்கி விட்டோம்! இவர்கள் வேலை தேடி கிடைக்காமல் அல்லல்படுகிறவர்கள் அல்ல... வேலையற்றவர்கள் என்ற காரணத்தால் அரசாங்கத்தின் உதவியும் ஆதரவும் பெற்றுப்



பழகி அப்படியே சோம்பேறிகளாக மாறியவர்கள்! இந்த அநாகரிக நிலை நீடிக்கவோ இந்த 'வெட்டி'ப் பிரிவினரின் எண்ணிக்கை அதிகரிக்கவோ நாம் இனி அனுமதிக்கவே முடியாது...' மிகத் தீவிரமாகப் பேசியுள்ளார் பிரிட்டிஷ் பிரதமர்.


உழைப்பில் ஆர்வமும் நம்பிக்கையும் உடைய ஒரு 'புதிய லேபர்' கொள்கை உருவாகும் என்ற உத்தரவாதமும் அளித்துள்ளார் பிளேர். 'மானியங்களும் இலவசங்களும் தருவது நிறுத்தப்படும். ஆனால், அரசாங்கம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும். மக்கள் அந்த வேலைகளை ஏற்றுச் செய்து சுயமாக சம்பாதிக்க வேண்டும். அப்படி ஏற்காதவர்களுக்கு இரக்கப்பட்டு எந்தச் சலுகையும் தரப்படமாட்டாது.'

சோஷலிஸ கொள்கையைக் கடைப்பிடித்து வந்த ஒரு கட்சியின் தலைவர், 'காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப அக் கொள்கைகளைத் திருத்த வேண்டும்; திருத்தப் போகிறோம்' என வெளிப்படையாக ஒப்புக் கொண்டு செயல்படுவதை நாம் வியந்து பாராட்டலாம்.

அதே நேரத்தில், பிரிட்டிஷ் பிரதமர் கூறியுள்ளவை இந்தியாவுக்கும் நூற்றுக்கு நூறு பொருந்தும் என்பதையும் நாம் உணர வேண்டும்.

ஜனநாயக சோஷலிஸம் என்கிற பெயரில் நமது அரசாங்கம் பல ஆண்டுகளாகச் சலுகைகளையும் மானியங்களையும் இலவசங்களையும் மானாவாரியாக வழங்கி வந்தது. அடுத்தடுத்து வந்த அரசுகள், நேரு காலத்துச் சலுகைகளைக் குறைக்கத் துணிவின்றித் தவித்ததைக் கூடப் புரிந்து கொள்ளலாம்... ஆனால், அடுத்த தேர்தல் வெற்றிமீது கண்கொண்டு அச் சலுகைகளை மேன்மேலும் அதிகரித்ததைத்தான் மன்னிக்கவே முடியாது.

பல்பொடி, செருப்பு என்று ஆரம்பித்து, பள்ளிச் சீருடை - பகலுணவு வரை கணக்கு வழக்கில்லாத இலவசத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அத்தனையிலும் பொதுப்பணச் சுரண்டல் நடந்திருக்கிறது. இது ஒரு தீமை. இத்திட்டங்களுக்குப் பழகிப் போன மக்கள், தங்கள் குழந்தைகளுக்குச் சோறு போடுவதும் எழுத்தறிவிப்பதும் மேலும் பல இலவசங்களைத் தங்களுக்கு



வழங்குவதும் அரசின் கடமையே என்று எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். இது இன்னொரு கொடுமை!

இப்போது நிதி நிலைமையும் பொருளாதாரமும் சிம்ம சொப்பனமாக பயமுறுத்துகிற நேரத்தில், மத்திய அரசு, மானியங்களைக் குறைக்கவும் படிப்படியாக நீக்கவும் முடிவு செய்திருக்கிறது. ஆனால், இதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம், சில கூட்டணி கட்சிகளின் எதிர்ப்பு என்று தடைகள் இருக்கவே செய்கின்றன.

இந்தத் தடைகளை மீறி அரசு தைரியம் கொள்வது ஒருபுறமிருக்க, புதிய இலவசத் திட்டங்களையோ மானியங்களையோ அறிவிப்பதை மத்திய, மாநில அரசுகள் நிறுத்த வேண்டும்.

"உழைக்கக்கூடிய பருவத்தில் உள்ளவர்களைப் பயனற்றவர்களாக மாற்றும் திட்டங்களைத் தூக்கி எறியத்தான் வேண்டும். உழைக்காமல் அண்டி வாழலாம் என்கிற ஒரு நிலை இனி பிரிட்டனில் இருக்கவே இருக்காது" என்கிறார் டோனி பிளேர் (ரஜினியின் எதிரொலி!)

நம் நாட்டிலும் இந்த உழைப்பு கலாசாரத்துக்கு முக்கியத்துவம் தரவேண்டிய நிலையில் உள்ளார்கள் தலைவர்கள்.

தனிமனித உழைப்புதான் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு அஸ்திவாரம். மனிதவளம் மிக்க இந்தியாவின் முகத்தையே மாற்றி அமைக்கக்கூடியது மனித உழைப்பு. இதற்கேற்ப கல்வித் திட்டத்தை மாற்ற வேண்டும். தொழில் கொள்கையை உருவாக்க வேண்டும்.

உணர்வுகளைத் தூண்டி அரசியல் பண்ணும் தலைவர்கள், இனியேனும் உழைப்புக்குக் குரல் கொடுத்து உத்வேகமூட்டட்டும்.

'வாருங்கள், சேர்ந்து உழைப்போம், புதிய பாரதம் படைப்போம்' என்று நாலு தலைவர்கள் நல்ல திட்டங்களோடு முன் வரட்டும்... மக்கள் சிலிர்ப்புடன் ஒத்துழைக்காமலா போய்விடுவார்கள்?

'அப்படியெல்லாம் அறைகூவல் விடுத்தால் போணியாகுமா...?' என்று தயங்க வேண்டாம். இந்தியத் தலைவர்கள், டோனி பிளேரைக் கண்டு தைரியம் கொள்ளாவிட்டாலும் ரஜினி சொன்னதைக் கேட்டாவது செயல்படலாமே!

‘பொதுத் துறை நிறுவனங்களில் ஏகப்பட்ட நஷ்டம். அலட்சியப் போக்கு; அநாவசிய செலவுகளால் அவை சீரழி கின்றன' என்று ஆண்டுதோறும் சி.ஏ.ஜி. (Controller & Auditor General) அறிக்கை கொடுப்பதும் நாம் அதைப் படித்துவிட்டு அதிர்வதும் தவறாமல் நடந்து வருகின்றன.

நஷ்டமென்றால் அப்படியில்லை! 31.3.96 கணக்குப்படி இந்தியாவில் மொத்தம் 235 பொதுத்துறை நிறுவனங்கள். அவற்றில் முதலீடாகியுள்ள மொத்த தொகை 1, 78, 000 கோடி ரூபாய்! 134 நிறுவனங்கள் லாபம் கண்டுள்ளன. லாபம் 14,704 கோடி. 101 நிறுவனங்களில் நஷ்டம்! இவற்றின் மொத்த நஷ்டம் 4826 கோடி ரூபாய்! ஆக நிகர லாபம் என்று பார்த்தால் 9878 கோடி ரூபாய். 1,78,000 கோடி ரூபாய் முதலீட்டில் இது 5.5 சத விகிதமே!

இது கட்டுபடியாகாது! எக்கச்சக்கமான தொகை பொதுத்துறை நிறுவனங்ககளில் முடங்கிப் போய் வீணாகிறது என்று மத்திய அரசு விழிப்படைந்தது. மன்மோகன்சிங் நிதியமைச்சராக இருந்தபோதே பல பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்று ஐயாயிரம் கோடி ரூபாய் வருவாய் பெற திட்டமிடப்பட்டது. சிங்கின் ஆசையில் ஒரு சதவிகிதமே நிறைவேறிற்று! அப்போது பங்கு மார்க்கெட் படுமோசமாக இருந்ததால் ஐம்பது கோடி ரூபாய்க்கான பங்குகள் மட்டுமே விலைபோயின.

அரசுதரப்பு முதலீடுகளைக் குறைக்க disinvestment commission என ஒன்று நிறுவப் பட்டது. திட்ட கமிஷன் உறுப்பினர் ஜி.வி. ராமகிருஷ்ணா, அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்தக் கமிஷன் அறிக்கை தற்போது வெளிவந்து தலைப்புச் செய்தியாகியிருக்கிறது.

14 நிறுவனங்களில் உள்ள அரசுப் பங்குகளைத் தனியாருக்கு விற்பனை செய்ய இந்த அறிக்கை சிபாரிசு செய்கிறது. இந்தப் பதினான்கும் லாபம் ஈட்டும் நிறுவனங்கள். பெட்ரோலிய நிறுவனங்களான ஆயில் இந்தியா; ஓ.என்.ஜி.ஸி, போன்றவற்றில் மட்டும் கை வைக்க வேண்டாம் என்றும் சிபாரிசு செய்கிறது,இவ்வறிக்கை. பெட்ரோல் விலை உயர்வு குறித்து அரசு முடிவெடுக்கும் வரை இதைச் செய்வது உசிதமல்ல என்கிறது.

இந்தக் கமிஷன் அறிக்கை ஆணித்தரமாக அமைவதற்குப் பதிலாகப் பிடிகொடுக்காமல் பேசுகிறது என்பது பொதுவான கருத்து.

இதற்கிடையே, பி.எச்.ஈ.எல், ஓ.என். ஜி.ஸி முதலான ஒன்பது நிறுவனங்களுக்கு 'நவரத்னங்கள்' என்று 'பட்டம் கட்டி' அவற்றை மேம்படுத்த ஆவன செய்வோம் எனப் பேசி

நவரத்தினங்களைப் பெருக்குமா அரசு?



யிருக்கிறார் தொழிலமைச்சர் மாறன். அவர் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துவோம்.

ஆனால், அதே சமயம் இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். இந்த ஆண்டு பட்ஜெட்டிலும், பொதுத்துறை நிறுவனப் பங்குகள் விற்பனை மூலம் ஐயாயிரம் கோடி ரூபாய் வருவாய் பெறத் திட்டமிட்டிருக்கிறார் நிதியமைச்சர் சிதம்பரம். இதில் நினைத்த அளவு வெற்றி பெற முடியாது என்பதைக் கடந்தகால அனுபவத்தின் அடிப்படையிலாவது உணர வேண்டும்.

பொதுத்துறை நிறுவனப் பங்குகளை விற்பனைக்குக் கொண்டு வந்த முதல் இரு முயற்சிகளிலும் நிறைய குறைபாடுகள். அவற்றை நீக்குவதற்குத்தான் தற்போதைய கமிஷனை அரசு அமைத்தது.

ஆனால் இந்தக் கமிஷனின் சிபாரிசுகளைப் பார்க்கும் போது அரசு இது விஷயமாக விரைவில் ஒரு முடிவு எடுக்காது என்றே தோன்றுகிறது.

நவரத்னங்களாகக் கொண்டாடப்படும் பொதுத்துறை நிறுவனங்களில் அரசாங்கத் தலையீடும் சிவப்பு நாடாவும் இல்லாமல் செயல்பட்டால் உலக அளவில் பெரிய நிறுவனங்களாக வரமுடியும். அரசு விலகிநின்று வளர்ச்சிக்கு உதவினால் நவரத்தினங்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகும்.

- வி. கோபாலன்



அருள்வாக்கு

எனக்கு அப்போது இளவயஸு. ப்ரொஃபஸர் ராமமூர்த்தி என்று ஒருத்தர் இருந்தார். ராமமூர்த்தி ஸாண்டோ என்றே சொல்வார்கள். தெலுங்கர். ஸர்க்கஸ் கம்பெனி நடத்தி வந்தார். நடத்தினது மட்டுமில்லை, இவரே ஸாண்டோவானதால் ஆச்சரியமான feats பண்ணிக் காட்டுவார். ஒன்று சொல்கிறேன் : தன் இடுப்பைச் சுற்றிப் பக்கத்துக்கு ஒன்றாக ஒரு Ford காரைக் கயிற்றால் கட்டிக்கொண்டு, இரண்டின் என்ஜினையும் ஸ்டார்ட் பண்ணிவிடுவார். அப்படியே இரண்டுமாக இவரை நசுக்கித் தொகையல் (துவையல்) பண்ணிவிடுமோ என்று ஜனங்கள் பிரமித்துப் பார்ப்பார்களாம். மநுஷ்யரானால் கொஞ்சங் கூட அலட்டிக் கொள்ளாமல், அந்த இரண்டு காரையும் இரண்டு உள்ளங்கையாலேயே மரித்துக் கொண்டு அவை ஓட முடியாதபடி நிறுத்தி வைத்திருப்பாராம். இவருடைய கம்பெனி கும்பகோணத்தில் 'காம்ப்' பண்ணியிருந்தபோது நான் வந்து ஸர்க்கஸ் பார்க்க வேண்டுமென்று ரொம்பவும் கேட்டுக் கொண்டார். மடத்தில் அப்படி ஸம்பிரதாயமில்லையென்று சொன்னதும், மடத்துக்குப் பின்னாடி விஸ்தாரமாக பூமி உண்டு. அங்கே தன் கோஷ்டியில் சில பேரோடு வந்து சில 'ஸர்க்கஸ் அயிட்ட'ங்களைப் பண்ணிக் காட்டினார். இப்படியும் ஒரு தேஹ பலமுண்டா என்று ஆச்சரியமாயிருந்தது. அவர் கதை எதற்குச் சொல்கிறேனென்றால் இப்படிப்பட்ட பலிஷ்டர் சுத்த வெஜிடேரியனாகவே இருந்தவர் என்பதற்காகத்தான். மஹா பலிஷ்டரான ஆஞ்ஜநேயரே சாகபோஜனியான வானரம்தானே?

சாக போஜனத்துக்குப் பலம் இல்லாமலில்லை என்பதற்கு இன்னொன்றும் சொல்கிறேன். சிங்கம், புலி மாதிரி ரொம்பவும் பலமுள்ள எந்த 'கார்னிவோரஸ் அனிமலை' (மாம்ஸம் சாப்பிடுகிற மிருகத்தை) எடுத்துக் கொண்டாலும் அது ஆஹாரமாகச் சாப்பிடுகிற பிராணி எப்படியிருக்கிறது என்று பாருங்கள். இது (சாப்பிடப்படும் பிராணி) சாக பக்ஷிணியாகத் தானிருக்கும். மாம்ஸ பக்ஷிணிகளான சிங்கமும் புலியும் சாக பக்ஷிணிகளான ஆடு, மாடு போன்றவற்றைத்தான் தின்னும்; இன்னொரு மாம்ஸ பக்ஷிணியைத் தின்னாது. சிங்கமும் புலியும் ஒன்றையொன்று அடித்துக் கொண்டு சாகலாம்; ஆனாலும் இவற்றில் ஒன்றின் மாம்ஸத்தை இன்னொன்று தின்னாது. இதிலிருந்து மாம்ஸ பக்ஷிணிகளின் பலத்துக்கும் (அவை தின்கிற சாகபக்ஷிணிகளின் த்வாரா) காரணமாயிருப்பது புல்லும், தான்யமும், மட்டையுந்தான் என்று தெரிகிறதல்லவா?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



• விநாயகர் சன்னதியில்



• வாசு

"அப்பா (டி.டி.கே) இருந்தவரையில், புதிய தொழில்களைத் துவக்குவதில் நாங்கள் கொஞ்சம் அடக்கி வாசித்தோம் என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம், அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான். அவர் மறைந்த பின்னர் டி.டி.கே. குழு கம்பெனிகள், சிறகை விரித்துப் பறந்தன. பல்லாவரம் பகுதியில் பல தொழிலகங்களைத் திறந்த பெருமை எங்களுக்குண்டு" என்று சொல்கிறார் டி.டி.கே. நிறுவனங்களின் இயக்குனராகவும் பார்க் ஷெராட்டன் நிர்வாகக் குழுவின் தலைவராகவும் இருக்கும் டி.டி. வாசு.

"கல்லூரி முடிந்த பின் இரண்டு வருட காலம் இந்தியன் எக்ஸ்பிரஸில் உதவி ஆசிரியராக இருந்தேன். அப்புறம் எங்கள் குடும்ப தொழிலகங்களில் நிர்வாகியாகச் சேர்ந்தேன். ஒரு சராசரி இளைஞனுக்குள்ள கோபமும் ஆவேசமும் எனக்கும் இருந்தன. அந்தக் காலகட்டத்தில் கோபத்தை அடக்குவதைக் காட்டிலும், வெளிப்படுத்தி விடுவதே சிறந்தது என்று ஓர் எண்ண ஓட்டம் இருந்தது. யாராவது தப்புச் செய்து விட்டாலோ, அல்லது ஏமாற்ற நினைத்தாலோ, அந்த ஆளைக் கூப்பிட்டு உரத்த குரலில் செமை டோஸ் விட்டு விடுவேன்.

"இந்தச் சூழ்நிலையில் என் மனதையும், உடலையும் சமநிலைப்படுத்த கைகொடுத்தது கர்நாடக இசைதான். எங்கள் வீட்டிற்கு வந்து கச்சேரி செய்யாத பெரிய வித்வான்களே கிடையாது. அவர்களின் கச்சேரியைக் கேட்டுக் கேட்டு, இசை என் ஜீவனோடு ஒன்றிக் கலந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். கோபத்தில் எவரெஸ்ட் உயரத்துக்குப் பறந்து கொண்டிருக்கும் மனசை, இழுத்துக் கீழே கொண்டு வரும் அசாத்திய வலிமை நம்முடைய ராகங்களுக்கு உண்டு!" என்று கூறும் வாசு,

சவால் பள்ளத்தாக்கு :

"கை கொடுத்து உதவுவது கர்நாடக இசைதான்!"

பாட்டை ரசிக்க ஒரு புத்தகம்

சித்ரவீணை ரவிகிரண் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்– ஆங்கிலத்தில். Appreciating Carnatic Music.

கர்நாடக இசையின் நுணுக்கமான அழகுகளை எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கும் பகீர்தல் முயற்சி.

அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்.

சான்று: முதல் பதிப்பில் ஐம்பது சதவிகிதம் மளமளவென்று விற்றுப் போய்விட்டது!



• ரவிகிரண்

மிக நேர்த்தியாக எழுதப்பட்டிருக்கும் இந்த நூலை வெளியிட்டிருப்பவர்கள் 'கணேஷ் அண்ட் கோ'.

''இப்படியொரு புத்தகம் எழுதச் செய்ய வேண்டும் என்பது பதிப்பகத்தாரின் யோசனையா?''

''இல்லை! இது ரவிகிரணின் யோசனைதான்'' என்கிறார் கணேஷ் அண்ட் கோவைச் சேர்ந்த சீனிவாசமூர்த்தி.

''அச்சிடும் முன், சில இளம், ஆரம்பநிலை ரசிகர்களை அணுகிப் படிக்கச் செய்து, அவர்கள் கருத்துக்கேற்ப சில மாற்றங்கள் செய்து வெளியிட்டோம்.''



• ஆர்.கே.லக்ஷ்மண் வரைந்த அட்டைப்படம்

''புத்தகம் படித்து இசையை ரசிக்கக் கற்றுக் கொள்ள முடியுமா என்ன...? செவி வழிப் பழக்கமாகத் தானே ரசனை உருவாகும்...?''

''உண்மை, ஆனால், இந்தப் புத்தகத்தின் நோக்கம் புதிய ரசிகர்களை உருவாக்குவது அல்ல... ஏற்கெனவே கர்னாடக இசையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அல்லது அங்கங்கே கேட்க நேர்ந்து, அதை மேலும் தெரிந்து கொள்ள, ரசிக்க ஆசைப்படுகிறவர்களுக்கான படைப்பு...''

ஆசைப்படுபவர்கள் 125ரூபாய் செலவழிக்கத் தயாராய் இருக்க வேண்டும்.

தமது தினசரி வாழ்க்கையில் எப்படிப் புத்துணர்ச்சியோடு செயல்படுகிறார் என்பதையும் விளக்குகிறார்.

"எங்கள் வீடு-கம்-ஆபீஸ் வளாகத்துக்குள், 90 வருட அரச மரம் ஒன்று இருந்தது. அதையொட்டி வேப்பமரமும் உண்டு. என் பாட்டி மிகவும் கடவுள் பக்தி உள்ளவர். அவர் விருப்பத்தின்பேரில் அரச மரத்தின் அடியில் பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்தோம். இன்று அது பல சன்னதிகளுடன் கூடிய பெரிய கோயிலாகவே வளர்ந்து கொண்டிருக்கிறது. காலையில் என்ன வேலை இருந்தாலும், ஒரு மணி நேரம் அந்தப் பிள்ளையார் சன்னதியில் நின்று ஆதித்ய ஹ்ருதயம், ஆஞ்சநேயர் ஸ்தோத்திரம், சுதர்சன மந்திரம் ஆகியவற்றை வாய் விட்டுச் சொல்வேன். அதனால் நாள் முழுவதும் தெளிவோடு இருக்க முடிகிறது. பரபரப்பை அடக்கிவிட்டு, நிம்மதியாகச் சிந்தித்துச் செயல்பட முடிகிறது!"

"தொழிலதிபர்கள் என்றாலே நிதி நெருக்கடி, தொழிலாளர் பிரச்னை என்று பலவித பிரச்னைகள் பயமுறுத்துமே!"

"இப்போதெல்லாம், அந்தந்தப் பிரச்னைகளைத் தீர்க்க சரியான ஆட்கள் இருக்கிறார்கள். கொள்கைரீதியான ஒட்டுமொத்த முடிவுகளை எடுக்க வேண்டிய பொறுப்புகள்தான் எனக்கு!" என்று சொல்லிச் சிரிக்கும் வாசு, வாரத்திற்கு மூன்று நாட்கள் மாலை வேளைகளில் டென்னிஸ் விளையாடுகிறார். இன்னொரு பக்கம் சமூக சேவை. மேற்கு மாம்பலம் பப்ளிக் ஹெல்த் சென்டர் மற்றும் பாலமந்திரின் செயல்பாடுகளில் இவருக்கும் பங்கு உண்டு.

இவை தவிர, மியூசிக் அகாதமியின் செயலாளர் என்பதால் வருடத்திற்கு ஒரு மாதம் ரொம்ப பிஸியாக இருக்க வேண்டும். "ஆனால் அப்போதும் கூட, காலை வேளை பூஜை, மாலை டென்னிஸ் ஆகியவற்றை விடுவதில்லை ஏனென்றால், மனதையும், உடலையும், ஒரு புத்துணர்ச்சியோடு வைத்துக் கொள்ள அவைதான் உதவுகின்றன!" என்று கூறுகிறார்.

கடைசியாக, "இப்படிச் சுறுசுறுப்பாக செயல்பட்டுக் கொண்டிருப்பதிலேயே சில சமயம் நிம்மதி கிடைக்கிறது. நம்மால் நாலு பேர் பயன் அடைகிறார்கள் என்பது போனஸாகக் கிடைக்கும் சந்தோஷமல்லவா!" என்கிறார்.

சந்திப்பு : ஸ்ரீநிவாஸன்

GURUDEV

சுராணா

ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

(முந்தைய பெயர் S.U.S. ஃபைனான்ஷியர்ஸ் (இந்தியா) லிமிடெட்)

Group of Surana

1971 முதல்

இரும்பு போன்ற உறுதி, தங்கம் போன்ற நாணயம் கொண்ட குழுமத்தின் ஒரு அங்கம்.

சுராணா அளிக்கும் முதலீடு திட்டங்கள்

ஆண்டுக்கு வட்டி விகிதம் 15%

CARE மதிப்பீட்டாளர்களால் "போதுமான பாதுகாப்பு" சான்றிதழ் பெற்றது. (BBB+)

சுராணா நிறுவனங்கள் 1971 முதல் இயங்கி வருபவை. 25 ஆண்டு அனுபவம் பெற்றவை.

சுராணா நிறுவனங்கள் இரும்பு உற்பத்தி, இரும்பு வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளன. இக்குழுமம் தென்னகத்தில் இரும்பு வியாபாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

குழுமத்தின் மொத்த விற்பனை அளவு ரூ.125 கோடி.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட் (SFCIL), ஹயர் பர்ச்சேஸ், லீசிங், பில் டிஸ்கௌண்டிங், ஃபாரின் எக்ஸ்சேஞ், பப்ளிக் டிபாசிட் போன்ற பல வகைப்பட்ட நிதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது.

SCHEME 1 - FIXED DEPOSITS

Period (Months)	Rate of Interest per annum
12	
24	15.00% (Monthly)
36	15.19% (Quarterly)*
48	15.48% (Half-yearly)*
60	

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Minimum Amount of Deposit for Monthly Interest is Rs.10,000/-
* Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 2 - GURUDEV CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Minimum Amount (Rs.)	Maturity Value (Rs.)	Maturity Value for Rs. 1,000/-	Annual Yield% (Simple Interest)
12	3,000	3,482	1,161	16.06
24	3,000	4,042	1,347	17.36
36	3,000	4,692	1,564	18.80
48	3,000	5,446	1,815	20.38
60	3,000	6,321-	2,107	22.14

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Addition in Multiples of Rs.1,000/-
3. Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 3 - SURYODAY CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Principal (Rs.)	Maturity Value (Rs.)	Annual Yield% (Simple Interest)
12	862	1,000	16.01
24	742	1,000	17.38
36	639	1,000	18.83
48	551	1,000	20.37
60	474	1,000	22.19

Interest at 15% Compounded at Monthly rests.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

குருப் ஆப் சுராணா

நெ. 16, ஒயிட்ஸ் சாலை, இரண்டாவது மாடி,
சென்னை - 600 014.

போன் : 8543145 / 8522684 / 8525596 / 8525396 / 8525694

ஃபாக்ஸ் : (044) - 8520587.

கிளைகள் : திருச்சி போன்: 461821, தென்காசி போன்: 77454, [illegible] போன்: 85423, 85536, [illegible] போன்: 228143, [illegible] போன்: 374617, கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் உள்ளன.

29.9.96 தேதியிட்ட மக்கள் குரல், Trinity Mirror நாளிதழ்களில் வெளியான சட்டப்பூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி

ADWAVE/SFC/5420

11:29

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்

அந்த டீவி நிருபர் மீது தாரென்ஸனுக்கு ஆத்திரம் வந்தது. என்ன சொல்கிறான் இந்த ஆள்? பொது மக்கள் சம்பந்தப்பட்ட விஷயம் என்கிறான். உண்மை தெரிய வேண்டும் என்கிறான். தங்களுக்கு உரிமை உண்டு என்கிறான். மற்றவர்களின் சொந்தப் பிரச்னைகளில் மூக்கை நுழைக்க இவர்களுக்கு என்ன உரிமை? இது அநாகரிகம். ஏற்கெனவே வெந்திருந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகிற காரியம்.


தாரென்ஸன் இவ்வாறெல்லாம் எண்ணுவதை அவன் பொருட்படுத்தாமல், மறுபடியும் பேஜைக் கூர்மையாக நோக்கி, "சொல்லுங்கள். செனேட்டரின் மனைவி லாரா குடித்திருந்தாளா இல்லையா என்று பரிசோதனை செய்யும்படி போலீசாரைக் கேட்டீர்களா?" என்றான்.

பேஜ் பரிதாபமான குரலில், "என்ன செய்ய வேண்டுமோ அதைப் போலீசார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எதற்காக இதையெல்லாம் கேட்டு என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்? நான் என்ன நிலைமையில் இருக்கிறேனென்று உங்களுக்குத் தெரியவில்லையா?" என்றாள். ஆலிஸனைத் தவிர வேறு எதைப் பற்றியும் அவள் புத்தி செல்லவில்லை.

"உண்மை தெரியவேண்டுமென்றுதான் நான் கேட்டேன். நல்லது. உங்கள் பெண்ணுக்கு நல்லபடி குணமாகும் என்று நம்புகிறேன்," என்று

சொல்லிவிட்டு ஒரு வழியாய் நகர்ந்தவன், வேறு யாரிடமோ சென்று விசாரிக்கத் தொடங்கினான். அதன் பிறகும் கூட அவனும் அவனுடைய கேமரா மேனும் ஒரு மணி நேரத்துக்கு மேலாக வெயிட்டிங் அறையில் உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் மறுபடி பேஜிடம் வரவில்லை.

எனினும் தாரென்ஸனுக்கு அவனிடம் ஏற்பட்ட கோபம்



மூலம் : **டேனியல் ஸ்டீல்** *தமிழில் :* **ரா.கி. ரங்கராஜன்**

தணியவில்லை. இந்த மாதிரியான நேரத்தில் பேஜைத் தொந்தரவு செய்த நிருபரை அவன் மன்னிக்கத் தயாராயில்லை. அவன் கேள்வி கேட்ட தோரணையை நினைக்க நினைக்க எரிச்சல் ஏற்பட்டது.

டீவி நிருபர் போன பிறகும் கூட இருவரும் மனம் கலங்கி நின்றிருந்தார்கள். அதனால் ஒரு பையன் தங்கள் முன்னால் வந்து நிற்பதைப் பேஜ் முதலில் கவனிக்கவில்லை. பிறகுதான் பார்த்தாள். அவனுக்குப் பதினாறு பதினேழு வயது இருக்கும். சிவப்பு முடியுடன் இருந்தான். பேஜ் அவனை இதற்கு முன் பார்த்ததேயில்லை. தாரென்ஸனுக்கு மட்டும் இவனை எங்கோ பார்த்திருக்கிற மாதிரி தோன்றியது.

"நீங்கள் மிஸ்டர் தாரென்ஸன்தானே?" என்று அவன் தயக்கத்துடன் கேட்டான். சற்று பிரமை பிடித்த மாதிரி இருந்தான் அவன். எனினும்



10

தாரென்ஸனைப் பார்த்தபோது அவன் கண்கள் தீர்க்கமாக இருந்தன.

"என் பெயர் ஜேம்ஸ். அந்த... அந்த விபத்து நடந்தபோது... க்ளோவுடன் இருந்தேன்..." என்ற வார்த்தையைச் சொல்கையில் அவன் உதடுகள் நடுங்கின.

"என்ன...? நீ... நீ யார்?" என்று திடுக்கிட்டுக் கேட்டவனாக அவன் முகத்தைப் பார்த்தான் தாரென்ஸன். உடல்நிலை சரியில்லாதிருக்கிறான் என்பது உடனே புரிந்தது. முகம் வாடிப் போயிருந்தது. புருவத்துக்கு மேலே இரண்டு மூன்று தையல் போட்டிருந்தது. மற்றபடி மற்ற மூன்று பேரின் வாழ்க்கையில் விளையாடிய அளவுக்கு விதி இவனிடம் விளையாடவில்லை என்பது தெரிந்தது.

"நான் க்ளோவின் சினேகிதன் சார்... நான்... நாங்கள் அவளை டின்னருக்கு அழைத்துப் போனோம்..."

"நீங்கள் குடிபோதையில் இருந்தீர்களா?" தாரென்ஸன் கொஞ்சமும் இரக்கமோ தயக்கமோ காட்டாமல் கடுமையாகக் கேட்டான்.

அதை மறுத்துப் பலமாகத் தலையை அசைத்தான் ஜேம்ஸ். சற்று முன்தான் அவனுடைய ரத்தத்தைப் பரிசோதித்திருந்தார்கள். மது அதிகம் இல்லையென்று நிச்சயமாய்த் தெரிந்து விட்டது. பிலிப்பின் ரத்தத்திலும் மது அதிகம் இருக்கவில்லை என்று சொல்லி விட்டார்கள்.

"இல்லை சார். நாங்கள் போதையில் இருக்கவில்லை. மரீன் பகுதியில் உள்ள ஹூகி ரெஸ்டாரெண்ட்டில் டின்னர் சாப்பிட்டோம். நான் ஒரு கிளாஸ் ஒயின் சாப்பிட்டேன். நான் கார் ஓட்டவில்லை. பிலிப்தான் ஓட்டினான். ஆனால் அவன் என்னை விடக் குறைவாகவே குடித்திருந்தான். அரை கிளாஸ்தான் இருக்கும். அதன் பிறகு யூனியன் ஸ்ட்ரீட்டுக்குப் போய்க் காப்பி சாப்பிட்டோம். அப்புறம் வீடு திரும்பி விட்டோம்...."

"உங்களில் யாருக்குமே மது அருந்துகிற வயது இல்லை, தம்பி" என்றான் தாரென்ஸன். நிதானமாகச் சொன்னாலும் அழுத்தமாக அதைச் சொன்னான். "நீங்கள் யாருமே குடித்திருக்கக் கூடாது. அரை கிளாஸ் ஒயின்தான் என்றாலும் குடித்திருக்கக் கூடாதுதான்."

அவன் சொல்வது நியாயம் என்று ஜேம்ஸுக்கும் தெரிந்தது. "உண்மைதான் சார், நீங்கள் சொல்வது. ஆனால் நாங்கள் யாருமே போதையில் இருக்கவில்லை. என்ன நடந்ததென்று எனக்குத் தெரியவில்லை. நான் எதையும் பார்க்கவுமில்லை. நானும் க்ளோவும் பின் சீட்டில் பேசிக் கொண்டிருந்தோம். அதன் பிறகு என்ன நடந்ததோ, இங்கே ஆஸ்பத்திரிக்கு வந்ததுதான் தெரியும். எங்கள் கார் யார் கார் மீதோ மோதி விட்டதென்றோ அல்லது யார் காரோ எங்கள் கார் மீது மோதி விட்டது என்றோ போலீஸ்காரர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது மட்டும் நினைவு இருக்கிறது. வேறு எதுவுமே தெரியாது, சார். ஆனால் பிலிப் நன்றாய்க் கார் ஓட்டுவான். எங்களை ஸீட் பெல்ட் போட்டுக் கொள்ளச் சொன்னான். நாங்களும் போட்டுக் கொண்டோம். அவன் நல்ல நிதானத்தில் இருந்தான். துளி கூடக் குடி மயக்கம் இல்லை."

சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஜேம்ஸ் அழத் தொடங்கினான். அவனுடைய சினேகிதன் இறந்து போனதையும் விபத்து நடந்த கொடிய அனுபவத்தையும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவனுடைய பேச்சு தாரென்ஸனின் உள்ளத்தை உருக்கியது. "உங்கள் கார் மீது மோதினாளே ஒரு அம்மாள், அவள் குடித்திருந்தாளா?" என்று கேட்டான்.

"தெரியாது, சார். நான்... க்ளோ... ஆலிஸன்... பிலிப்..." அவன் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். "நான்... நான் மட்டும் ஏன் சார் ஒரு காயமும் இல்லாமல் பிழைத்தேன்!.... என் நெற்றியில் ஒரு சின்ன வீக்கம்தான்... நான் மட்டும் ஏன் பிழைத்தேன்..."

"சே, சே... அப்படியெல்லாம் பேசாதே." என்று கூறி அவன் கையை அழுத்தினான்



"புரொட்யூசரை ஸ்ட்ரெச்சர்லே தூக்கிட்டு போறாங்களே, என்ன நடந்தது?"

"ஸ்டண்ட் மாஸ்டருக்குப் பேசின தொகையைக் கொடுக்கலியாம்!"

— வடவள்ளி ராமசுப்ரமணியன்

"ஒரு வாரமா காய்ச்சல்னு சொல்றீங்களே. முதலிலேயே வரக் கூடாதா?"

"சங்கருக்கு கொடுக்கிற ஃபீஸுக்குத் தகுந்த மாதிரி நோய் முத்தின பிறகு வரணும்னு இருந்தேன் டாக்டர்!"

— எஸ். அனந்த பத்மாவதி



பேஜ். ஜேம்ஸ் உடனே அவளைக் கட்டிக் கொண்டு, "ஸாரி... வெரி ஸாரி..." என்றான். பேஜுக்கும் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

"உன் வீட்டிலிருந்து யாராவது வந்திருக் கிறார்களா, ஜேம்ஸ்?" என்று தாரென்ஸன் கேட்டான்.

"என் அப்பா வருவார்," என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே அவன் அப்பா பில் ஆப்பிள்கேட் வந்து விட்டார். அவருக்கு மகன் மீது ஒருபுறம் கோபம். இன் னொருபுறம் தன் பிள்ளை உயிர் பிழைத் தானே என்று கண்ணீரும் வந்தது.

பேஜிடமும் தாரென்ஸனிடமும் சிறிது நேரம் பேசினார். பெற்றோர்களிடம் பொய் சொல்லி விட்டு வெளியே போகத் தன் மகனும் ஒரு காரணமானான் என்பதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் பில்.

இனிமேல் மன்னிப்புக் கேட்டென்ன, கோபப் தாபப்பட்டென்ன? பேஜ் பெருமூச்சு விட்டாள். ஆபரேஷன்... தெய்வத்திடம் பிரார்த்தனை... அற்புதங்கள் நிகழ வேண்டும்... வேறு எதைப் பற்றி எண்ணி என்ன பயன்.

ஜேம்ஸூம் அவன் தந்தையும் புறப்பட்டுப் போன பின் தாரென்ஸன் பேஜின் முகத்தை நோக்கினான். 'ஹூம்' என்று விரக்தியுடன் தலையசைத்து "அந்தப் பையனைப் பார்த் தால் பரிதாபமாயிருக்கிறது. ஆனால் என் மனசின் ஒரு பகுதியில் கோபமும் இருக் கிறது..." என்றான். ஜேம்ஸின் மீது மட்டுமில்லை. எல்லார் மீதும் கோபம் வந்தது அவனுக்கு. விபத்தை ஏற்படுத்தியதற்காகப் பிலிப்பின் மீது... பொய் சொன்னதற்காக க்ளோவின் மீது... அந்த மற்ற காரை ஓட்டி வந்த பெண்மணி மீது...

அவன் மீதும் தப்பு இருந்திருக்கலாம். இரண்டு வண்டிகளும் மகா பயங்கரமாக மோதிக் கொண்டதால், எந்தக் கார் தன் பாதையை விட்டு விலகியது என்று சொல்ல முடியவில்லை என்று நெடுஞ்சாலைப் போலீசார் கொஞ்சம் முன்னால் அவனிடம் கூறி யிருந்தார்கள். பிலிப்பின் ரத்தத்தில் மதுவின் அறிகுறி இருந்ததாயும், ஆனால் குடிபோதை யில் இருந்தானென்று சொல்லக்கூடிய அள வுக்கு இல்லையென்றும் ஆஸ்பத்திரியில் சொன்னார்கள். செனேட்டரின் மனைவி நிதானத்துடன் இருந்ததாகத் தோன்றியதால் ஒன்றும் துருவவில்லையாம். பிலிப்பின் பக்கத்

வாசகர்களில் நான்கு ஜாதி!

சென்னையின் நெம்பர் ஒன் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸான ஸ்பென்சர் பிளாசாவிலுள்ள இருநூறுக்கும் அதிகமான பல்வேறு கடைகளில் 'தி புக் ஷாப்' மட்டுமே புத்தகக் கடை. அங்கே விற்பனையாகிற புத்தகங்கள், மார்க்கெட்டில் சக்கைபோடு போடுகிற மசாலா புதினங்கள் அல்ல. தத்துவம், மதம், இந்தியக்கலை, கலா சாரம், கட்டடக்கலை, கவிதை, இலக்கியம் இப் படிப்பட்ட புத்தகங்களே.

இங்கு வந்து புத்தகம் வாங்குகிறவர்களுள் முக்கால்வாசிப் பேர் அயல்நாட்டு டூரிஸ்ட்கள் தான்.



"நான் அடிப் படையில் புத்த கங்களை நேசிக் கிறவன். தரமான புத்தகங்களை நான் காதலிக்கி றேன். என் மன துக்கு நெருக்க மான சப்ஜெக்ட் கள் எவையோ அவை. சம்பந்தப் பட்ட புத்தகங் களை மட்டுமே நான் இங்கே விற் பனைக்கு வைத் திருக்கிறேன்!'' என்கிறார் தி புக் ஷாப்பின் நிர்வாக இயக் குனரான சீதாராம்.

புத்தகம் படிக்கிறவர்களை நான்கு வகையின ராகப் பிரிக்கிறார் இவர். முதலாவது வகையினர், ஸ்பாஞ்ச் போன்றவர்கள். படித்தது எதையும் (மனதில்) நிறுத்திக் கொள்ளாமல் போகிறவர்கள். மணல் கடிகாரம் போன்ற இரண்டாம் வகையினர் படிப்பது வெறும் பொழுது போக்குக்காகத்தான். துணி பீரோவில் போட்டு வைக்கிற வாசனை பாக்கெட் போன்ற மூன்றாவது பிரிவினர், படித்த தன் எஸென்ஸை மட்டும் வைத்துக் கொள்ளு வார்கள். வைரம் போன்ற நான்காம் பிரிவினர் தாம் படித்ததை தமக்கும், பிறருக்கும் பயன் படுமாறு செய்து ஒளியூட்டுபவர்கள்!

— மௌஷ்மி

படம் : யோகா

தில் ஆலிஸன் இருந்ததால் விளாடி நேரம் அவன் கவனம் சிதறியிருக்கலாம் என்றும், ஆகவே விபத்துக்குக் காரணம் அவனாக இருக்கலாம் என்றும் சொன்னார்கள். யாரும் எதையும் நிச்சயமாகச் சொல்லவில்லை.

பேஜைப் பொறுத்தமட்டில், ஆலிஸன் இப்போது எந்த நிலைமையில் இருக்கிறாளோ என்ற எண்ணத்தைத் தவிர வேறு எதுவும் தோன்றவில்லை. குழந்தையைப் பார்க்க வேண்டும், உடனே பார்க்க வேண்டும் என்று அவள் தவித்த தவிப்பு!

மேலும் ஒரு மணி நேரம் ஓடியபின் ஒரு நர்ஸ் அவளை நோக்கி வந்தாள். "நியூரோ சர்



கருத்து : வலையங்கராயா நூர்தீன்

ஜன்கள் உங்களை வரச் சொல்கிறார்கள்," என்றாள்.

"ஆலிஸனை நான் பார்க்கலாமா?" பேஜ் பதறினாள்.

"கொஞ்ச நேரத்தில் பார்க்கலாம். அதற்கு முன் அவளுடைய நிலைமையைப் பற்றி டாக்டர்கள் உங்களிடம் சொல்வார்கள். வாருங்கள்."

நிலைமை! என்ன நிலைமை? நிலைமையைப் பற்றிச் சொல்லப் போகிறார்கள் என்றால் ஆலிஸன் உயிரோடு இருக்கிறாள் என்று அர்த்தம்! பேஜின் மனத்தில் ஒரு மூலை ஆறுதலால் படபடத்தது.

தாரென்ஸன் அவளைக் கவலையுடன் பார்த்தான். "நான் வேண்டுமானால் கூட வரட்டுமா?" என்றான்.

பேஜ் ஒருகணம் தயங்கி விட்டு, பிறகு சரியென்று தலையசைத்தாள். அவன் ஒரு நல்ல நண்பனாக இருந்து வந்திருக்கிறான். பள்ளிக்கூடத்தில் நடந்த நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் இரண்டு பேரும் சேர்ந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். அவளுக்கு அவனிடம் பிரியம் உண்டு. இரண்டு பேரின் பெண்களும் உயிருக்குயிரான சிநேகிதிகள்.

டாக்டர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ என்று மனம் நடுங்கியது. ஆலிஸனைப் பார்ப்பதற்கு அதைவிடப் பயமாயிருந்தது. மகளைப் பார்க்க வேண்டுமென்ற தவிப்போடு, அவளைப் பார்க்கும்போது அவள் என்ன நிலைமையில் இருப்பாளோ என்ற அச்சமும் கூடவே தலை தூக்கி பேஜை உலுக்கியெடுத்தது.

இருவருமாகப் புறப்பட்டு டாக்டர்களின் அறையை நோக்கி நடக்கையில், "என்னோடு வருவதில் உங்களுக்கு ஒருவேளை... தொந்தரவாக..." என்று பேஜ் தயங்கினாள். அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை. அவ்வளவு தாழ்ந்திருந்தது.

"அபத்தமாய் உளறாதே" என்றான் தாரென்ஸன்.

ஓட்டமும் நடையுமாக அவர்கள் போவதைப் பார்த்தவர்கள், அண்ணனும் தங்கையும் என்று நினைத்திருப்பார்கள். அந்த அளவுக்கு இருவர் தோற்றத்திலும் ஒற்றுமை இருந்தது. அவனுடன் இருப்பது அவள் மனசில் தெம்பு ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட ஆறுதலை அவள் வேறு எவரிடமும் பெற்றது கிடையாது.

டாக்டர்கள் இருந்த அறையை அடைந்தார்கள். கதவைத் திறந்தபோது அங்கே மூன்று சர்ஜன்கள் இருப்பது தெரிந்தது. மூவரும் இன்னும் ஆபரேஷன் யூனிபாரத்தை அகற்றவில்லை. முகமூடிகளை மட்டும் கழற்றிக் கழுத்தைச் சுற்றி மாட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவருடைய கவுனில் ரத்தக் கறை இருந்தது.

ஆலிஸனின் ரத்தமோ? நினைக்கும்போதே பேஜின் தேகம் உறைந்தது.

"என் பெண் எப்படி இருக்கிறாள்?"

அவளால் அந்த ஒரு கேள்வியைத்தான் கேட்க முடிந்தது – அந்த ஒரு எண்ணம்தான் அவள் மனத்தில் நிறைந்திருந்ததால்.

ஆனால் அவள் கேள்வியைப் போல அவ்வளவு எளிமையாக, அவ்வளவு சின்னதாக இருக்கவில்லை சர்ஜன்களின் பதில்.

(தொடரும்)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1997



கல்கி விலை உட்பட விலைவாசியெல்லாம் எக்கச்சக்கமாக ஏறிவிட்டது! சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகை மட்டும் ஏறாவிட்டால் எப்படி? ஆகவே

முதல் பரிசு : ரூ. 2500

இரண்டாவது பரிசு : ரூ. 2000

மூன்றாவது பரிசு : ரூ. 1500

ஆக மொத்தம் ரூ. 6000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 200 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு!

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15 ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஜூன் 16 ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலை ஒட்டிய, சுயவிலாசம் எழுதிய உறையைக் கதையுடன் கூடவே அனுப்ப வேண்டும். பின்னால், தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள், கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி,
47. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97.



வெளியிடுவது புத்தகங்களை மட்டுமா? வேதனைகளையும்தான்!

தமிழ் வளர்ச்சிக்கென்று ஒரு தனி துறையும் அமைச்சரும் இருக்கிற நிலையில், தமிழில் புத்தகம் வெளியிடுபவர்களின் நிலை அமோகமாக இருக்க வேண்டாமா? பல வெளியீட்டாளர்களையும் சந்தித்துப் பேசியபோதுதான் விஷயம் தலைகீழாகப் போய்க் கொண்டிருக்கிறதோ என்று வருத்தப்படவைக்கிறது....




• ரவி தமிழ்வாணன்

"எங்களைக் கோனார்தான் வாழ வைக்கிறார்!" என்று உடன டியாகச் சொல்லுகிறார் பழனியப்பச் செட்டியார். 'பழனியப்பா பிரதர்ஸ்' என்னும் பதிப்பகத்தை ஐம்பதாண்டுகளுக்கு மேலாக நடத்தி வரும் இவருக்குப் பதிப்பகத் தொழிலைப் பொறுத்தவரை கோனார்தான் அச்சாணி.

"கோனார் தமிழ் உரையைப் படிக்காத மாணவர்களே இல்லை. லட்சக்கணக்கில் விற்பது அது ஒன்றுதான். அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்துத்தான் மற்ற நூல்களையும் குழந்தைகளுக்கான புத்தகங்களையும் வெளியிடுகிறேன். எனது நீண்டகால லட்சியமாக இருந்த 'பால்ஸ் டிக்ஷனரி'யையும் வெளியிட்டேன். தமிழில் சம்பாதிப்பதைத் தமிழுக்காகவே செலவிடுகிறேன். மற்றபடி நூலகங்களை நம்பித்தான் நல்ல புத்தகங்களை வெளியிட முடியும் என்றால் எண்ணூறு புத்தகங்களுக்கு மேல் என்னால் வெளியிட்டிருக்க முடியாது!" என்கிறார் பழனியப்பச் செட்டியார்.

• பழனியப்பச் செட்டியார்





• அகிலன் கண்ணன்

இவரைப் போலவே, "நாங்கள் வாசகர்களை நம்பித்தான் நல்ல நல்ல நூல்களை வெளியிடுகிறோமே தவிர, நூலகங்களை நம்பி அல்ல. இருப்பினும் நூலகங்களுக்குச் சில நூறு பிரதிகள் ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பதற்காகத்தான்


கொடுக்கிறோம். அவர்கள் கொடுக்கும் அபு மாட்டு விலைக்கு ஆசைப்பட்டு அல்ல!" என்கிறார் 'அன்னம்' மீரா.


• மீரா



• ராமகிருஷ்ணன்

"உடலியல் கலைக் களஞ்சியம்' என்கிற தலைப்பில் உடலைப் பற்றிய ஒன்பது பாகங்கள் வெளியிட்டோம். அதைப் பாராட்டாத டாக்டர்களே இல்லை. எழுத்தாளர் சுஜாதாவும் 'உடலியல் பற்றித் தமிழில் இப்படியொரு நூல் வெளிவந்ததே இல்லை!' என்று பாராட்டினார். அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களும் பாராட்டினார்.

"இவற்றின் விளைவாக நூலகங்களுக்காக அரசு நானூறு பிரதிகள் வாங்கியது. எந்த விலைக்குத் தெரியுமா? 410 ரூபாய் விலை கொண்ட அந்த ஒன்பது பாகங்களையும் 170 ரூபாய்க்கு வாங்கியது. ஆக எங்களுக்கு அதில் லாபமே இல்லை. ஆனாலும் மக்களுக்குப் பயனுள்ளதாக இருப்பதால், உடலியல் பற்றி அக்குவேறு ஆணிவேறாக விளக்குகிற வகையில் மொத்தம் ஐம்பது பாகங்களாக அதை வெளியிட இருக்கிறோம்!" என்கிறார்கள் நூற்றாண்டு விழா காணப் போகும் 'அல்லயன்ஸ்' பதிப்பகத்தின் உரிமையாளர்களான மணியனும் சீனிவாசனும்.

• செல்லப்பன்



"இப்போது எங்கள் பதிப்பகம் இருக்கிற கட்டடத்தை வாடகைக்கு விட்டால் கூட நல்ல வருமானம் கிடைக்கும். ஆனாலும் பதிப்பகத் தொழிலை விடாமல் நடத்திக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம் தெரியுமா? இதில் கிடைக்கிற கௌரவமும் மக்கள் படிப்பதற்கான பல்வேறு தரப்பட்ட நூல்களையும் வெளியிடுகிறோமே என்கிற ப[illegible] திருப்தியும்தான்!" என்கிறார் 'வானதி' திருநாவுக்கரசு.


• சீனிவாசன்


• திருநாவுக்கரசு


நூலகங்களுக்கு அரசாங்கம் வாங்கும் பிரதிகளை நம்பித்தான் பதிப்பகத் தொழிலை நடத்த முடியுமா என்ன? "அப்படியில்லை. நூலகங்களுக்கு அரசாங்கம் வாங்கினால் அதுவொரு மிகப் பெரிய சப்போர்ட்தான். அந்த ஆதரவு இல்லை என்றாலும் பிரச்னை இல்லை. எங்கள் பதிப்பகங்களில் வெளியிடப்படுகிற எல்லாப் புத்தகங்களையும் வாசகர்களே வாங்கி நல்ல ஆதரவு தருகிறார்கள்!" என்கிறார் 'வர்த்தமானன்' பதிப்பக உரிமையாளர் பேராசிரியர் ஸ்ரீசந்திரன்.

"இலக்கிய, இலக்கண நூல்களை மட்டும்தான் நாங்கள் வெளியிடுகிறோம். அது பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறோம். உடனடியாக வாசகர்கள் எங்களது முன் வெளியீட்டுத் திட்டத்திற்குப் பணம் அனுப்பி விடுகிறார்கள். இப்படி நாங்களும் வாசகர்களும் நேரடியாகவே தொடர்பு கொண்டிருப்பதால், வாசகர்களுக்கு புத்தக விலையில் நாற்பது சத விகிதம் கழிவு செய்தும் கொடுக்க முடிகிறது.

• காந்தி கண்ணதாசன்


• வரதன்


• ஸ்ரீசந்திரன்




''கடவுள்தான் உனக்கு கூரையைப் பிச்சுக் கிட்டுக் கொடுத்தாராமே, அப்புறம் ஏன் வருத்தமா இருக்கே?''

''அவரு கொடுத்தது கூரையை சரி செய் யத்தான் சரியா இருந்தது!''

– கீழை அ. கதிர்வேல்

இதில் வாசகர்களுக்கும் அலாதி திருப்தி!'' என்கிறார் ஸ்ரீ சந்திரன்.

இவரைப் போலவே நூலகங்களுக்கு அரசு வாங்குகிற பிரதிகளின் எண்ணிக்கை பற்றி அவ்வளவாகக் கவலைப்படாமல் இருக்கிறார் 'லிப்கோ' வரதன். ''முதலில் நாங்கள் லிப்கோ நோட்ஸ்தான் வெளியிட்டுக் கொண்டிருந் தோம். ஒரு சமயம் எங்கள் அலுவலகத்துக்கு எழுந்தருளிய காஞ்சி மகா சுவாமிகள் பக்திப் புத்தகங்களை வெளியிடுமாறு பணித்தார். அதன் பிறகுதான் பக்திப் புத்தகங்களை வெளி யிடுவதில் அதிக கவனம் செலுத்த ஆரம் பித்தோம். லிப்கோ டிக்ஷ்னரி பற்றியும் சொல் லித் தெரிய வேண்டியதில்லை. எனவே, எங்களுக்கென்று குறிப்பிட்ட வாசகர்கள் எப்போதுமே உண்டு!'' என்கிறார் வரதன்.

''எங்களது புத்தகங்களும் அமோகமாக விற்பனையாகின்றன!'' என்கிறார், பெரும் பாலும் காப்மேயர் போன்றோரின் தன்னம் பிக்கையூட்டும் மொழிபெயர்ப்புப் புத்தகங் களையே அதிகம் வெளியிடுகிற கண்ணதாசன் பதிப்பகத்தின் காந்தி கண்ணதாசன்.

''ஆனாலும் எல்லா வாசகர்களாலும் எல்லாப் புத்தகங்களையும் விலைகொடுத்து வாங்க முடியுமா? முடியாது. ஏழைகள் எப்படித்தான் பல்வேறு தரப்பட்ட புத்தகங் களையும் படிப்பது? நூலகங்களில்தான் படிக்க முடியும். அதனால்தான் எங்களுக்குக் கட்டு படியாகிற விலைகொடுத்து நூலகங்களில் அரசு வாங்கி வைக்க வேண்டும்!'' என்கிறார் காந்தி கண்ணதாசன்.

''சாகித்திய அகாடமி வெளியீடுகளும் சரி, நேஷனல் புக் டிரஸ்ட் வெளியீடுகளும் சரி எல்லாமே நல்ல புத்தகங்கள்தான். என்றாலும் அவற்றின் விலையும் குறைவு என்று சொல்லி விட முடியாது. எனவே, சாதாரண மக்கள் எந்தப் புத்தகத்தைப் படிப்பதற்கும் நூலகங் களைத்தான் நம்பியுள்ளார்கள். ஆக எல்லா நல்ல புத்தகங்களையும் வாங்கி வைக்க வேண் டியது நூலகங்களின் கடமை!'' என்கிறார் 'பாரி நிலையம்' செல்லப்பன்.

கம்யூனிஸ்ட்டுகளின் வேதம் என்று சொல்லப்படுகிற காரல் மார்க்ஸின் 'மூலதனம்' புத்தகத்தைத் தமிழில் வெளியிடுகிற முயற்சி யில் ஈடுபட்டிருக்கிறது நியூ செஞ்சுரி புத்தக நிலையம். ஐந்து பாகங்கள் கொண்ட இதன் விலை 900 ரூபாய். முன்வெளியீட்டுத் திட்டத் தின் கீழ் பதிவுசெய்து கொண்டால் அறுநூறு ரூபாய்க்கே கிடைக்கும். இதே புத்தகம், சோவி யத் யூனியன் சிதறுண்டு போகாமல் பழைய படியே இருந்திருந்தால் 120 ரூபாய்க்கே வாசகர்களுக்குக் கிடைத்திருக்கும்!

ஆனால் இப்போது நியூசெஞ்சுரி புத்தக நிலையத்துக்கான சோவியத் உதவி முழுவது மாக நிறுத்தப்பட்டு விட்ட நிலையில், அதன் வெளியீடுகளின் விலையும் மற்ற பதிப்பகங் களின் விலையைப் போலவே உயர்ந்து விட்டது. ''ஆனாலும் எங்கள் வெளியீடுகளின் விற்பனையில் பெரிய பாதிப்புகள் ஏதும் இல்லை. அண்மையில் கூட இலங்கைக்குச் சென்று, எங்கள் வெளியீடுகளோடு சேர்த்து, மற்ற பதிப்பாளர்களின் வெளியீடுகளையும் விற்பனை செய்தோம். எல்லாப் புத்தகங்களும் விற்றுப் போய் விட்டன. இந்த உற்சாகத்தால் உலகெங்கும் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று தமிழ்ப் புத்தகங்களை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம்!'' என்கிறார் நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தின் செயலாளர் சுப்பிரமணியம்.

''குறிப்பிட்ட சில புத்தகங்கள் உற்சாகப் படுத்துகிற அளவுக்கு விற்பனையாவது உண் மைதான். அப்படிப்பட்ட சில புத்தகங்களை நூலகங்களுக்கு அரசாங்கம் வாங்கும் என்கிற எதிர்பார்ப்பில்லாமல் பதிப்பாளர்களால் வெளியிட முடியும் என்பதும் உண்மைதான். இப்படி எல்லா பதிப்பாளர்களும் குறிப்பிட்ட சில புத்தகங்களை மட்டுமே வெளியிட ஆரம் பித்தால் என்ன ஆகும்? புதிய புதிய படைப் பிலக்கியங்கள் பிறப்பதற்கே வழியில்லாமல் போய்விடுமே! அதனால்தான் அரசு நூலகங் களை நம்புகிறோம்!'' என்கிற வானதி திருநாவுக்கரசுவுக்குப் பெரும்பாலான பத்திரி கைகள் புத்தக மதிப்புரைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதில் ஏக வருத்தம்.

''நாங்கள் நாவல் அல்லாத (தமிழ்

வாணன் நாவல்கள் விதிவிலக்கு) புத்தகங்களைத்தான் வெளியிடுகிறோம். வாசகர்களும் இவற்றை விரும்பி வாங்குகிறார்கள். எந்தவொரு தலைப்பு தொடர்பான புத்தகத்தைத் தேடி வந்தாலும் அந்தத் தலைப்பிலோ அல்லது அதற்கு மிக நெருக்கமான தலைப்பிலோ எங்களிடம் புத்தகங்கள் கிடைக்கும் என்பதால் எங்கள் வெளியீடுகளுக்கு வாசகர்களிடம் அமோக வரவேற்பு!" என்று கூறும் 'மணிமேகலைப் பிரசுரம்' ரவி தமிழ்வாணனிடம், அரசாங்கம் நூலகங்களுக்குப் பிரதிகள் வாங்குவது பற்றிக் கேட்டபோது, "அரசு கொடுக்கிற விலை கட்டுபடியாகவில்லை என்பது மட்டுமல்ல; பரிசு பெறாத புத்தகங்களை ஐநூறு பிரதிகள்தான் வாங்கிக் கொள்கிறார்கள் என்பது ஒரு மிகப் பெரிய குறை. விலையை உயர்த்திக் கொடுப்பதோடு எல்லா நூல்களையும் அரசு ஆயிரத்தைந் நூறு பிரதிகள் வாங்க வேண்டும். இதனால் பதிப்பகத்தார் மட்டுமே லாபம் அடைவதில்லை. நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்க முடியாத வாசகர்களும் நூலகங்களில் சென்று படித்துப் பயனடைவார்கள்!" என்கிறார் ரவி தமிழ்வாணன்.

பதிப்பாளர்களுக்கு அரசாங்கத்திடம் அப்படி என்னதான் எதிர்பார்ப்பு?

"நாங்கள் வெளியிடுகிற புத்தகங்களை அதில் போட்டிருக்கிற விலையையே கொடுத்து அரசு எங்களிடமிருந்து வாங்குவதில்லை. ஒரு ஃபாரத்திற்கு அதாவது பதினாறு பக்கங்களுக்கு, ஒரு ரூபாய் என்பது காசு என்று அரசே ஒரு விலையை நிர்ணயித்திருக்கிறது. பிறகு அதிலும் பதினைந்து சதவிகிதம் கழிவு செய்கிறது அரசு. சராசரியாகப் பார்த்தால் புத்தகங்களில் போடப்பட்டிருக்கிற விலையில் பாதி அளவு விலைக்குத்தான் அரசு எங்களிடமிருந்து புத்தகங்களை வாங்குகிறது.

"இப்படி வாங்குகிற புத்தகங்களின் எண்ணிக்கைக்கும் ஒரு குறிப்பிட்ட வரைமுறை கிடையாது. ஐநூறிலிருந்து 1500 வரை மனம் போன போக்கில் வாங்குகிறது. அரசு வாங்குகிற புத்தகங்களை அனுப்பி வைக்கிற பார்சல் செலவுகளும் எங்களைச் சேர்ந்தது தான். இது எங்களுக்குக் கட்டுபடியாகிற நிலையும் இல்லை; விலையும் இல்லை.

"இதன் காரணமாகத்தான் ஃபாரத்திற்கு ரூ. 1.80 என்கிற விலையை மூன்று ரூபாயாக உயர்த்தச் சொல்லுகிறோம். இப்படி

எழுத்தாளர் கேட்ட புத்தகம்!

'வெஸ்லின் புக் டெபாசிட்டரி' என்ற புத்தகக் கடை, மத சம்பந்தமான புத்தகங்களை விற்றுக் கொண்டிருந்தது. வியாபார மந்தம் காரணமாக அதன் லைப்ரரியனாய்ப் பணி யாற்றியவருக்கே கடையை விற்று விட்டது. கடையின் புதிய முதலாளியின் பெயர்தான் அபெல் ஜோஷ்வா ஹிக்கின்பாதம்ஸ். இது நடந்தது 1844! அதன்பின் வெகு சீக்கிரமே பிரபலமடைந்து விட்டது.

ஹிக்கின் பாதம்ஸின் வி.ஐ.பி. கஸ்டமர் லிஸ்ட் நீளமானது. பிரிட்டிஷ் பிரதமர் அட்லி, மறைந்த அறிஞர் அண்ணா, டி.டி.கே. என்று பலரும் அதில் அடக்கம். மைசூர் மகாராஜா சென்னை வரும்போது, ஹிக்கின் பாதம்ஸ் செல்லத் தவற மாட்டாராம்!

"அறுபதுகளில் ஒருநாள், வயதான வெள்ளைக்காரர் வந்து, கெமிஸ்டிரி புத்தகங்களின் பிரிவு எங்கே என்று கேட்டார். குறிப்பிட்ட பிரிவுக்கு வழி காட்டியவுடன்,



• ஹிக்கின்பாதம்ஸ் உள்ளே...

அங்கே சென்று, 'பெர்ரியின் கெமிகல் இஞ்சினியரிங் ஹாண்ட் புக் இருக்கிறதா?' என்று கேட்டார். அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியை எடுத்துத் தந்தவுடன், அதை ஆசையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டே 'இதை எழுதியது நான் தான்!' என்றார் பெருமையுடன்..." என்று பழைய நினைவுகளைச் சொல்கிறார் ஸ்ரீனிவாசன். இவர், ஹிக்கின் பாதம்ஸ் வெளியிடான, மெயில் என்ற நியூஸ் லெட்டரின் ஆசிரியர். மாதாமாதம் இன்னின்ன புதிய புத்தகங்கள் வெளியாகியுள்ளன என்று வாசகர்களுக்குத் தெரிவிக்கிறது 'மெயில்' செய்தி மடல்.

ஆங்கிலப் புத்தகங்களோடு கணிசமான அளவில் தமிழ்ப் புத்தகங்களையும் விற்பனை செய்கிற ஆங்கிலப் புத்தகக் கடை ஹிக்கின் பாதம்ஸ் மட்டும்தான்!

– எஸ். சந்திரமௌலி

படம்: யோகா



''தலைவர் ரொம்ப சென்டிமெண்டல்!''

''இருக்கட்டும்யா. அதுக்காக பூனைப் படையில இருந்து ஒருத்தர் குறுக்கே போனாக் கூட 'சகுனம் சரியில்லை'ன்னு திரும்பிப் போறது நல்லாயில்லை!''

— மேல்மங்கலம் பத்ரா

நீங்கள் கேட்பது மிகவும் நியாயமானது. காரணம், தமிழக அரசு ரூ 1.80 கொடுக்கிற இதே ஃபாரத்திற்குக் கன்னடப் புத்தகங்களுக்கு ரூ 4.40-ம் தெலுங்குக்கு ரூ 3.47-ம் மலையாளத்துக்கு ரூ 2.96-ம் அந்தந்த அரசுகள் தருகின்றன. இந்தியில் போட்டிருக்கிற விலையே தரப்படுகிறது. இத்தனை ஏன்? தமிழக அரசே ஆங்கிலப் புத்தகங்களை வாங்குகிறபோது, அவற்றில் போடப்பட்டிருக்கிற அதே விலையைக் கொடுத்துத்தான் வாங்குகிறது. இந்த நிலையில் தமிழுக்கு மட்டும் ஏன் இந்தப் பாகுபாடு? தமிழ்ப் புத்தகங்களை மாத்திரம் அடிமாட்டு விலைக்குத்தான் வாங்குவேன் என்று அரசு அடம் பிடித்தால் அப்புறம் எப்படி தமிழில் புதிய புதிய நூல்கள் வெளிவரும்?'' என்று கேட்கிறார் 'தமிழ்ப் புத்தகாலயம்' அகிலன் கண்ணன்!

வித்தியாசமான நூல்களை நேர்த்தியாக வெளியிட்டுக் கொண்டிருப்பவர் 'க்ரியா' ராமகிருஷ்ணன்.

'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' என்று முன்பு வெளியிட்டுப் பலராலும் பாராட்டுப் பெற்ற இவர், நண்பர்களோடு சேர்ந்து 'மொழி' என்கிற கலாசார மேம்பாட்டு அறக்கட்டளையைத் துவங்கி, அதன் சார்பாக இப்போது 'தற்கால மரபுத் தொடர் அகராதி'யை வெளியிட்டிருக்கிறார். தமிழில் இதுவொரு சிறப்பான முயற்சி மாத்திரம் அல்ல; முதல் முயற்சியும் கூட. இது மாதிரியான பரிசோதனை முயற்சிகளுக்குத் தமிழ் மக்கள் தருகிற ஆதரவு உற்சாகமளிக்கக் கூடியதாக இருக்கிறதா என்ன?

''இல்லாமல் என்ன!'' என்று தொடங்கும் ராமகிருஷ்ணன், ''முன்பு 'டாக்டர் இல்லாத இடத்தில்' என்று ஒரு புத்தகம் வெளியிட்டோம். எளிய மருத்துவமுறைகளைச் சொல்கிற அந்தப் புத்தகம் மிகவும் பரபரப்பாக விற்பனை ஆனது. அதனாலேயே அதுபோன்ற புத்தகங்களைத்தான் வெளியிட வேண்டும்; அப்போதுதான் விற்பனையாகும் என்று நாங்கள் எங்களது பதிப்பகப் பார்வையைச் சுருக்கிக் கொண்டு விடவில்லை. அப்படியொன்றும் மக்களின் வரவேற்பைப் பெறாது என்று தெரிந்தேதான் 'முந்தைய இந்தியச் சமுதாயமும் அதன் அரசியல் அமைப்பும்' என்ற நூலை வெளியிட்டோம். காரணம், ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு இந்தியச் சமுதாயம் எப்படி இருந்தது என்பதை மக்கள் தெரிந்து கொள்வது அவசியம் என்று நினைத்தோம். அதன் காரணமாகவே அதை வெளியிட்டோம். ஒரு பதிப்பாளன் என்பவன் வெறும் வியாபாரி அல்ல; ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் மிகப் பெரிய பங்காற்றுபவன்!'' என்று சொல்லும் ராமகிருஷ்ணன் ''ஒரு நல்ல புத்தகத்தைப் பதிப்பாளனும் எழுத்தாளனும் மாத்திரமே உருவாக்கிவிட முடியாது. சமுதாயமும் சேர்ந்துதான் உருவாக்க முடியும்!'' என்று அழுத்தமாகக் கூறுகிறார்.

நூலகங்களுக்கு அரசு புத்தகங்களை வாங்குகிறபோது அதற்குக் கொடுக்கிற விலையில் இவருக்கு உடன்பாடு உண்டா?

''எப்படி இருக்க முடியும். 'மூதாதையரைத் தேடி...' என்ற பரிணாம வளர்ச்சியில் மனிதனின் இடம் பற்றிய ஒரு புத்தகத்துக்காக அதன் ஆசிரியர் எத்தனை விஷயங்களைத் தேடித் தேடி எழுத வேண்டியிருந்தது தெரியுமா? அந்தப் புத்தகத்துக்கான சில படங்களை வெளியிடுவதற்காக பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திற்கு நாங்கள் ராயல்டி கொடுக்க வேண்டியிருந்தது. இதுபோன்ற சிரமங்களையும் வெளிநாட்டுப் புத்தகங்களுக்கு இணையாக நமது தமிழ்ப் புத்தகங்களின் உள்ளடக்கமும் இருக்க வேண்டும் என்கிற ஆசையோடு பதிப்பாளர்கள் செலவு செய்வதையெல்லாமும் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் அரசாங்கம் தன் பாட்டுக்கு ஒரு விலையை நிர்ணயிப்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது. இதை ஆரம்பத்திலிருந்தே 'க்ரியா' எதிர்த்துக் கொண்டிருக்கிறது!'' என்கிறார் ராமகிருஷ்ணன்.

— இளங்கோவன்

நாட்டின் சிறந்த மருத்துவமனைகளில் ரூபாய் 5 லட்சம் பெறுமான மருத்துவ சிகிச்சை

உங்கள் வயதுக்கேற்ப, ரூ. 2,500 முதல் ரூ. 35,000 மட்டுமே செலுத்தி.

ஆரோக்கியம், நிதிவசதியும் உங்களை மிகவும் பாதிக்கும் தருணத்தில் உங்கள் ஆஸ்பத்திரி செலவை யார் ஏற்பது? யூடிஐ வழங்கும் சீனியர் சிட்டிஸன்ஸ் யூனிட் பிளான் (SCUP) நீங்கள் காணும் மிகச்சிறந்த ஓய்வுக்கால மருத்துவ அளிப்பு மூலம் நீங்களே அந்த செலவை ஏற்பீர். இது உங்களுக்கும், உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் ரூ. 5 லட்சம் ஆஸ்பத்திரி செலவை தரும், நாட்டின் மிகச் சிறந்த ஆஸ்பத்திரிகளில் தரும்.

திட்டம் செயல்படும் விதம் இவ்வாறு: நீங்கள் ஒரு சிறு தொகையை ஒரு முறை மட்டுமே செலுத்த வேண்டும். (எவ்வளவு குறைந்த வயதில் செலுத்துகிறீர்களோ, அவ்வளவு குறைவாக செலுத்துவீர்). 54-வது வயதில் உங்களுக்கும், உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் ஒரு அடையாள அட்டை-கம்-வாக் புக் தரப்படும். 58-வது வயதுக்கு பிறகு நீங்கள் நாட்டின் எந்த பகுதியில் வசித்தாலும், எந்த பகுதியில் முதலீடு செய்திருந்தாலும் கவலையில்லை. நாடெங்குமுள்ள மிகச்சிறந்த ஆஸ்பத்திரிகளை பயன்படுத்திக்கொள்ளலாம். தற்போது 55 நகரங்களிலுள்ள 184 ஆஸ்பத்திரிகள் இத்திட்டத்தில் பங்கு பெற்றுள்ளன.

உங்களுக்கோ, உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ ஆஸ்பத்திரியில் சேர வேண்டியிருந்தால், இத்திட்டத்தில் பங்கு பெறும் ஏதேனும் ஒரு ஆஸ்பத்திரிக்கு சென்று அட்மிட் ஆகவும். சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் ஆகும் போது பில் தொகை செலுத்துவதற்கு பதிலாக உங்களிடமுள்ள வாக் புக்கில் என்ட்ரி போட்டுக் கொண்டால் போதும். பில்லுக்கு பணமாகவோ, செக்காகவோ ஏதும் தரவேண்டியதில்லை. நீங்கள் குணமாகி கவலையில்லாமல் வீடு திரும்புங்கள்.

அதோடு நீங்கள், உங்கள் முதலீட்டின் ரெஸிடியல் வேல்யூ, ஆனுவிட்டியும் பெறுவீர்கள். இத்திட்டத்தின் ஒரு அங்கத்தினராக திருமதி. இந்துமதி காம்தார் "இதில் எனக்கு 101% திருப்தி" என்று இத்திட்டத்தை பாராட்டி கூறுகிறார். எனவே தாமதிக்காமல் இன்றே பதிவு செய்யுங்கள். உடல் ஆரோக்கியமே உங்களுக்கு பெரிய சொத்து.

SCUP-ன் கீழ் முதலீட்டு தொகை								
வயது	18	25	30	35	40	45	50	54
தொகை (ரூ.)	2,500	2,800	4,200	6,300	9,800	15,300	24,500	35,000

கவலையில்லாத ஆரோக்கிய பராமரிப்பு

எஸ் ஸி யு பி

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் வளமான எதிர்காலத்திற்காக

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர் போன்: 214973 • சென்னை போன்: 517101, 517190
• மதுரை போன்: 38186 • திருச்சி போன்: 760060

055/97 M TAM B

தலையாய்ந்து

பேசுவது மானம் விடை பேணுவது காமம்
பூசுவது மானுடரை – நன்று நும் கொற்றம்!

– கும்பகர்ணன் ராவணனைப் பார்த்து இப்படிச் சொல்கிறான்.

"ராவணா, ஒன்று செய்! காமத்துக்கு இடம் கொடு; இல்லாவிட்டால் மானத்துக்கு இடங் கொடு... காமத்துக்கும் இடங்கொடுத்துவிட்டு, மானத்துக்கும் இடங்கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது எப்படி...! நீ மாற்றான் மனைவியை அபகரித்து உள்ளே வைத்திருக்கிறாய்! ஆனால், எல்லாரும் உன்னைக் கொண்டாட வேண்டும் என்று நினைக்கிறாய்... அது எப்படி முடியும்?

"காமத்தோடு இருந்து விடுகிறாயா...? சரி இருந்து விடு! ஆனால், மானத்தோடு வாழ வேண்டுமானால் இந்தக் காரியம் பண்ணாதே!" என்கிறான் கும்பகர்ணன்.

காமம் வந்துவிட்டால் மானம் தானாகப் பறிபோய் விடுகிறது! எவ்வளவு பெரிய வித்வானாயிருந்தாலும் அது அவரிடத்திலே தங்குவதில்லை. ஆகையினால்தான் காமம் வந்தவுடனே–

'ஜானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்' ராவணன்!

கம்பராமாயணத்திலே, 'இன்று போய் நாளை வா' என்று ராமன் சொன்னவுடனேயே ராவணன் கிளம்பி விட்டான்!

'எதற்கு இன்று போய் நாளை வரவேண்டும்... இன்றைக்கே ஒரு கை பார்ப்போம்!' என்று ஏன் அவன் சொல்லவில்லை...? 'போ' என்றதுமே புறப்பட்டுப் போய் விட்டானே!

அப்போது எப்படிப் போகிறான் அவன்...?

'வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க்கேற்ப
நயம்பட உரைத்த நாவும்...' உடையவனாக இருந்தவன்...
வீரமும் களத்தே போட்டு
வெறுங் கையே மீண்டு போனான்!

எல்லாம் போய் விட்டன அவனை விட்டு! எல்லாம் போய் தலையைக் குனிந்து கொண்டு வருகிறான். அவனுக்கு என்ன தோன்றுகிறதாம்...? 'எல்லாம் போய் இப்படித் திரும்புகிறோமே' என்று அவன் வருத்தப்படவில்லையாம்... 'ஜானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்'!

'இந்த விஷயம் சீதைக்குத் தெரிந்ததென்றால் அவள் என்னைப் பார்த்து ஏகமாய்ப் பரிகாசம் செய்து சிரிப்பாளே. அதற்கு நான் இடமாய்ப் போய்விட்டேனே...' என்று அதற்கு வருந்துகிறானேயொழிய தன் வீரத்தைத் தான் இழந்து விட்டோமே என்று வருந்தவில்லை!

காமம் உள்ளே புகுந்ததனாலே, வீரம் போய்விட்டது!

போன வாரம் சொன்ன பண்டிதர் கதைக்கு வருவோம்... அவருக்குக் காமம் உள்ளே புகுந்ததனாலே யோக்யதை போய் விட்டது; பாண்டித்யம் போய்விட்டது. காமத்துக்கு இடம் கொடுத்தவர் மதில் சுவர் ஏறிவிட்டார்.

ஏறினால்.... அந்த மதில் சுவர் மேலே நிறைய கண்ணாடிகள் பதித்திருக்கிறது! அது தெரியாது பண்டிதருக்கு, பாவம்! என்றைக் காவது சுவர் ஏறிக் குதித்துப் பழக்கம் இருந்தால்தானே!

ஏறி காலை வைத்தவுடனேயே காலெல்லாம் கிழ, உடலெல்லாம் கிழ... அப்படியே ரத்தத்தோடு மறுபுறம் இறங்குகிறார். உடலெல்லாம் ஒரே ரத்தம்! அப்படியே ராஜாவுக்கெதிரில் போய் நின்றார்.

பார்த்தான் அரசன்... பண்டிதரைப் போல இருக்கிறார்... இவர் எங்கிருந்து வந்தார்? ஏன் உடம்பெல்லாம் ரத்தமாக இருக்கிறது!' – விசாரிக்கச் சொன்னான்.


பண்டிதர் பதில் சொல்கிறார் :

"ஹே, ராஜன்!... நான் சொல்கிற விஷயத்தை ஓர் ஐந்து நிமிடங்கள் கேட்க வேண்டும்..."

ராஜா பார்த்தான். பல அலுவல்கள் இருந்தபோதும், "பரவாயில்லை சொல்லுங்கள்" என்

10

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



ல்லை



நான். "நீர் எத்தனை நேரம் சொன்னாலும் கேட்கிறேன்..."

அவர் சொல்கிறார் :

"எனக்கு மூன்று பத்னிகள்!"

ராஜா திடுக்கிட்டான். "எனக்கே இரண்டுதானே... உமக்கென்ன மூன்று பத்னிகள்!"



"என்னுடைய பத்னிமார்களெல்லாம் ரொம்ப விசித்திரமானவர்கள்" என்று ஆரம் பித்துச் சொல்கிறார்...

'உமக்கேன் இப்படி அடிபட்டது; உடம் பெல்லாம் காயம்?...' என்று கேட்டால் 'மூன்று பத்னிகள்' என்று பதில் சொல்கிறாரே...' சபை யிலே எல்லோரும் இப்படி யோசிக்கிறார்கள்.

பண்டிதர் தொடர்ந்து சொல்கிறார் : "அந்த மூன்று பத்னிகள் யாரென்று கேட்டால், பசி என்பது ஒரு பத்னி. ஒரே பசி! பசி என்கிற பத்தினி பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறது.

"தாகம் என்றொரு பத்னி. அதற்கும் மேலே மூன்றாவதாக ஒரு பத்னி - ஆசை! முதல் இரண்டு பத்னிகளாவது கொஞ்சம் நேரம் என்னை விட்டுவிட்டு அக்கம், பக்கம் போவார்கள். ஆனால், கடைசி பத்னி இருக் கிறாளே... என்னை விட்டு அகன்றதேயில்லை. அவள்! எப்போதும் என்னோடு கூடவே இருக் கிறாள். நான் அவளை விடவேண்டும் என்று நினைத்தால் கூட அவள் என்னை விடு வதில்லை.

"என்னிடத்திலே நிரம்ப அன்பு கொண்ட அந்த ஆசை என்கிற பத்னி இருக்கிறாளே... அவளால் இப்படி அலங்கரிக்கப்பட்டேன்..." என்றார் பண்டிதர்.

ராஜா பார்த்தான்.... "அடடா! ஆசைக்கு எவ்வளவு அழகான விளக்கம் சொன்னார் இவர்... இவருக்கு ஒன்றுக்கு நான்காக சால்வை களைப் போர்த்துங்கள்" என்றான்! நிறைய சம்பாவனை செய்து அனுப்பி வைத்தான்!

ஆகையினாலே, பாருங்கள்... ஆசை வந்ததென்றால் பாண்டித்யம் எகிறிப் போய் விடுகிறது! பண்டிதரைச் சுவரேறிக் குதிக்க வைத்ததே ஆசை... அதைக் காட்டிலும் என்ன சொல்வது!

நமக்குள்ளே இப்படி காம, க்ரோத, லோப மோக மதமாச்ர்யங்கள் இருக்கின்றன. அவை யெல்லாம் இந்த நாராயண மந்திரத்திலே வருகிற முதல் அக்ஷரமான பிரணவத்தினாலே விரட்டியடிக்கப்படுகின்றன. அந்த ப்ரணவத் திலே பரமாத்மா உட்கார்ந்து கொண்டு இப் படிப்பட்ட கெட்ட குணங்களையெல்லாம் நம் மிடத்திலேயிருந்து விரட்டியடிக்கிறான்.

'ஓம் விஷ்ணவே நம:' என்று ஒரு புஷ் பத்தை எடுத்து அவன் திருவடியிலே அர்ச் சனை பண்ணினாலும் சரி, 'விச்வம் விஷ்ணு வஷட்காரோ...' என்று சஹஸ்ரநாம பாராய ணம் பண்ணினாலும் சரி... நமக்குள்ளே காம, க்ரோத, லோப, மோக, மதமாச்சர்யம் நுழை யுமா...? நுழையவே நுழையாது!

ஆகையினாலே, பெரிய விஷயங்களைச் சுலபமாக நமக்கு எடுத்துக்காட்டுகிறது சஹஸ்ர நாமம். நம்மைப் போன்ற சம்சாரிகளுக்கு சஹஸ்ரநாமத்தைக் காட்டிலும் வேறு புகலிடம் இல்லை. சஹஸ்ரநாமத்தைச் சொல்வதைக் காட்டிலும் வேறு வாய்ப்பு எதற்கு நமக்கு?

'யக்ஞும் யக்ஞேன கல்பதாம்...' - 'யக்ஞும் யக்ஞும்' என்று பலமுறை வருகிற ஒரு மந்திரம் இருக்கிறது.

யக்ஞத்தினாலே இதெல்லாம் நமக்கு ஏற்படட்டும். அது எந்த யக்ஞமாக வேண்டு மானாலும் இருக்கட்டும்; ...வேதத்தில் பூர்வ காண்டத்தில் பார்த்தோமானால் நிறைய யக்ஞங்கள். இரண்டாவது காண்டத்தில் பார்த் தோமானால் 213 இஷ்டிகள் இருக்கின்றன.

கோரிக்கையுடன், அந்தந்த யாகத்தை, பண்ணுகிறவர்களைக் கொண்டு பண்ணுவோ மேயானால் அந்தந்த பலன்களை அடைய லாம்.

புத்ர காமேஷ்டி யாகத்தைப் பண்ணினால் புத்திர பாக்கியம். காரி என்றொரு இஷ்டி - அதைப் பண்ணினால் மழை பெய்யும். அர சாளும் தன்மை வேண்டும், சக்ரவர்த்தியாக வேண்டும் என்றால் அதற்கொரு இஷ்டி....

சமகத்தைச் சொல்லும்போது 'சமே' 'சமே' என்கிற ஒலி வரும்.

அக்னியிடத்திலே எனக்கு 'எல்லாம் கிடைக்கட்டும் என்று வரிசையாக வேண்டுதல் அது. ஏகப்பட்ட கோரிக்கைகள் சமகத்திலே! என்னென்ன பகவானிடத்திலே கோருவது என்பதைக் கூட சமகத்தைக் கொண்டுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாமாகக் கேட்டோமானால் ஏதாவது அல்ப விஷயத் தைக் கேட்போம் என்று வேதமே அதையும் நமக்குக் கற்றுத் தருகிறது!

சொல்லத் தெரியாமல் நாம் திகைத்து, ஏடாகூடமாய்க் கேட்காமல் இருக்க வேண் டும். அபரிமிதமாய்க் கொடுக்கக்கூடியவன் பர மாத்மா. நமக்கு என்ன கொடுக்க வேண்டும் எந்தெந்தக் காலத்தில் கொடுக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியாதா? நாமாகப் பிர யத்தனப்பட்டால் அது கிடைக்காது.

ஆகையினாலே சமகத்திலே முந்நூறுக்கும் மேற்பட்ட கோரிக்கைகள்.

இதற்குப் பல ச்ருதி (பலன் விளக்கம், சொல்லும்போது, 'யக்ஞத்தினாலே இவன் தீர்க்காயுசுடன் இருக்கட்டும்' என்றொரு விளக் கம் தருவதுண்டு. நேத்திரம் பூரணமாக இருக் கட்டும்; நல்ல முறையில் கடைசி வரை பார்வை தெரியட்டும். செவி பரிபூரணமாகக் கேட்கட்டும். நல்ல மனம்; வாக்கு இவனுக்கு ஆயுள் காலம் பூராவும் இருக்கட்டும்... இதை யெல்லாம் உள்ளடக்கித்தான் 'பூரண ஆயு ளோடு இரு' என்று ஒருத்தருக்கு வேதம் ஆசீர்வாதம் பண்ணுகிறது.

நூற்றி மூன்று வயது ஆகிறது ஒருவருக்கு.

கண்ணும் தெரியவில்லை; காதும் கேட்கவில்லை. 'லொக் லொக்' என்று சதா இருமல். 'இந்த வாழ்க்கை இன்னும் எதற்கு...?' என்று தானே அவருக்குத் தோன்றும்! அவரைப் போய் 'சதமானம் பவதி!' என்று வாழ்த்தினால் கோபம் வராதோ...?

ஆகையினால்தான் பூரண ஆரோக்கியத்தையும் சேர்த்து அருள்கிறது வேதம்.

முப்பது வயதிலே பேசுகிறபோது வாக்கு எப்படி இருந்ததோ அப்படியே எப்போதும் இருக்கட்டும். 90 வயதிலும் அப்படியே இருக்கட்டும்.

அந்த மாதிரி வாக்கைத் தர, சரஸ்வதியை வேண்டுகிறது வேதம். அவள் ஓடிவந்து வாக்கு பலம் தருவாள்.

மனம் - நல்ல முறையிலே இருக்க வேண்டும். சலிக்காத மனம் வேண்டும். எம்பெருமான் திருவடியிலே பற்றும் தர்மத்திலே வைத்துள்ள பற்றும் மனத்துக்குச் சலிக்காமல் இருக்க வேண்டும். ஆசார்யாள் திருவடியில் வைக்கும் பற்றும் சலிக்காமல் நிலைக்க வேண்டும்.

ஆத்மா, அனர்த்தப்படாமல் நல்ல வகையிலே விளங்க வேண்டும்.

இந்த யக்ஞத்தினாலே இத்தனையையும் நாம் சம்பாதிக்கிறோம். யக்ஞமும் யக்ஞத்தினாலேயே நிலைத்திருக்கிறது.

இப்போது ஒரு விஷயத்தை நன்றாக கவனிக்க வேண்டும்...

யக்ஞம் என்ற சப்தத்தினாலே யார் சொல்லப்படுகிறார் இங்கே...?

வேதபாஷ்யாதிகாரியான சிருங்கேரி பதின்மூன்றாவது பீடாதிபதி வித்யாரண்ய ஸ்வாமிகள் சொல்கிறார்... (அவர் சுவாமி தேசிகனுடைய சமகாலத்தவர்)

வித்யாரண்யர் அழகாக பாஷ்யம் எழுதியிருக்கிறார் :

'யக்ஞத்தினாலே மறைத்துச் சொல்லப்படுகிறவன் யார்?' என்பதற்கு வேதத்திலேயே பிரமாணம் காட்டுகிறார்.

யக்ஞ சப்தத்தினாலே சொல்லப்படக் கூடியவன் சாக்ஷாத் மஹாவிஷ்ணு!

அதற்குப் பிரமாணம் :

'யக்ஞோவை விஷ்ணு:'

'யக்ஞமல்லவா விஷ்ணு! அப்படிப்பட்ட யக்ஞ ஸ்வரூபனான, யக்ஞ வடிவினனான எம்பெருமானாகிய விஷ்ணுவுக்கு இந்த ஹவிஸானது போய்ச் சேரட்டும்' என்பது பொருள்.

இன்னொரு இடத்தில் வேதம் சொல்கிறது:



புத்தகக் கடையில் பொம்மை ஏன்?

"புத்தகக் கடைகளில் பொம்மைகள், இசை கேஸட்கள், வாழ்த்து அட்டைகள் என்று மற்றவற்றையும் விற்பனை செய்வது ஏன்?" ஃபவுண்டன் ஹெட் புத்தகக் கடை மானேஜர் பிள்ளையிடம் கேட்டோம்.

"புத்தகக் கடையில், புத்தகங்கள்தான் விற்க வேண்டும் என்கிற வாதம் ஒரு விதத்தில் சரிதான். ஆனால் இப்போது புத்தகங்களைப் பரிசளிக்க விரும்புகிறார்கள். குறிப்பாக, குழந்தைகளுக்காக புத்தகப் பரிசு தர விரும்புகிறவர்கள் கூடவே பொம்மைகளையும் வாங்க விரும்புகிறார்கள். இசை கேஸட்கள் பரிசளிக்கிற வழக்கமும் அதிகரித்து வருகிறது, அதனால்தான்."

– பாரதி

படம்: யோகா

அதையும் உதாரணம் காட்டுகிறார் வித்யாரண்யர்.

'விஷ்ணுர் வையக்ஞ :'

யக்ஞம்தான் விஷ்ணு. விஷ்ணுதான் யக்ஞம் என்று மாற்றி மாற்றிச் சொல்கிறது! விஷ்ணு ஸ்வரூபமாய் யக்ஞம் இருக்கிறது. யக்ஞ ஸ்வரூபியாய் விஷ்ணு இருக்கிறான். ஒன்றாகச் சேர்ந்தே அவர்கள் விளங்குகிறார்கள்.

யக்ஞ ஸ்வரூபியான பரமாத்மா இந்தப் பலனையெல்லாம் நமக்குக் கொடுக்க வேண்டும்.

விஷ்ணுவைப் பார்த்து வேதம் பிரார்த்திக்கிறது :

'ஹே விஷ்ணு! நீ இந்த யக்ஞத்தை ரக்ஷிப்பாயாக.'

இந்தப் பிரார்த்தனைக்கு என்ன அர்த்தம்?

யக்ஞம் பண்ணுகிறவர்கள், பண்ணச் செய்கிறவர்கள், உடன் இருப்பவர்கள் எல்லோருக்குமே என்ன கொடுக்கும் அந்த யக்ஞம்...?

இப்போது சொன்ன ஆயுள், ஆரோக்கியம், எல்லாம் கொடுக்கும்.

உபநிஷத் என்ன சொல்கிறது தெரியுமோ...? 'மனிதனுடைய ஆனந்தம் ஆரோக்கியத்தில் இருக்கிறது' என்கிறது.

நன்றாகச் சாப்பிட வேண்டும்; சாப்பிட்டது ஜீரணமாக வேண்டும். அதுதான் ஆனந்தம்!

வேதத்தில் அன்ன சூக்தம் என்றே உண்டு. அது என்ன சொல்கிறது என்பதை அடுத்த வாரம் பார்க்கலாம்.


(தொடரும்

ஜூன் 20ந் தேதி முதல்!

நீங்கள் நெடுநாளாக எதிர்பார்த்த ஒரு சிறப்புச் சுற்றுலா

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்

நவக்கிரக வழிபாட்டுச் சுற்றுலா



மக்களின் நீண்டநாள் ஆவலை நிறைவேற்றும் சுற்றுலா

- தமிழ் நாட்டிலுள்ள ஒன்பது கோள்களுக்கான கோயில்களில் வழிபாடு செய்யவும் மன அமைதி காணவும் அரியவாய்ப்பு!
- சென்னையிலிருந்து <u>வெள்ளிதோறும்</u> இரவு புறப்பட்டு திங்களன்று காலை மீண்டும் சென்னை திரும்பும்!
- பக்தர்களை மகிழ்வூட்டும் இச்சுற்றுலா 20.6.97 அன்று முதல் ஆரம்பம்

சொகுசுப் பேருந்துக் கட்டணம் -
(தங்கும் இடவசதி உட்பட)

ஆள் ஒருவருக்கு ரூ. 575/-

முழு விவரங்களுக்கும் பயண முன்பதிவிற்கும் :
விற்பனை மற்றும் விசாரணை பிரிவு,

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
3, ஈ.வெ.ரா. பெரியார் சாலை,
சென்னை - 600 003
போன் : (044) - 560294 / 561385

புதுவை நோக்கிச் செல்லும் புதுமைச் சுற்றுலா:

கண்டுகளிக்கும் இடங்கள் : மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி, ஆலயம், பாண்டிச்சேரி அரவிந்தரின் ஆசிரமம், ஆரோவில், மாத்ரி மந்திர், கடற்கரை, திருவக்கரை... இன்னும் பல

கட்டணம் ரூ. 150/-

TOP ANGLE

வண்ணப்படம் : பாலாஜி பிரபு



சேச்சே! காவிரி பிரச்னை
தீர்ந்து விடலை!
இது கனவு சீன் சார்!

அவகாசம்..

ரிஷபன்

அம்மியில் அரைபடும் சத்தம் கேட்டது. மீனாட்சிதான் சட்னி அரைத்துக் கொண்டிருக்கிறாள். அவசரம் என்பதால் சற்று வேகமான 'கடகடா'.

பன்னீர்செல்வம் எதையோ மிதித்து விட்ட பதற்றத்தில் இருந்தான்.

"எதுக்கு... அவங்களுக்கு வீண் சிரமம்" என்றான் நாலாவது தடவையாக.

கிராமத்திலிருந்து வருகிறான். சரக்கு பிடிக்க வந்தானாம். எங்கள் வீட்டில் கொடுக்கச் சொல்லி மாமா கொடுத்து விட்ட பார்சலைச் சேர்க்க வந்தான்.

"அப்ப... நான் வரட்டுமா..." என்றான் பார்சலைக் கொடுத்த மறு நிமிடம்.

"அவர இருக்கச் சொல்லுங்க மாமா. இட்லி அவிச்சாச்சு. சாப்பிட்டுட்டுப் போவட்டும்" என்றாள் மீனாட்சி.

'என்ன சொல்றே' என்கிற ரீதியில் அவனைப் பார்த்துச் சிரித்தேன்.

"இல்ல. நான் போவணும். இன்னொரு தடவ வரப்ப பலகாரம் சாப்பிடறேன்" என்றான் சற்றே நெளிந்து.

"சும்மா இருப்பா. பிகு பண்ணிக்கிட்டு.." என்றேன் உரிமையாய்.

"பஸ்ஸை விட்டு இறங்கின உடனே பஸ் ஸ்டாண்டு கடையில டிபன் முடிச்சாச்சு. கைய வேணா வாசம் பாருங்க" என்றான்.

"பொறவு எத்தனை நேரம் பஜார்ல சுத்தினே... செரிச்சுப் போயிருக்கும்."

"இன்னொரு தடவை வரப்ப..." இழுத்தான்.

எப்படியாவது தட்டிக் கழித்துப் போகிற உணர்வில் அவன் இருப்பது புலனானது.

"சரி... கட்டித் தாரேன். போறப்ப பஸ்ஸுல திங்கட்டுமே" என்றாள் மீனாட்சி.

சபாஷ். சரியான போட்டி.

"அப்புறம் என்ன பன்னீரு. உக்காரு."

"ரெண்டே நிமிசம். கார சட்னி அரைச்சிடறேன். தூளு கூடத் தீர்ந்து போச்சு."

மீனாட்சி உள்ளே போனாள்.

பன்னீர் இருக்கை நுனியில் அமர்ந்தான். தடுமாற்றம் தெரிந்தது.

"உன் தங்கச்சி... எப்படி இருக்கா? ஏதாச்சும் விசேஷம் உண்டா..." என்றேன்.

"கடுதாசி வரலே... வரணும். எதிர்பார்த்துக்கிட்டிருக்கோம்."

"ஒனக்குப் போட்டியா யாரோ கடை ஆரம்பிச்சதா சொன்னியே... போன தடவை பார்த்தப்ப."

காத்திருத்தல் தெரியாமல் இருக்க பேச்சில் வலை போட்டேன். நழுவி ஓட வகை புரியாத தவிப்பு அவனிடம்.

"ரெண்டு மணி நேரந்தான்... பஸ்ஸுல. டிபனெல்லாம் வேணாமே."

"இதோ ஆயிருச்சு."

மீனாட்சியின் குரல் கேட்டது. எவர்சில்வர் டப்பாவில் போட்டுக் கொண்டு வந்தாள்.

"டப்பாவா... அது எதுக்கு"

"அட. அடுத்த தடவை வரப்ப கொண்டு வாயேன்" என்றேன்.

"இல்லே. பொட்டலமாக் கட்டிருங்க. டப்பால்லாம் சிரமம்."

மீனாட்சி மீண்டும் உள்ளே போனாள்.

தினசரிப் பேப்பருடன் நானும் போனேன்.

"என்ன... இப்படி அலட்டறான் ஒரேயடியா. நம்ம வூட்டு பலகாரம் கசக்குதாமா?" என்றேன்.

"அப்பவே சாப்பிடப் படுத்துவாரு. அம்மா சொன்னாத்தான் கை நனைப்பாரு. வீம்புக்கார மனுஷன்."

மீனாட்சியின் குரலில் லேசான பதற்றமும் பழைய நினைவுகளிலான மலர்ச்சியும் தென்பட்டன.

நறுவிசாய்க் கட்டிக் கொடுத்தாள்.

"நீயே கொடு அவன்கிட்டே" என்றேன்.

பன்னீர் எழுந்து நின்றிருந்தான்.

ரிலே ரேசில் ஓடக் காத்திருப்பவன் போலத் தோற்றம். பொட்டலம் கைக்கு

வந்ததும் ஓடப் போகிறான்.

மீனாட்சி அவனிடம் பொட்டலத்தை நீட்டினாள். கீழே போட்டு விடுகிறவன் மாதிரி நுனியில் பற்றி வாங்கினான்.

"அப்ப வரட்டுமா..."


"சரி. வர ஞாயிறு முடிஞ்சா வரோம்னு சொல்லு."

"வரேன்" என்றான் யாரையும் பார்க்காமல் தரையைப் பார்த்து.

போனதும் கதவை மூடினேன்.

"ஹப்பா. அவனைச் சாப்பிட வைக்க இத்தனை சிரமமா?" என்றேன்.

மீனாட்சியின்



விழியோரங்கள் பனித்திருந்தன. நான் அதைக் கவனிக்காதவன் போலப் போய் அமர்ந்தேன்.

"சரி. எனக்கு இட்லி வையி. சட்னி இருக்கில்லே..."

கொண்டு வந்து வைத்தாள்.

"நீயும் ஒக்காரு. சேர்ந்து சாப்பிட்டுரலாம்."

"வேணாம். நீங்க சாப்பிடுங்க. பொடிக்கு வறுத்து வச்சேன். அதை அரைச்சுட்டு வந்துடறேன்" என்றாள் பிசிறிய குரலில்.

எடுத்துப் போட்டுச் சாப்பிட ஆரம்பித்தேன்.

மீனாட்சி அரைக்கிற சத்தம் மீண்டும் கேட்டது. அழுது கொண்டிருப்பாள் நிச்சயமாய். தன் கண்ணீரை நான் பார்த்து விடக் கூடாது என்றுதான் உள்ளே போய் விட்டாள்.

இப்போது நான் கவனித்துக் கேட்டாலும் 'மிளகாய்த் தூள் கண்ணுல பட்டுருச்சு' என்று சுலபமாய் மழுப்புவாள்.

பரவாயில்லை. அழட்டும். முன்பை விடக் கண்ணீர் இப்போது குறைந்திருக்கிறது. தினசரி என்பது, வாரம், மாதம் ஒன்று என்ற அளவில் ஆகிவிட்டது. பன்னீரும் இப்போது தன் வருகையை மிகவும் குறைத்துக் கொண்டிருக்கிறான். கிராமத்திலேயே சொந்தத்தில் வேறொருத்தியைக் கட்டி வைக்கச் செய்யும் முயற்சிகளுக்கு இப்போது எல்லாம் மறுப்புச் சொல்வதில்லையாம். தகவல் வந்தது. எப்படியும் மடங்கி விடுவான்.

சேர்த்து விட்டிருந்த நெஞ்சங்களுக்கு உதறித் தள்ளத் தேவையான அவகாசமும் தரவேண்டும் இல்லையா. பாவம், மீனாட்சி.. தேறி நிமிரட்டும்.



இன்சாட் 2-டியும் சாம்பார் பொடியும்

பிரெஞ்சு கியானாவில் கொரவ் எனும் ஏவுதளத்திலிருந்து இன்சாட் 2-டி இந்த ஜூன் 4-ஆம் தேதி வெற்றிகரமாகச் செலுத்தப்பட்ட சமாசாரம், தெரிந்த விஷயம்தான்.

ஆனால், இந்த கொரவ் நகருக்கு, இன்சாட்டை ஏவிவிடப் போன நம் இந்திய விஞ்ஞானிகளில் முக்கால்வாசிப் பேர் கன்னடத்துக்காரர்கள்; கொஞ்சம் பேர் தமிழ் – தெலுங்கு, மலையாளம் – என்பது தெரியுமோ?

இவர்கள் தங்கி இருக்கும் இடத்தை ஒரு மினி கர்னாடகா என்று சொல்லிவிடலாம். திரும்பின பக்கம் எல்லாம் கன்னடம்தான் காதில் விழுகிறது!

ஒரு விஞ்ஞானி சொன்னார் : "நாங்கள் பலரும் சாம்பார் பொடி கொண்டு வந்திருக்கிறோம். இதுமாதிரி இன்னும் கொஞ்சம் சமையல் ஐட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறோம். ஆளாளுக்கு முறை வைத்துக்கொண்டு சமையல் செய்துவிடுகிறோம்!"

சிலர் காலையில் சமைத்துச் சாப்பிட்டுவிட்டுப் போகிறார்கள். மதியம் வேலையிலிருந்து திரும்பும் சில விஞ்ஞானிகள், சம்பிரமமாகச் சமைத்துச் சாப்பிட்டு விடுகிறார்கள்.

கொரவ்வில் இந்திய ரெஸ்ட்டாரன்ட்டைத் தேடினாலும் கிடைக்காது. ஷெல்ஃபுகளில் எல்லாம் வரிசையாக நம்மூர் ஊறுகாய் பாட்டில்களையும், விதவிதமான ரசம்-சாம்பார் பொடி வகையறாக்களையும் அடுக்கி வைத்திருக்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள். அதுவும் சமைக்கிறபோது கமகமவென்று அறை முழுக்க வாசனை மூக்கைத் துளைக்கிறது!

சாயங்கால வேளைகளில், வீடியோவில் இந்தியப் படங்களைப் போட்டு ரசித்துப் பார்க்கிறார்கள். அபூர்வமாக இங்கே வசிக்கும் ஒரே ஒரு இந்தியக் குடும்பத்திடமிருந்து கேசட்டை இரவல் வாங்கிக் கொண்டு வந்து விடுவார்களாம்!

பூரி-பாஜி எல்லாம் செய்துகொண்டு, ஒரு படகையும் அமர்த்திக்கொண்டு, உள்ளூர்வாசிகளுடன் பிக்னிக் வேறு! இந்தியாவிலிருக்கும் தங்கள் குடும்பத்தினரோடு பேச எத்தனை ஃபோன் கால்கள் வேண்டுமானாலும் இவர்கள் செய்து கொள்ளலாம். அத்தனையும் இலவசம்.

இதற்கு முந்தைய இன்சாட் ஏவுதலின் வெற்றியைக் கொண்டாடியபோது, இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாக ஸ்வீட்டுகள் விமானத்தில் இங்கு பறந்து வந்தன.

லுங்கியும், பனியனுமாக இந்தத் தென்னாட்டு விஞ்ஞானிகள் சமையலிலும் வீட்டு வேலைகளிலும் ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்வது கண்கொள்ளாக் காட்சி!

என்னதான் பிரெஞ்சு கியானாவில் இருந்தாலும் இவர்கள் இந்தியாவின் மண்ணையும் மணத்தையும் ரொம்பவே மிஸ் பண்ணுகிறார்கள். தங்கள் ஏவுதள அறையின் கதவில், 'ஐ லவ் இந்தியா' ஸ்டிக்கர் இதைத்தான் சொல்லுகிறது!

டைம்ஸ் ஆஃப் இந்தியாவிலிருந்து :
எஸ்.வி.என்.

நோகடிக்கும் நூலகத் துறை!

'எல்லாப் புத்தகங்களையும் அடிமாட்டு விலைக்கு வாங்குகிறார்களே!' என்று பதிப்பாளர்கள் நூலகத் துறை பற்றி ஆதங்கப்படுவது ஒரு பக்கம் இருக்கட்டும்; நூலகங்களுக்கு வாங்குகிற புத்தகங்களை அவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதுதான் விசித்திரம்!

கி. ராஜநார்ாயணன் எழுதிய 'கோபல்லபுரத்து மக்கள்' அனைவரும் அறிந்த ஒரு புத்தகம். சாகித்திய அகாடமி பரிசு பெற்றது. இப்படிப்பட்ட ஒரு நூல் நூலகத்தில் இல்லாமலிருக்கலாமா? நூலகத் துறையின் கவனத்திற்கு இது சென்றது. சேச்சே! இப்படிப்பட்ட புத்தகத்தையெல்லாம் நூலகத்தில் வாங்கி வைக்க முடியாது; அது 'அம்மா'வின் கோபத்துக்கு ஆளாக்கிவிடும் என்று அந்தப் புத்தகத்தை நிராகரித்து விட்டார்கள் 'ஜெ' காலத்தில்.

'அம்மா'வின் கோபத்தைக் கிளறுகிற வகையில் கி. ராஜநாராயணன் அப்படி என்னதான் எழுதித் தொலைத்தார் அந்தப் புத்தகத்தில்? விஷயம் இதுதான்! 'கோபல்லபுரத்து மக்கள்' என்பதைக் 'கோபாலபுரத்து மக்கள்' என்று நூலகத்துறையிலுள்ள ஓர் அதிபுத்திசாலி படித்துத் தொலைத்து ரிப்போர்ட் எழுதித் தொலைத்து விட்டாராம்!

பிரபல எழுத்தாளர் ஒருவரின் இன்னொரு புத்தகம். அதுவும் சாகித்திய அகாடமி பரிசு வாங்கியதுதான். அது நூலகத் துறையினர் கவனத்துக்குச் சென்றபோது, 'இது சாகித்திய அகாடமி பரிசு வாங்கியதுதான் என்பதற்கு என்னய்யா அத்தாட்சி?' என்று கேட்டார்களாம்!

'அட இது கூடத் தெரியாமல் எப்படியய்யா நூலகத் துறையில் வேலை பார்க்கிறீர்கள்?' என்று சம்பந்தப்பட்டவர்களால் வாய் விட்டுக் கேட்க முடியுமா? அப்படிக் கேட்பது ராஜநிந்தனையாகி விடுமே! அதனால் 'அட்டையிலேயே அச்சிட்டிருக்கிறோம் ஐயா! இதோ பாருங்கள்!' என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

'அட போய்யா! அச்சிட்டு விட்டால் நாங்கள் நம்பி விடுவதற்கு என்ன இளிச்சவாயர்களா! போ போ! போய் சாகித்திய அகாடமி பரிசு கொடுத்ததற்கான சான்றிதழைக் கொண்டு வா போ!' என்று திருப்பியனுப்பி விட்டார்களாம்.

பாவம், ஏதோ குடும்ப விஷயமாகப் பல்வேறு ஊர்களுக்கும் சென்று கொண்டிருந்த அந்த எழுத்தாளரைத் தேடிப் பிடித்து அந்தச் சான்றிதழை ஜெராக்ஸ் எடுத்து நூலகத் துறையில் ஒப்படைப்பதற்குள் பெரும்பாடாகி விட்டதாம்!

திருக்குறளுக்குப் பரிமேலழகர் முதல் சுஜாதா வரை பலரும் உரை எழுதிவிட்டார்கள். கலைஞரும் ஓர் உரை எழுதியிருக்கிறார். ஓர் ஆராய்ச்சி மனோபாவத்துடனோ அல்லது கலைஞர் தமது தனித்திறமையால் ஏதாவது புதிதாக விளக்கம் கொடுத்திருப்பாரே என்கிற எண்ணத்துடனோ பலரும் நூலகத்துக்குச் சென்று, கலைஞர் உரையைத் தேடலாமல்லவா! அதை வாங்கி வைப்பதுதானே நியாயம்!

'ஆனால் நூலகத்துறையினர் அப்படியெல்லாம் வாங்கி விடுவார்களா என்ன? எதையும் அறிவுக் கண்கொண்டு ஆய்ந்து ஆய்ந்து வாங்குகிறவர்களல்லவா அவர்கள்! அப்படிப்பட்ட ஆராய்ச்சிக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு கலைஞரின் உரை நூலைப் பார்த்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்! 'இந்தப் புத்தகத்தில் என்னய்யா புதிதாக இருக்கிறது; ஒன்றுமே இல்லையே!' என்று ஒரே போடாகப் போட்டு, அந்த நூலை ஓரங்கட்டி விட்டார்களாம்!

நூலகத் துறையில் வேலை பார்க்கிறவர்களின் அதிபுத்திசாலித்தனத்துக்கு இன்னொரு உதாரணம் :

'ஐயா நான் புதிதாகப் பதிப்பித்திருக்கிற புத்தகம் இது. நூலகத்திற்கு வாங்கினால் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். எனக்கும் சில நூறு பிரதிகள் விற்றதாக இருக்கும்!' என்று பணிவன்புடன் விண்ணப்பித்திருக்கிறார் ஒரு பதிப்பாளர்.

'சரி, இது எப்படிப்பட்ட தாளில் அச்சிடப்பட்ட புத்தகம்?' கேட்டார் நூலகத் துறையிலுள்ள ஒருவர்.

'மேப்லித்தோ தான் ஐயா, நல்ல தரமான தாள்!'

'இந்தத் தாள் மேப்லித்தோ தான்தான் என்பதற்கு என்ன ஆதாரம்? தாளில் அப்படி ஏதும் குறிப்பிடவில்லையே!'

'ஐயா இது மேப்லித்தோதான். யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்!'

'அப்படியானால் இதைத் தெருத் தெருவாக நான் தூக்கிக் கொண்டு போய், போகிற வருகிறவர்களிடமெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா? எனக்கு வேறு வேலையே கிடையாதா? சரி, இது கிடக்கட்டும். இந்தப் புத்தகம் என்ன சைஸ்?'

'கிரௌன் சைஸ் ஐயா.'

'அப்படியென்று நீங்கள் சொன்னால் போதுமா? இது கிரௌன் சைஸ்தான் என்பதற்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்?'

பாவம், அந்தப் பதிப்பாளர் ஆளைவிட்டால் போதுமென்று ஓடிவந்து விட்டாராம்!

பரிசு பெற்ற புத்தகங்கள் என்றால் அவற்றை உடனடியாக நூலகங்களில் வாங்கி வைக்க வேண்டியதுதான் நியாயம் என்பது மாத்திரமல்ல; கடமையுங்கூட. நூலகத் துறையினர் இது பற்றியெல்லாம் கவலையே படுவதில்லை.

'மருதுபாண்டிய மன்னர்கள்' என்று ஒரு புத்தகம். அந்த மன்னர்களைப் பற்றி மிகவும் ஆராய்ச்சி செய்து எழுதப்பட்ட நூல் என்பதால்தான் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் இலக்கியப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தகுதிகளெல்லாம் நூலகத் துறையிடம் செல்லுபடியாகவில்லை! 160 ரூபாய் விலையுள்ள அந்த நூலை ஒவ்வொருவரும் விலை கொடுத்துத்தான் வாங்கிப் படித்தாக வேண்டும் என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறது நூலகத்துறை!

நமது பள்ளிகள், குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தருகின்றன; கல்லூரிகள் பட்டதாரிகளாக்குகின்றன. கல்வி என்பது வெறும் பாடத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட நூல்களைப் படிப்பதால் மட்டுமே வருவதல்ல; சிறந்த கல்வியாளர்களையும் அறிவாளர்களையும் நூலகங்களிலுள்ள நல்ல நல்ல நூல்களால் மட்டுமே உருவாக்க முடியும். இதுதான் யதார்த்தம்.



இந்த விஷயங்களெல்லாம் நமது கல்வித் துறையோடு சேர்ந்திருக்கிற நூலகத் துறையையும் கவனித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர் அன்பழகனுக்குத் தெரியாததல்ல. நூலகத் துறையின் பைத்தியக்காரத்தனமான இந்தப் போக்குகள் பற்றி அரசல் புரசலாகக் கேள்விப்பட்ட கலைஞரும் 'எல்லாம் பேராசிரியருக்குத் தெரியாததல்ல; அவர் பார்த்துக் கொள்வார்' என்று சமாதானமடைந்திருக்கிறாராம்.

பேராசிரியர் அன்பழகன் மிகச் சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல; மிகச் சிறந்த கல்வியாளர். அதனால்தான் கிரௌன் சைஸும் மேப்லித்தோ பெயரும் தெரியாதவர்களெல்லாமா நூலகத் துறையில் வேலை பார்ப்பார்கள் என்று சந்தேகப்பட முடியாதவராக இருக்கிறார்.

இது மக்களின் அறிவு வளம் பற்றிய விஷயம் என்பதால் இனியாவது பேராசிரியர் தமது மேலான நிலையிலிருந்து கொஞ்சம் கீழிறங்கித் நமக்குக் கீழே எப்படிப்பட்டவர்களெல்லாம் வேலை பார்க்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

— **சாங்கிருத்தியாயன்**

அழகியால் வந்த ஆபத்து!

இஸ்ராயேல் அரசர்களிலேயே, தாவீது குறிப்பிடத் தகுந்தவர். இயேசு பெருமானைக் கூட 'தாவீதின் மகன்' என்றுதான் வம்சாவழி எழுதுவார்கள். எதிரிகளோடு போரிடுவதிலேயே தமது அரசாட்சியின் பெரும் பகுதியைத் தாவீது செலவழித்தார்.

இளவேனில் காலத்தில் அரசர்கள் போருக்குப் புறப்பட்டுப் போவது வழக்கமாக இருந்தது. ஒருமுறை தாவீது தமது படைத் தலைவனான யோவாபை இஸ்ராயேலர்களுக்குத் தலைமை தாங்கப் பணித்தார். அதன்படியே இஸ்ராயேல் படைகள் அம்மோனியர் என்ற எதிரிகளைப் பந்தாடின. அம்மோனியர் விழுந்து போன பறகளாகவும், வெட்டி எறியப்பட்ட நகங்களாகவும் ஆயினர். அவர்கள் ஏரபா நகரத்தைவிட்டு ஓடினர். அந்நகரமோ இளவேனிற் காலத்திலேயே இலைகளை உதிர்த்த காடாக ஆயிற்று. தாவீது அரசர் எருசலேமில் தங்கி இருந்தார்.

ஒருநாள் மாலை வேளை, தாவீது தம் படுக்கையிலிருந்து எழுந்து அரண்மனை மாடியில் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது கீழே குளித்துக் கொண்டிருந்த ஒரு பெண், அவரது கண்களில் சிக்கினாள். சிற்பத்தைப் போல இருந்த அந்தப் பெண்ணின் உடல்வாகு தாவீதைத் தள்ளாட வைத்தது. ஆகவே, அரசர் தம் பணியாளரை அனுப்பி அவள் யாரென்று விசாரித்து வரச் சொன்னார். "அவள் எலியாவின் மகளும் இத்தியர் உரியாவின் மனைவியுமான பத்சேபா" என்று பணியாளர்கள் தெரிவித்தார்கள்.

தாவீது தமது தூதர்களை அனுப்பி அந்த அழகியை வரவழைத்தார். அவள் அவரிடம் வந்ததும் தமது இச்சைக்கு அந்தப் பெண்ணை இணங்க வைத்தார். அவர் அரசர் ஆதலால் தமது படுக்கையில் அவளைப் பங்கு போடுவதற்கு அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை. அரசரின் கேளிக்கை முடிந்ததும் அந்தப் பெண் தனது இல்லத்திற்குத் திரும்பினாள். விதி வேறு மாதிரி வேலை செய்தது. அந்தப் பெண் கருவானாள். தான் தாவீது அரசரால் தாயாகப் போகிற சமாச்சாரத்தை ஆளனுப்பி அரசருக்குத் தெரிவித்தாள். தாவீதோ அதிர்ச்சி அடைந்தார். தாவீது அரசருக்கு வெற்றி தேடித் தருகிற போரில் எப்போதும் வாளையே தடவிக் கொண்டிருந்த உரியாவின் கைகள் மனைவியின் தோளைத் தொட மறந்தன.

போர் முனையில் உரியா இருந்தபோது பத்சேபா தாயானது எப்படி என்பது பூகம்பமாக வெடித்து விட்டால் என்ன செய்வது என்று தாவீது அரசர் தவித்தார். அழகியைக் கொன்று போடவும் மனதில்லை; அவளின் கணவனுக்கும் அரசரிடம் பக்குவமான பதிலும் இல்லை. என்ன செய்வார்? பத்சேபா கருவானதற்குக் காரணம் அவள் கணவனே என்று உறுதிப்படுத்தி விட வேண்டும் என்று அரசர் ஓர் உபாயம் செய்தார். அதன்படியே உரியாவை அழைத்து வீரர்களின் செயல்பாடுகள், அவர்களின் நலன்கள், போரின் போக்கு எல்லாவற்றையும் அறிந்து கொண்டார்! பிறகு பவ்வியமாக "நீ எவ்வளவு நாள்தான் போர் முனையிலேயே பொழுதைச் செலவழிப்பாய்? உனக்கு இளைப்பாறுதல் வேண்டாமா? உன் வீட்டுக்குச் சென்று உன் பாதங்களை நனைத்து வா" என்றார். உரியா அரசரை வணங்கி விட்டுப் புறப்பட்டான். சில நிமிட நேரத்திலேயே அரசர் ஏராளமான பரிசுப் பொருட்களை அந்த வீரனின் வீட்டிற்கு அனுப்பினார். இன்று



வலம்புரி ஜான்

இரவு மாத்திரம் உரியா, பத்சேபாவோடு தங்கிவிட்டால் தமது கவலை ஒழிந்தது என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் தாவீது.

ஆனால், அரசன் ஒன்றை நினைத்தான்; ஆண்டவன் வேறொன்றை நிகழ்த்தினான். பரிசுப் பொருட்கள்தாம் உரியாவின் வீட்டிற்கு வந்தனவே தவிர, கணவனான உரியா வந்து சேரவில்லை. தாவீது அரசருக்கோ தயக்கமும் கலக்கமும் உண்டானது. ஆகவே அவர் தமது பணியாட்களை அனுப்பி அரண்மனை எங்கும் உரியாவைத் தேடினார். இறுதியாக உரியா பணியாளர் சிலரோடு அரண்மனை வாயிலில் தூங்கிக் கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தார்கள். அரசர் தாவீது தமது திட்டம் அஸ்திவாரத்திலேயே ஆட்டம் கண்டதை நினைத்துப் பதைத்தார். உரியாவை மறுநாள் காலை அரசரின் முன் நிறுத்தினார்கள். அரசர் அவனைப் பார்த்து "நெடுந் தொலைவிலிருந்து போரின் களைப்போடு வந்த நீ ஏன் வீட்டிற்கே செல்லவில்லை?" என்று கேட்டார். அதற்கு அவன் பேழையும் (மோசே காலத்திலிருந்து இஸ்ராயேலர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் சுமந்து சென்ற வாக்குத் தத்தத்தின் பேழை) மக்களும் கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். படைத் தலைவரான யோவாபும் என் கூடவே போரிடும் பரிவாரங்களும் திறந்த வெளிகளில் தங்கியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நான் மாத்திரம் வீட்டிற்குச் சென்று குடித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருப்பதா? என் மனைவியோடு மகிழ்ச்சி கொண்டாடுவதா?



உம்மேல் ஆணை. அப்படி நான் செய்யவே மாட்டேன்" என்றான். என் மனைவியோடு மகிழ்ச்சி கொண்டாடுவதா? என்று உரியா கேட்ட கேள்வி கொத்துமுள் ஒன்று தாவீதின் நுரையீரலைக் குத்திக் கிழித்தது போலிருந்தது. அரசரால் கவலையை மெல்லவும் முடிய வில்லை; வெளியில் சொல்லவும் முடிய வில்லை. வெட்டியானுக்குப் பிணம் கிடைக்க வில்லையே என்கிற கவலை. வேதாந்திக்குத் தத்துவம் அகப்படவில்லையே என்கிற கவலை. வேந்தர் வேந்தனுக்கோ மலையைப் பிளக்க முடிகிறது; எலியைப் பிடிக்க முடியவில்லையே என்கிற கவலை. இறுதியாக மலையைப் பிளக்க வேண்டிய மாமன்னன் தாவீது, உரியா என்கிற இலையைக் கிழித்துவிட முடிவு செய் தார். ஆகவே, உரியாவோடு தாவீது உண்டு, குடித்து உற்சாகமாக இருந்தார். சாமானி யனான என்னோடு அரசர்க்கரசரே உண் கிறாரே; குடிக்கிறாரே என்று அரசருக்கு உரியா இதயச் சதையாலும், உடல் எலும்பு களாலும் தனது கற்பனையில் தேவாலயமே எழுப்பினான்.

காலை விடிந்ததும், உரியாவைப் போல வீரன் உலகத்திலேயே இல்லை என்று வசிய மை பூசிய வார்த்தைகளால் அரசர் அவனைப் பாராட்டினார். போர்முனைக்குப் புறப்படு என்று அவனைத் துரிதப்படுத்தினார். கூடவே படைத்தலைவனான யோவாபுக்குக் கைப்படவே ஒரு கடிதமும் எழுதி உரியாவிடம் சேர்த்தார். உரியாவோ தனது மரண சாசனத்தைத்தான் ஏந்திப் போகிறோம் என்பதை மறந்தவனாக வேக வேகமாகப் போர் முனைக்கு விரைந்தான். கடிதத்தில் கண்டிருந்தபடியே யோவாபு போர் முனையில் கடுமையாகத் தாக்குதல் நடக்கும் இடத்திற்கு அருகில் உரியாவை நிறுத்தி வைத்து, எதிரிகள் அவனைக் கொல்லும் படியாகப் பார்த்துக் கொண்டார். இப்படியாக மாசற்ற மாபெரும் வீரனான உரியாவைத் தாவீது தமது தவறை மறைப்பதற்காக மரணத்திற்குக் கையளித்தார்.

நெருப்பைச் சருகுகளால் மறைக்க முடி யாது; வயிற்றுப் பிள்ளையைச் சேலையை இறுக்கிக் கட்டி வழித்தெரிய முடியாது என் பதைத் தாவீது அப்போதைக்கு உணர்ந்து கொள்ளவில்லை. தனது கணவன் போரில் கொல்லப்பட்டான் என்று அறிந்த அந்த வீரனின் மனைவி அழுது புரண்டாள். பிறகு விதவைக்கு வாழ்க்கை வழங்குவதுபோல தாவீது ஒரு நாடகத்தை அங்கேற்றினார். அதன்படியே அவளை அரண்மனைக்குள் அழைத்துக் கொண்டார். போர் முகத்து அஞ்சாது நின்ற மாவீரனின் மனைவிக்கு மறுவாழ்வு தந்தவர் தாவீது என்பதாக மக்கள் நினைத்தனர். உரிய நேரம் வந்தபோது பத் சேபா ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். தனது குழந்தையைத்தான் தாவீது சீராட்டு கிறார் என்பது இஸ்ராயேலர்களுக்குத் தெரி யாது; ஆனால் வல்லமையுள்ள தேவன் நிலத் துக்கடியிலும், நீருக்கடியிலும் நடக்கிறவை களை அறிந்து வைத்திருக்கிற வல்லமை உள் ளவர். ஆதலால் தாவீதை வெறுத்தார். தீர்ப்பு வழங்க வேண்டிய நீதிபதியான அரசனே திருடனாகிவிட்டால் அன்றும் இன்றும் மாறாதிருக்கிற தேவன் விட்டுவிடுவாரா?

அந்த நாளில் பிரபலமாக இருந்த நாத்தான் என்கிற தீர்க்கதரிசியைத் தாவீதிடம் இறைவன் அனுப்பினார். அவரைத் தாவீது வரவேற்று சரியாசனம் தந்தார். அவரோ தாவீ தைப் பார்த்து, "ஒரு நகரில் இரு மனிதர்கள் இருந்தனர்; ஒருவன் செல்வன்; மற்றவனோ ஏழை. செல்வந்தனிடம் ஆடுமாடுகள் ஏராள மாய் இருந்தன. ஏழையிடமோ ஒரே ஒரு ஆட்டுக் குட்டிதான் இருந்தது. அது அவ னோடும் அவனது குழந்தைகளோடும் இருந்து வளர்ந்து பெரியதாகியது. அவனது உணவை உண்டு, அவனது கிண்ணத்திலிருந்து நீர் குடித்து, அவனது மடியில் உறங்கி, அவனுக்கு அது ஒரு மகளைப் போலவே இருந்தது. ஒரு நாள் வழிப் போக்கன் ஒருவன் செல்வந்தனி டம் வந்து சேர்ந்தான். அவனுக்கு உணவு தயாரிப்பதற்காகத் தன்னிடம் உள்ள ஆடு மாடுகளில் ஒன்றைக் கூடத் தொடாமல், அந்த ஏழையின் ஒரே ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து வழிப் போக்கனுக்கு உணவு தயாரித் தான்" என்றார்.

உடனே தாவீது குறுக்கிட்டு "ஆண்டவர் மேல் ஆணை! இதைச் செய்தவன் கட்டாயம் சாக வேண்டும்" என்று கோபம் கொப்புளிக் கப் பேசினார். உடனே நாத்தான் "நீயே அந்த மனிதன்! இஸ்ராயேலர்களின் வல்லமை உள்ள தேவன் இவ்வாறு கூறுகிறார்– நான் இஸ்ராயேலர்களின் அரசனாக உன்னை நியமித்தேன்; நான் உன்னைச் சவுலின் கைகளிலிருந்து விடுவித்தேன்; எதுவும் போதாதென்று நீ கேட்டிருந்தால் இன்னமும் அள்ளி அள்ளிக் கொடுத்திருப்பேன். ஆனால் நீயோ ஆண்டவரின் வார்த்தையைப் புறக் கணித்து அவருடைய பார்வையில் தீயதைச் செய்தாய்; உரியாவை அம்மோனியாரின் வாளுக்கு இரையாக்கி, அவனது மனைவியை அபகரித்துக் கொண்டாய்; ஆகவே இனி என் றும் ஆண்டவரின் வாள் உன் குடும்பத்தை விட்டு விலகாது. ஏனெனில் நீ என்னைப் புறக் கணித்து அடுத்தவனின் மனைவியைக்

கபடமாகக் கவர்ந்து கொண்டாய். இதோ ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்– 'உன் குடும்பத்தினின்றே உனக்கு நான் தீங்கை விளைவிப்பேன்; உன் கண்கள் காண உன் மனைவிமார்களை உனக்கு அடுத்திருப்பவனிடம் ஒப்படைப்பேன்; அவன் பட்டப் பகலில் உன் மனைவியோடு படுத்திருப்பதை நீ பார்ப்பாய்; நீ மறைவில் செய்ததை இஸ்ராயேல் மக்கள் அனைவரும் காணும்படியாக நான் பட்டப் பகலில் நிகழ்ச் செய்வேன். உன் மகன் சாகவே சாவான்" என்று நாத்தான் கூறினார். தீர்க்கதரிசியான நாத்தான் தேவ ஆவியால் நிரப்பப்பட்டு மொழிந்த அருள்வாக்கு அப்போதே நிகழ்ந்தது.

பத்சேபாவின் குழந்தை நோய்வாய்ப்பட்டது. தனது குழந்தையைக் காப்பாற்றும்படி தாவீது இறைவனிடம் கையேந்தினார். பல நாட்கள் உபவாசமிருந்து கதறி அழுதார். அப்போதும் வீரனின் மகனுக்காகவே தாவீது விரதமிருக்கிறார் என்று இஸ்ராயேலர்கள் பேசிக் கொண்டார்கள். என்றாலும் தீர்க்க தரிசியின் வழியாக இறைவன் சொன்னது நிறைவேறிற்று. தாவீதின் மகனான அம்னோன் தனது சகோதரியான அழகி தாமார் என்பவளைக் கற்பழித்தான். தாவீதியின் மற்றொரு மகனான அப்சலோமின் ஆணைப்படி அம்னோன் கொல்லப்பட்டான். அப்சலோம் நாட்டை விட்டு ஓடினான். அவன் இரும்பி வந்தபோது தந்தைக்கு எதிராகவே கலவரம் செய்தான்; அரசரின் மனைவிமார்களோடு உறவு கொண்டான். இறுதியில் அவனும் மாண்டு போனான். தாவீது 'என் மகனே அப்சலோம்!' என்று அழுது புரண்டார். தாவீதின் அரியணைக்காகவே பத்சேபா வழியாகப் பிறந்த சாலமோன் வாலிபத்தை அடைந்தபோது தாவீதின் வாழ்க்கை முடிந்தது... தாவீது அரசரின் நாற்பது ஆண்டுகால ஆட்சி, அரசனே எனினும் ஆண்டவரின் தீர்ப்பிலிருந்து தப்ப இயலாது என்பதற்குச் சந்ததிதோறும் சாட்சியமானது.

(தொடரும்)

புத்தகம் வாங்கலாம்; இலவசமாய் இசையும் கேட்கலாம்!

விற்பனைக்கு உள்ள அத்தனை புத்தகங்களின் தலைப்புகளும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஓர் எழுத்தாளரின் பெயரைச் சொன்னால், அவரது அத்தனை புத்தகங்களின் பட்டியலும் திரையில் ஓடும். சப்ஜெக்ட் வாரியாகப் புத்தகத்தைப் பார்க்கவும் வசதியுண்டு.



நீங்கள் இசைப்பிரியரா? நீங்கள் விரும்பும் இசையை (தமிழ், இந்தி, ஆங்கிலம்) பட்டனைத் தட்டிவிட்டு, ஹெட்போனை மாட்டிக் கொண்டு கேட்டு மகிழலாம். ஒரே நேரத்தில் பதினோரு பேர்வரை தமக்குப் பிடித்த வெவ்வேறு இசையைக் கேட்டு மகிழ இங்கே வசதி உள்ளது.

ஒரு பகுதியில் 'ஆர்ட் கார்னர்' உள்ளது. ஓவியர்கள், புகைப்படக்காரர்களின் படைப்புகள் இங்கே கண்காட்சியாய் வைக்கப்படுகிறது.

இந்தப் புத்தகக் கடையில் விற்கப்படும் காம்பாக்ட் டிஸ்க் (சிடி) மியூஸிக் கேஸட்களில் எதையாவது திருடிக் கொண்டு, வெளியேற முற்பட்டால், 'எச்சரிக்கை ஒலி' ஒலிக்கத் துவங்கி விடும். காரணம், எல்லா சிடி. மற்றும் கேஸட்களிலும் ஒரு மின்காந்த ஸ்டிக்கர் ஒட்டப் பட்டிருப்பதுதான். முறைப்படி, பில் போட்டு, பணம் கொடுத்து வாங்கும்போது, ஒரு பெட்டி போன்ற அமைப்புக்குள் சிடி (அ) கேஸட்டை நுழைப்பதன் மூலம், மின் காந்த சக்தியை இழக்கச் செய்து, வாடிக்கையாளரிடம் தருவார்கள். அதன்பின் நோ ப்ராப்ளம்!

இதெல்லாம். எங்கே என்கிறீர்களா? சென்னையிலுள்ள 'லாண்ட் மார்க்' புத்தகக் கடையில்தான்.

''காந்தத் தன்மை கொண்ட ஸ்டிக்கர் உதவியால், அடிக்கடி இசைத் திருடர்கள் பிடிபடுகிறார்களா என்ன?''

''ம்... குறைந்தது வாரத்துக்கு ஏழெட்டுப் பேர்!'' என்கிறார்கள்.

— எஸ். சந்திரமௌலி,

படம்: யோகா

வட்ட மேஜை

✉ பெண்களுக்கு இட ஒதுக்கீடு குறித்த தலையங்கம் உண்மையிலேயே பெண்கள் முன்னேற்றத்தின் மீது தாங்கள் கொண்டுள்ள அக்கறையைப் புலப்படுத்துகிறது. 'உண்மையான, அவசியமான தகுதிகள் இன்றி, பெண் என்பதால் மட்டுமே பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் படும் ஒருவர், எத்தகைய அபாயகரமான நிலையில் நிறுத்தப்படுவார்! தேசமும் எத்தகைய அபாயத்தை எதிர்நோக்க நேரும்!' - அனைவரும் சிந்திக்க வேண்டிய கருத்து.

கீரப்பாளையம்,

பூங்கோதை கிருஷ்ணராஜ்.

✉ பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு ஆண், பெண், ஜாதி, மத, இனத் தகுதிகள் தேவை இல்லை. நேர்மை, நாணயம், தன்னம்பிக்கை, துணிவு, சுயநலமில்லாத பொதுநலச் சிந்தனை, தேசபக்தி இவை போதும். இதை மக்கள் உணர வேண்டும். ஒதுக்கீடு என்பது எந்தக் காரணத்திற்காகவும் வேண்டாம் என்று உரக்கச் சொல்லிவிட வேண்டும்.

திருநெல்வேலி-7,

எஸ். ஆனந்த பத்மாவதி.

✉ பெரிய பெரிய ஜோதிடர்கள் பலரும் இந்தியாவுக்குத்தான் சுதந்தர தினக் கோப்பை என்று கூறி, மூக்கு அறுபட்ட நிலையில், முன்பே அச்சிடப்பட்ட தராக பதிலில் ஸ்ரீலங்காவுக்குத்தான் அந்தக் கோப்பை என்று கச்சிதமாகக் கணித்து விட்டது பற்றி பெரும் வியப்படைகிறேன். கல்கி, கல்கிதான்!

கொடுமுடி-2, ந. சேதுராமன்.

✉ பார் புகழும் சென்னை 'BAR புகழ்' சென்னையாக மாறி விட்டது என்பதை அழகாக எடுத்து காட்டி விட்டீர்கள். நமது காவல் துறை என்ன செய்கிறது, பார்ப்போம்!

விழுப்புரம்.

வா.க. சங்கீதா பாலு.

✉ 'BAR புகழ்' சென்னைக்கு மட்டுமில்லை. எங்கள் ஜோலார்பேட்டைக்கும் உண்டு. எதிர்க்கட்சியின் முக்கியப் புள்ளி ஒருவர் இங்கே கள்ளச்சாராய பாக்கெட்டுகளை வைத்து பகிரங்கமாக வீட்டிலேயே 'BAR' நடத்துகிறார்!

ஜோலார்பேட்டை,

சோலை. ராஜேந்திரன்.

✉ தமிழக முன்னாள் முதல்வரும், பீகாரின் இந்நாள் முதல்வரும் சந்தித்த 'ஒரு மனோதர்ம சந்திப்பை'ப் படித்துச் சிரித்ததில் வயிற்றில்களுக்கு ஏற்பட்டு விட்டது.

மதுரை-10,

பெ. பொன் ராஜபாண்டி.

✉ நடிகை சுவர்ணாவின் வண்ணப்படம் கல்கி, குமுதம் இரண்டிலும் ஒரே சமயத்தில் அட்டைப்படமாக வந்து அசத்தி விட்டதே!

சென்னை-83,

லட்சுமி ராமாநுஜம்.

✉ 'நாடகத்துக்கு ட்ரெய்லர்' கட்டுரையில் டணால் தங்கவேலுவின் மனைவி ஈ.வி. சரோஜா என்று குறிப்பிட்டிருப்பது தவறு. தங்கவேலுவின் மனைவி எம். சரோஜா, டி.ஆர். ராமண்ணா அவர்களின் மனைவிதான் ஈ.வி. சரோஜா.

அம்மனூர்,

இரா. சம்புலிங்கம்.

✉ 'தி.மு.க. ஆட்சியின் ஓராண்டு சாதனை!' என்ற கேள்விக்குத் தராக அளித்துள்ள பதில் அட்சரம் லட்சம் பெறும்!

பனங்கோட்டூர்,

கு. கணேசன்.

✉ 'இப்போது நடப்பது எம்.ஜி.ஆர் விசுவாசிகளுக்கும் ஜெயலலிதா விசுவாசிகளுக்கும் நடக்கும் போராட்டம்' என்று கூறும் திருநாவுக்கரசு, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஜானகி அரசை ஜெயலலிதாவுக்குப் பின்னால் நின்று போராடிக் கவிழ்த்தவர்களில் ஒருவர்தான் என்பது மட்டுமல்ல, அப்போது நடந்த போராட்டம் யார் யாருக்கு நடந்த போராட்டம்? உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் என்பது • திருநாவுக்கரசு விஷயத்தில் உண்மை!

ஸ்ரீவில்லிபுத்தூர்,

என்.எஸ். தாஸ்.

✉ அதிரடி ஆட்டக்காரர் ஜெயசூர்யாவின் எளிமை, பணிவு பற்றி அறிந்தபோது அவர் மீதுள்ள மதிப்பு மேலும் கூடியது.

தூத்துக்குடி-1,

ப. சுகுமார்.

✉ அப்துல் ஜப்பார். நம் இந்திய அணியைக் குட்ட வேண்டிய இடங்களில் 'நறுக்'கென்று குட்டி விமர்சித்திருக்கிறார். எல்லோருடைய ஒருமித்த எண்ணங்களையே அவர் காட்டி விட்டது மிக அருமை!

திருக்காட்டுப்பள்ளி,

ஜி. பாலகிருஷ்ணன்.

கச்சிதமாகக் கணித்த கல்கி!

● **வெ. ஆனந்தி, விழுப்புரம்.**

? அ.தி.மு.க.வை உடைக்க கருணாநிதி, மூப்பனார் இருவரும் திட்டம் தீட்டி நிறைவேற்றி வருகின்றனர் என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருப்பது பற்றி...?

! தமிழக காங்கிரஸை உடைக்க யார் திட்டம் தீட்டினார்களாம்? சு. சுவாமியும் வை.கோ.வுமா...?

● **கு. அருணாசலம், தென்காசி.** ❑

? முதல்வர், ஜாதிக் கலவரங்களை ஒடுக்க இரும்புக் கரம் உயர்த்தத் தயங்குகிறாரே?

! உணர்ச்சிக் கொந்தளிப்பை இரும்புக் கரத்தால் மட்டுமே அடக்க முடியாது. தீர்க்க தரிசனமும் முன்னெச்சரிக்கையும் மனோதத்துவ ரீதியான அணுகுமுறையும் தேவை. அதுவும் இல்லையே என்பதுதான் குறை! சிவகாசி பக்கங்களில் இன்னமும் ரகளை ஓயவில்லையே...

● **கே. ஏ. பாலமுருகன், திருநெல்வேலி - 8.**

? வாழ்க்கையில் மனிதன் பணம் சம்பாதிப்பதற்கு



• அனுபவம்!

நித்தம் ஒரு போராட்டமே நடத்துகிறான். போராட்டத்தின் பலனாகப் பணம் கிடைத்தாலும் மனத்தில் நிம்மதி தோன்றுவதில்லையே, ஏன்...?

! அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானால் சொகுசுகள்; சொகுசுகள் கிடைத்தால் ஆடம்பரங்கள்; ஆடம்பரம் அமையப் பெற்றால் அட்டகாசங்கள்... இப்படி பணத்தேவை அதிகமாகிக் கொண்டே போவதுதான் காரணம்.

● **தெரிசை ஐயப்பன், திருப்பூர் - 4.**

? 1947 - 1997 (அரசியல்வாதிகள்) ஒப்பிடுக...

! 1947 - எல்லா அரசியல்வாதிகளும் தேசியவாதிகள்!

1997 எல்லா அரசியல்வாதிகளும் சுயநலவாதிகள்.

● **வீ. முத்துக்குமரன், திருமானூர்.**

? 'அ.தி.மு.க. பத்திரிகைகளை நம்பி இல்லை; தொண்டர்களை நம்பித்தான் இருக்கிறது' என்கிறாரே நெடுஞ்செழியன்?

! இதை 'ஜெ' ரசிக்க மாட்டாரே! 'ஜெ.வை நம்பித்தான் இருக்கிறது' என்றல்லவா சொல்ல வேண்டும்!

● **கு. கணேசன், காட்டாங்குளத்தூர்.**

? 'காவிரி டிரிப்யூனலில் இடைக்காலத் தீர்ப்பாக' உத்தரவிடப்பட்ட 15 டி.எம்.சி தண்ணீரை விட கூடுதலாகவே நாம் பெற்றுள்ளோம்' என்று தமிழக பொதுப்பணித் துறை அமைச்சரும், 'இல்லை இல்லை... 5 டி.எம்.சி. தண்ணீர் மட்டும்தான் நாங்கள் திறந்து விட்டோம்' என்று கர்நாடகா நீர்ப்பாசன அமைச்சரும் கூறியிருப்பது பற்றி...?

! அவரவர் மாநில மக்களை சந்தோஷப்படுத்தப் பேசியிருக்கிறார்கள். பருவ-மழை என்னவோ 'யாரையும் சந்தோஷப்படுத்தத் தயாராயில்லை' என்று பயமுறுத்துகிறது.



• எண்ணிக்கை!



• இளமை!

● **கே. பெருமாள், கூனியூர்.**

? ராஜேஷ் பைலட், கேசரி, சரத்பவார் மூவரில் வெற்றி யாருக்கு...?

எண்ணிக்கை அடிப்படையில் ஒரு வேளை கேசரி வெற்றி பெற்று விடலாம்; ஆனால் அது காங்கிரஸ் கட்சிக்குத் தோல்வியாகவே அமையும். பவாரின் அனுபவமும் செல்வாக்கும் ராஜேஷ் பைலட்டின் துடிப்பும் இளமையும் வெற்றி பெறாது போனால் அதற்கு அவர்களுடைய விட்டுக் கொடுத்துச்

இரட்டை இலைச் சின்னம் முடக்கப்படுமா..?



• பஸ்...

• ...போட்டி!



செயல்படாத பிடிவாதமே காரணமாகும்.

● சாம் பால் சோப்ரா, மதுரை – 1.

? கலைஞருக்கு உங்கள் பிறந்த நாள் வாழ்த்து...?

! ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படுவது போல் இப்போது நடக்கிற உங்கள் ஆட்சி அமையட்டும்!

● எஸ். வைத்தியநாதன், மதுரை – 14.

? அம்மை தடுப்பு மருந்துக்குப் பதிலாக இன்சுலின் மருந்து ஊசி செலுத்தப்பட்டு, மஹாராஷ்டிரத்தில் 21 குழந்தைகள் மரணமடைந்துள்ள துயர சம்பவம் பற்றி...?

! ஒரு பக்கம் மருத்துவ சாதனைகள்; அறுவைச் சிகிச்சை அற்புதங்கள். இன்னொரு பக்கம் இதைப் போன்ற அடிப்படை விஷயங்களில் அலட்சியப் போக்கு... கவலைக்குரிய நிலை இது. இந்த லட்சணத்தில், நடவடிக்கை எடுக்கப் போனால் டாக்டர்கள் ஒட்டுமொத்தமாக எதிர்ப்புக் குரல் கொடுத்துச் சீறுவதுதான் அநியாயம்.

● ஆர். லோகநாதன், நாகூர் – 2.

? இரட்டை இலை சின்னம் முடக்கப்படுமா...?

! முடக்கப்படுமா, தெரியாது; முடக்கப்பட வேண்டும் என்பது உறுதியாகத் தெரியும்.

● வ. திருநாவுக்கரசு, தெங்கால் அஞ்சல்.

?. நக்மா, ரோஜா பெயர்களில் போக்குவரத்துக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீவில்லிபுத்தூரில் போஸ்டர்கள் ஒட்டியிருக்கிறார்களாமே...?

! அடுத்து நக்மா ரசிகர் மன்றத்துக்கும் ரோஜா ரசிகர் மன்றத்துக்கும் இடையே கலவரமும் கைகலப்பும் எதிர்பார்க்கலாம். நடிகர் சங்கங்களிடையே நடப்பது ரசிகர் சங்கங்களிடையே நடக்காதா என்ன...!?

● இரா. கல்யாணசுந்தரம், மதுரை – 9.

? முதல்வர் தந்த காசோலையை லீலாவதியின் கணவர் திருப்பி அனுப்பியது சரிதானா...?

! காசோலையை அவர் திருப்பியனுப்பியது அவருடைய மனச்சாட்சி அளவில் சரி. அவர் கூறுகிற காரணமும் மறுக்க முடியாத ஒன்று. அதே சமயம் 'காசோலையைத் திருப்பி அனுப்பலாம்; அத்துடன் இணைந்த மனிதாபிமானத்தையும் அனுதாபத்தையும் அவரால் திருப்பியனுப்ப முடியாது' என்ற முதல்வரின் கருத்தும் சரியான ஒன்றுதான்.

● மேலப்பாதி, எஸ். நாகராஜன்.


? கோஷ்டி பூசலில் முதல் இடம் வகிப்பது இ. காங்கிரசா? அ.தி.மு.க.வா?

! முன்னது அகில இந்திய ரீதியிலும் பின்னது

• தெரியாதா!



• வாழ்த்து!



மாநில ரீதியிலும் நடப்பதால் முன்னதற்கே முதல் மார்க்கு!

● சி. கண்மணி சிவாஜி, கிரக்கனூர் அஞ்சல்.

? கவிதைகள் சமூகத்துக்கு ஆற்றிய சாதனைகள் என்ன...?

! காதல் முதல் – தேச பக்தி வரை தூண்டியிருக்கின்றன. இலக்குகளை அடைய துணிவைத் தந்துள்ளன. கலையுணர்வை ஊட்டுகின்றன. நல்ல சமுதாயத்தை உருவாக்குவன கவிதைகள்; நல்ல கவிஞர்களை உருவாக்குவது சமுதாயம்.

● மு. இரவிச்சந்திரன், சேலம்.

? 'அ.தி.மு.க. தேங்காயாக உடையவில்லை... சில நார்கள்தான் உதிர்ந்துள்ளன' என்கிறாரே சேடப்பட்டி...?

! நார்கள் அடர்த்தியாய் இருக்கும் வரை தேங்காய் நீண்டநாள் கெடாமல் இருக்கும். நார் உதிர உதிர, சீக்கிரமே அழுகிப் போய்விடும்! சேடப்பட்டிக்குத் தெரியாதா...?!

• வளமான கற்பனை!





• தப்பு! தப்பு!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
கு. அருணாசலம்,
எம்-109, வீட்டு வசதி வாரியம்,
தென்காசி - 627 811

ரஜினி அதிசயம்!

என் வாழ்க்கையில் மகத்தான பல திருப்பங்களை ஏற்படுத்திய ஆண்டு, 1967.

நம்பியாரின் வற்புறுத்தலால் நான் சபரி மலைக்கு மாலை போட்டபோது, முதலில் விரதமெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வருமா என்று தயங்கினேன். ஆனால், மனிதன் எதையும் தீர்மானிக்கிறவனல்ல; இறைவனின் தீர்மானங்களைச் செயல்படுத்த உதவும் வெறும் கருவிதான் என்பதை அப்போது உணர்ந்தேன்.

பிறந்ததிலிருந்தே அசைவ உணவுப்பிரியன் நான். பள்ளி நாட்களிலிருந்தே புகை பிடிக்கப் பழகியவன். நாடக காலத்திலிருந்தே மது அருந்தத் தொடங்கியவன்.

விரதம் என்ற பெயரில் இவற்றையெல்லாம் விட்டுவிட சாத்தியம்தானா? அதுவும் என்னால்?

விட முடிந்தது! அதுதான் இறைவன் சித்தம்.

அந்த இரண்டு மாத காலத்தில் என் கெட்ட பழக்கங்கள் அனைத்தையும் விட்டொழித்தேன்!

குறிப்பாக, மதுவை நிறுத்தியதன் பலன் உடனே தெரிந்தது! எப்போதும் ஒருவித மந்த கதியிலேயே இயங்கி வந்த என் மூளை விழிப்புப் பெற்றது. சிந்தனை கூர்மையானது. சுறுசுறுப்பாக வேலை செய்ய முடிந்தது. அதுவரை செய்த பிழைகளை எண்ணிப் பார்த்து, திருத்திக் கொள்ள முடிந்தது. வாழ்க்கையில் நமக்கு நேர்கிற நன்மையும் தீமையும் நம்மாலேயேதான் உண்டாக்கிக் கொள்ளப்படுகின்றன என்கிற பேருண்மை விளங்கியது.

மது, மாமிசம் ஒதுக்கி, தினம் இருவேளை குளித்து, பூஜை செய்து, கோவிலுக்குப் போய், தியானம், யோகா என மனத்தை ஒருமுகப்படுத்தியதன் விளைவு - தொழிலில் என் ஏறுமுகம் வீறு கொள்ளத் தொடங்கியது!

மலைக்குக் கிளம்புகிற தினம் வந்தது. வேறு சிந்தனை இல்லாமல் எப்போதும் இறை நினைப்புடன் இருந்த அந்தச் சில தினங்களை இன்றுவரை மறக்க முடியவில்லை.

நிம்மதியான தரிசனம். பூரண திருப்தி. எங்கோ, யாரோ எனக்கெனப் பிரத்தியேகமாக வெளிச்சம் போட்டாற் போலிருந்தது.

அந்த நிம்மதிக் குளத்தில் கல் எறிந்தாற்போல, மலையிலேயே ஒரு கெட்ட செய்தி கேட்கும்படி ஆனதுதான் துரதிர்ஷ்டம்.

'சென்னையில் எம்.ஜி.ஆருக்கும் எம்.ஆர். ராதாவுக்கும் மனவேற்றுமை ஏற்பட்டு, மோதலாகி, இருவரும் பொது மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருக்கிறார்கள்...'

அதிர்ந்து போனேன்! என் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பம் ஏற்படக் காரணமாக இருந்தவருக்கு இப்படியொரு விபரீதத் திருப்பமா? நம்ப முடியவில்லை.

இருவருமே நல்ல கலைஞர்கள். தமிழ்த் திரையுலகின் இரு பெரும் ஜாம்பவான்கள். அந்தச் சம்பவத்தை விதி என்றுதான் சொல்ல வேண்டும்.

அவர்கள் நலம் பெற ஐயப்பனைப் பிரார்த்தித்துக்கொண்டு, ஊர் திரும்பினேன்.

வந்ததும் முதல் காரியமாக மருத்துவமனை சென்று எம்.ஜி.ஆரைப் பார்த்தேன். நடந்தவற்றை அவர் என்னிடம் விளக்கிச் சொன்னார். அவர் நலம் பெற வாழ்த்துச் சொல்லி விட்டுத் திரும்பினேன்.

என் பிரார்த்தனையும் கோடிக்கணக்கான தமிழர்களின் பிரார்த்தனையும் வீணாகவில்லை. அவர்கள் பிழைத்து எழுந்தார்கள். நான் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தேன்.

என் வாழ்க்கை ஓர் உன்னதமான பாதையில் திரும்பக் காரணமாக இருந்தவர்கள் நம்பியாரும் எம்.ஜி.ஆரும்தான். இருவருக்கும் எப்போதும் என் மனம் நன்றி சொல்லிக் கொண்டே இருக்கும்.

ஆனால், எப்படி நன்றி சொல்வது என்றுகூடத் தெரியாமல் தமது அன்பால் என்னைத் திக்குமுக்காடச் செய்து கொண்டிருக்கும் இன்னொருவர் உண்டு.

'ஒரு மனிதன் இப்படிக்கூட இருக்க முடியுமா?' என்று அவரைப் பற்றி நான் வியக்காத

வி.கே. ராமசாமி



நாளில்லை.

ஆடம்பரம் கிடையாது. பகட்டு கிடையாது. போலித்தனம் கிடையாது. பொறாமை கிடையாது. ஏமாற்றல், வஞ்சனை, பொய், சூது, வாது எதுவுமே தெரியாத வெறும் எளிமை விரும்பி. அவர் ஒரு விரலசைத்தால் மாநிலமே கேட்கக் காத்திருக்கிறதை விந்தை எனச் சொல்லாமல் வேறென்ன சொல்ல? புரிந்திருக்கும் - ரஜினி.

ரஜினியுடன் நான் முதல் முதலில் இணைந்து நடித்த படம் ஆறு புஷ்பங்கள். அது, அவர் திரையுலகுக்கு வந்த புதிது.

அந்தப் படத்தில் ஒரு காட்சியில் எனக்கும் அவருக்கும் ஒரு வாக்குவாதம் நடப்பதுபோல் வரும். கோபத்தின் உச்சியில், ஒரு பத்தாயிரம் ரூபாய் நோட்டுக்கட்டை அவர் என் முகத்தில் விசிறி எறிவார். இது காட்சி.

நான் சொன்னேன்: "நீங்க அந்தக் கட்டை மொத்தமா எறியாதீங்க. பின்னை எடுத்துட்டு, கொஞ்சம் பிரிச்சாப்பல தூக்கிப் போடுங்க. பணமும் பரவலா ஃபிரேம் முழுக்க சிதறும்; எனக்கும் நீங்க வேகமா வீசறதுல அடி படாது!"

அவர் ஒப்புக் கொண்டார். எனினும் டேக் இன்போது, வசனங்களில் கவனமாக இருந்தவர், இந்த விஷயத்தை மறந்துவிட்டார்!

வீராவேசமாகப் பேசியபடி அத்தனை பெரிய கட்டை அவர் என் முகத்தில் வீச, கண்ணில் பட்டு, கண் கலங்கிவிட்டது!

"ஏங்க, நான்தான் சொன்னேனில்லே..." என்று ஆரம்பித்தபடி நான் அவர் அருகே போக, நான் ஏதோ கோபத்தில் சண்டைக்குத்தான் போகிறேன் என்று நினைத்து விட்டார், அங்கிருந்த விஜயகுமார்.

"அண்ணே, விட்டுங்க. தெரியாம பட்டுடுச்சி..." என்று ஓடி வந்து என்னைத்

அருணாச்சலத்தின் தயாரிப்பாளர்கள்- ரஜினி அவர்களை எப்படித் தேர்ந்தெடுத்தார் என்பதெல்லாம் ஏற்கெனவே தெரிந்த விஷயம். ஆனால் சில ரகசிய உண்மைகள் இன்னும் மக்களுக்கு முழுமையாகத் தெரியாது. அதைச் சொல்லிவிட வேண்டியது என் கடமை என்று நினைக்கிறேன்.

தன்னம்பிக்கை யூட்டும் தமிழ்!



தமிழ்ப் புத்தகங்களைத் தங்கள் கடைகளில் வைத்து விற்பனை செய்வது அத்தனை கௌரவமானதில்லை என்று ஆங்கிலப் புத்தகக் கடைக்காரர்கள் கருதுவதையறிந்த நர்மதா பதிப்பக உரிமையாளர் ராமலிங்கம் ஒரு காரியம் செய்தார். அதுதான் 'புக் லாண்ட்ஸ்'. குளிர்பதன வசதி செய்யப்பட்ட நவீன புத்தகக் கடை. இங்கு தமிழுக்குத்தான் முக்கியத்துவம் என்றாலும் ஆங்கிலப் புத்தகங்களும் உண்டு.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெளியாகும் சிறு பத்திரிகைகளை, வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான ஸ்பெஷல் இட ஒதுக்கீடும் இங்கே உண்டு.

''வர்த்தக ரீதியில் எப்படி இருக்கிறது?''

''இந்த இடத்தில் புத்தகம் விற்று, நஷ்டப்படுவதைவிட, டி.வி, பிரிட்ஜ் என்று விற்றால், நல்ல லாபம் கிடைக்குமே என்று ஆரம்பத்தில் நண்பர்கள் டிஸ்கரேஜ் செய்ததுகூட உண்டு. ஆனால், நான் பல்லைக் கடித்துக்கொண்டு, சமாளித்தேன். இப்போது எனக்கே தன்னம்பிக்கை ஏற்பட்டுள்ளது!'' என்று ராமலிங்கம் கூறும்போது குரலில் மகிழ்ச்சி கொப்பளிக்கிறது!

— மௌ

தடுப்பதுபோல் செய்ய, நான் உண்மையிலேயே கோபம் கொண்டு விட்டேன் என்று நினைத்து விட்டார் ரஜினி!

''அட, இதுக்கு எதுக்கப்பா கோவிச்சிக்கப் போறேன். ஸ்லிப் ஆவறதெல்லாம் இங்க சகஜம்தானே!'' என்றபடி நான் டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டேன்.

ரஜினியோடு நான் நடித்த அடுத்த படம், ஐ.வி. சசி இயக்கிய 'அலாவுதீனும் அற்புத விளக்கும்'.

இந்தப் படத்தில் ரஜினி எனக்கு மகன். இந்தப் படத்திலும் அதேபோல ஓர் ஆக்ரோஷமான காட்சி.

ஒரு பூ ஜாடியைக் கோபமாகத் தூக்கி, ஒரு கண்ணாடி மேல் விசிறி எறிவார் ரஜினி.

காட்சியின்போது நான் கண்ணாடியின் அருகே நிற்க, ''அண்ணே நீங்க கொஞ்சம் நகர்ந்துக்கங்க. பட்டுடப் போகுது!'' என்றார் ரஜினி.

நான் சொன்னேன்: ''அட, பழசை நீங்க இன்னும் மறக்கலையா? அன்னிக்கே நான் சொல்லிட்டேனே, எனக்கு அதனால ஒண்ணும் கோபமே இல்லை! நான் உரக்கப் பேசினதைக் கேட்டுட்டு, கோபமாயிட்டேன்னு நினைச்சிட்டீங்களா? என் குரலே அப்படித்தாங்க. சினிமாவுல கூடப் பாருங்க... உரக்க உரக்கத் தான் பேசுவேன். என் சாதாரணக் குரலே அதுதான்!'' என்றேன்.

''அட, ஆமாங்க. இப்பத்தான் விளங்குது?'' என்று சமாதானமானார் ரஜினி.

சினிமா உலகில் இப்படி சின்னச் சின்ன விஷயங்களில் தவறாகப் புரிந்து கொண்டு, முகம் கொடுத்துக்கூடப் பேச மாட்டாத குணம் நிறையப் பேருக்கு உண்டு. விதிவிலக்கு ரஜினி!

என்னையே எடுத்துக் கொண்டால்கூட, கூடப் பிறந்தவர்களிலிருந்து, குடும்பத்துக்கு மிக நெருக்கமானவர்கள், நண்பர்கள், ஊழியர்கள் எனப் பலர் என்னிடம் கோபித்துக்கொண்டு திரும்பிப் பாராமல் போயிருக்கிறார்கள்.

ஆனால், எங்கோ பிறந்து வளர்ந்து, கலைப் பணிக்காகத் தமிழ் மண்ணில் குடிபுகுந்து, இன்று சூப்பர் ஸ்டாராக விளங்கும் ரஜினி, யாரிடமும் எந்தக் கருத்து வேறுபாடு வந்தாலும் அதை மனதில் வைத்துக் கொள்ளாமல், எப்போதும் இன்முகம் காட்டுகிற பண்பை எப்படிப் பெற்றார் என்பது, எப்போதும் என்னை வியப்படையச் செய்கிற விஷயம்

சுமார் பத்து வருஷம் முன்பு என்று ஞாபகம். ஆக்ராவில் வேலைக்காரன் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த சமயம். ''உங்களை வெச்சி ஒரு படம் எடுக்கணும்னு ஆசை'' என்றேன் ரஜினியிடம்.

''அதுக்கென்ன? பண்ணிட்டாப் போச்சு!'' என்றார் உடனே.

அடுத்தடுத்த கமிட்மென்ட்களால் சொன்னபடி அவரால் எனக்குச் செய்து கொடுக்க இயலாத சூழ்நிலை.

பத்து வருடங்களாக அதை மனதில் வைத்திருந்தவர், அருணாச்சலம் தொடங்கும் சமயம் எனக்கு போன் செய்தார். ''ஐயா, உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்!''

நான் அவர் வீட்டுக்குப் போனேன்.

''பத்து வருஷம் முன்னால நாம ஒரு படம் பண்ணணும்னு கேட்டீங்க. ஒரு லெட்டரும் கொடுத்தீங்க. ஏதோ காரணங்களால அது தள்ளிக்கிட்டே போயிடுச்சி. இப்ப என்ன ஆச்சன்னா, என் உடல்நிலை, மனநிலை காரணமா வருஷத்துல ரெண்டு மூணு மாசம் ஓய்வெடுக்க இமயமலைக்குப் போயிடறேன். அதனால, முன்ன மாதிரி நிறைய படங்கள் நடிக்க முடியறதில்லை. வருஷத்துக்கு ஒரு படம்தான் செய்ய முடியுது. இதுக்கு நடுவுல, உங்களை

மாதிரி வேற சில நண்பர்களும் என்னைப் படம் பண்ணித் தரச் சொல்லி அப்பப்ப கேட்டாங்க. சரி; எல்லாருக்குமா சேர்த்து ஒரு படம் குடுத்துடலாம்னு நினைக்கறேன். உங்க அபிப்பிராயம் தெரிஞ்சுக்கலாம்னுதான் கூப்பிட்டேன்" என்றார்.

"இதுல என் அபிப்பிராயம் என்ன இருக்குங்க? பாத்திரம் அறிஞ்சு பிச்சை போடும் பாங்க. நீங்க பல நியாயங்களை யோசிச்சிதான் இந்த முடிவுக்கு வந்திருப்பீங்க. நீங்க தேர்ந்தெடுத்திருக்கிற ஆட்களும் பொருத்தமானவங்களாகவே இருக்காங்க. நீங்க செய்யறதை உதவின்னு சொல்றதைவிட தர்மம்னுதான் சொல்லணும். உங்க உயர்ந்த மனசு புரியுதுங்க!" என்றேன் தழுதழுத்தபடி.

அருணாச்சலத்தின் தயாரிப்பாளர்கள் - ரஜினி அவர்களை எப்படித் தேர்ந்தெடுத்தார் என்பதெல்லாம் ஏற்கெனவே தெரிந்த விஷயம். ஆனால் சில ரகசிய உண்மைகள் இன்னும் மக்களுக்கு முழுமையாகத் தெரியாது. அதைச் சொல்லிவிட வேண்டியது என் கடமை என்று நினைக்கிறேன்.

ஒரு படத்தில் தயாரிப்பாளரின் கடமை என்ன? பணம் தருவது. ஆனால், இந்தப் படத்தைப் பொறுத்தவரை, தயாரிப்பாளர் என்கிற பெயரை ரஜினி எங்களுக்குத் தந்தாரே ஒழிய ஒரு பைசா வாங்கவில்லை. மாறாக, லாபத்தில் ஒரு பகுதியைத்தான் சமமாகப் பிரித்துத் தந்தார்!

அது மட்டுமல்ல. ஒரு நடிகன் என்ற முறையில் நான் அந்தப் படத்தில் நடித்ததற்கு உரிய சம்பளத்தையும்கூடத் தந்து விட்டார்!

காரணமே இல்லாமல் இப்படி உதவ ஒருவருக்கு எப்படி மனசு வரும்? பிரதிபலன் எதிர்பாராத உதவி அது. பிரதிபலனாகத்தான் அவருக்கு என்ன செய்து விட முடியும்?

"அதெல்லாம் சும்மாங்க. புகழ்ச்சிக்காக செய்யறாரு!" என்று சிலர் என்னிடமே சொன்னார்கள். அவருக்கு இல்லாத புகழா? இப்படிச் சம்பாதித்தா அவருக்குப் புகழ் வர வேண்டும்? அட, ஒரு பேச்சுக்கு அப்படித்தான் வைத்துக் கொள்வோமே? புகழுக்குத்தான் என்றாலும் வேறு யாருக்கு இப்படி ஒரு துணிச்சலும் செயல் நேர்த்தியும் வரும்? யார் செய்திருக்கிறார்கள்?

என்னைப் பொறுத்தவரை இதுதான் உலக அதிசயம். ரஜினி அதிசயம்!

அருணாச்சலத்தில் நான் நடித்ததே ஒரு சுவாரஸ்யமான கதை.

"உங்க படத்துல நடிச்சி ரொம்ப நாள் ஆகிப் போச்சேங்க? இந்தப் படத்துல ஒரு வேஷம் குடுங்க!" என்று கேட்டேன் ரஜினியிடம்.

இது நடந்தது, நான் 'தயாரிப்பாளர்'களுள் ஒருவனாக ஆன பிறகு.

ரஜினி என்ன சொன்னார் தெரியுமா?

"அட, என்னண்ணே இப்படிக் கேக்கறீங்க? உங்களை மாதிரி பெரிய பெரிய நடிகர்களைப் பார்த்து, பிரமிச்சுத்தான் நானே நடிக்க வந்தேன். நீங்க போய் எங்கிட்ட கேட்டுக்கிட்டு - இருக்கற கேரக்டர்ஸ்ல உங்களுக்கு எது பிடிக்குதோ எடுத்துக்கங்க!"

அப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் அவருடையது!

பராசக்தி படத்தில் ஒரு பாடல் வரும்.

'தேசம், ஞானம், கல்வி
ஈசன், பூசை எல்லாம்
காசு முன் செல்லாதடி - அந்த
ஈசனும் ஈசனார் பூசையும் தேசத்தில்
காசுக்குப் பின்னாலே - குதம்பாய்
காசுக்குப் பின்னாலே!'

எனக்கு மிகவும் பிடித்த பாடல் இது. காரணம் அதில் மிதமிஞ்சி நிற்கிற உண்மை!

ஆயிரக்கணக்கான படங்களில் நடித்தேன்; பதினொரு படங்களை சொந்தமாகத் தயாரித்தேன். எத்தனையோ லட்சங்கள் சம்பாதித்தேன். ஆனால் பராமரிக்கிற திறமை இல்லாததால் யார் யாரோ அள்ளிக் கொண்டு போனார்கள். பைசா மிச்சம் இல்லாமல் துடைத்து எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். தனி மரமாக என்னை விட்டுப் போனார்கள். தெரிந்தோ, தெரியாமலோ எப்போதோ, யாருக்கோ என்ன தர்மம் செய்தேனோ - மிச்சமிருக்கும் என் வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை, கடவுள் ரஜினி ரூபத்தில் - இந்தப் படத்தின் மூலம் கொடுத்தனுப்பியிருப்பதாகவே நினைக்கிறேன்!

(தொடரும்)



நிருபர் (நடிகையிடம்) : "இன்னிக்கு உங்க பதினெட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடறது பத்தி சந்தோஷம். முதன் முதலா எப்ப பதினெட்டாவது பிறந்த நாளைக் கொண்டாட ஆரம்பிச்சீங்கன்னு சொல்ல முடியுமா?"

— மேல்மங்கலம் பத்ரா

ஆல் வேல்டு அக்கவுண்டிங்க் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)
All-World Accounting Administrative and Technological Academy.

படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம் | கௌரவமான வருமானம் | மரியாதையான சேவை

AAAAA Trust (Regd No. 1488)

In Education from 1979

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர்.
150 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள். துபாய் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் படிக்கின்றனர்.

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, MCA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, GRE, TOEFL, Business Technology, etc

வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)

30 தினம் 18% PA, 45 தினம் 19% P.A.
60 தினம் 20% PA, 90 தினம் 21% P.A.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம். புதுப்பிப்பதற்காக வர வேண்டிய அவசியமில்லை.

மாதப் பென்ஷன் திட்டம் (TM)

டெபாசிட்	காலம்	மாதவட்டி ரூ.
5000	1 வருடம்	125
10000	1 வருடம்	250
10000	3 வருடம்	300
10000	5 வருடம்	320

சேமிப்பு கணக்கு: 15%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.

மத்திய நிதி மந்திரி என்ன சொல்கிறார்?

ஜனங்கள் தங்கள் சேமிப்பை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, சர்க்காரின் திட்டங்களிலோ போடலாம், மேலும் பணம் இருந்தால் கல்வி நிறுவனங்களில் முதலீடு செய்யலாம்.
ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை 28.12.96. பக்கம் - 6.

ரிசர்வ் வங்கி என்ன சொல்கிறது?

ரிசர்வ் வங்கி திருத்தச் சட்டம் 1997 பிரிவு 45 S வர்த்தக காரியங்களுக்காக டெபாசிட் பெறுவதை தடை செய்யவில்லை. பதிவு செய்யப் படாத நிறுவனங்கள் கடன் கொடுப்பதற்காக டெபாசிட் வாங்குவதையே தடை செய்கிறது.
ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை. 26.2.97. பக்கம் - 18.

மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

தலைமை கார்யாலயம்: "வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம், Next to DAV School, T. நகர், சென்னை - 17.
கிளை: 7, முதல் மாடி., ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.
கிளை: 5, 2வது மெயின் ரோடு, நிய காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.
கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

மும்பை: 1, தீபால் அபார்ட்மெண்ட்ஸ், ஜெய் ஹிந்த் காலனி, குப்தேரோடு, டோம்பிவ்லி மேற்கு - 421 202

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.
AAAAA — பாதுகாப்பின் சின்னம்.

Prof. V. விவேகானந்த்
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB (All India First), EKSAMD (Germany) (Distn), B.L.
Managing Trustee.

Dr. பரமேஸ்வரி, MBBS,
Managing Trustee.

Sunday Working Day

சொத்து பாதுகாப்பு. மாத வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.

(TM) :Trade Mark

'சம்பந்தி சண்டை' என்ற தலைப்பில் கீழுள்ள கூப்பனில் ஜோக் எழுதியனுப்புங்கள். பிரசுரத்திற்குத் தேர்வாகும் ஒவ்வொரு ஜோக்கும் 100 ரூபாய் சன்மானம் பெறும். இன்னும் இரண்டே வாரங்களுக்குத் தொடரும் இப் போட்டியில் யார் அதிக அளவில் வெற்றி பெறுகிறாரோ அவர் சுட்டிக் காட்டும் ஓர் ஏழைக் குடும்பத்துக்கு அதாவது திருமணத்துக்குத் தயாராக உள்ள வசதியற்ற குடும்பத்துப் பெண்ணுக்கு ரூ.50,000 மதிப்புள்ள தங்க நகைகள் பரிசு! வெற்றி பெறும் வாசகரே வசதியற்றவராக இருந்து அவரது மகளோ சகோதரிகளோ திருமண வயதில் இருந்தால் அவரே இப்பரிசைப் பெறலாம். கடைசி தேதி : 23.6.97

'சம்பந்தி சண்டை' ஜோக் – போட்டி 10

பெயர்:..

முகவரி:..

....

....

மும்பை மசாலா:

கலை வழி வலை?

புதிய பிரதமரின் முதல் மும்பை விசிட், பந்தா, பாவ்லா எதுவுமில்லாமல், முக்கியமாக கறுப்புப் பூனையின் பாதுகாப்பு வளையம், மெட்டல் டிடெக்டர்களின் பயமுறுத்தல்களில்லாமல், 'ஃப்ரெண்ட்லி'யாக இருந்தது, மும்பை வாசிகளுக்கு ஒரு இனிய மாறுதல். தாக்கரேவுடன் அமிதாப் வீட்டில் டின்னர் சாப்பிட்ட கௌடா போலில்லாமல், இவர் பொதுமக்களைச் சந்தித்து, பி.ஏ.ஆர்.வி சிப்பந்திகளுடன் கைகுலுக்கி, ஷீலாகினி, புஷ்பா பாலே, மேதா பட்கர், மிருணாள்கோரே போன்றோரின் குற்றச்சாட்டுகளுக்குச் செவிமடுத்து, எல்லோரையும் குளிர்வித்தார். தாக்கரேயின் மருமகன், அவர் எடுக்க இருக்கும் இந்திப் படத்தின் துவக்க விழாவுக்கு, பிரதமரை அழைத்தாராம். ஹூம்! 'ஏழை உழவருக்குச் சாப்பாடு! கலாசாரம் தெரிந்தவருக்கு (குஜ்ராலை "Cultured man" என்றுதான் குறிப்பிடுகிறார் தாக்கரே) விழாவுக்கு அழைப்பா? பலே சாஹேப்!

'சொக்குப்பொடி ஜோஷி'யாட்சி!

'குறைந்த விலையில் வீடு, அவ்வப்போது லஞ்ச் டின்னர் என்று ஆசை காட்டி மீடியாக் காரர்களை காங்கிரஸார் வளைத்துப் போட்டு விட்டார்கள். இவர்களும் காங்கிரஸ்காரர்களின் ஜால்ராக்களாக மாறி விட்டனர். ஆனால், எங்களை ஒட்டுமொத்தமாகத் தாக்குபவர்கள், எங்கள் முதல் மந்திரி ஜோஷியை மட்டும் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவதன் ரகசியம் என்ன தெரியவில்லையே? ஜோஷி என்னதான் சொக்குப்பொடி போட்டு மயக்கி இருக்கிறாரோ?'


- இப்படி தம் வயிற்றெரிச்சலை ஒரு பேட்டியில் சொல்லியிருப்பவர் வேறு யாருமல்ல; பால் தாக்கரேதான்!

தண்ணீர் கஷ்டத்தில் தவிக்கும் ஹோட்டல்கள்!

5000 கொடுத்தால் போக வர ஹெலிகாப்டர் பயணம்; மூன்று நாள் தங்கும் வசதிகள்' என்றுதான் மூன்று நட்சத்திர, மாதேரான் ஓட்டல் ஒன்று விளம்பரப்படுத்தியிருந்தது; போனஸாக அடி உதையும் உண்டு என்று குறிப்பிடவில்லை! விஷயம் தெரியாமல், மும்பையிலிருந்து ஒரு கும்பல் மாதேரானுக்குக் கிளம்பியது. வெயிலிலிருந்து தப்பித்தாலும்

பந்தா இல்லாத பிரதமர் ஜாக்கிரட்!

வெறிபிடித்த வெயிட்டர்களிடமிருந்து தப்பிக்க முடியவில்லை! "தண்ணியில்லாமல் ரொம்பவும் திண்டாடிவிட்டோம்; வெறுத்துப் போய் 'பில்'லை 25 சதம் டிஸ்கௌன்ட் கேட்டதற்கு, ஓட்டல் சிப்பந்திகள் கையில் கிடைத்ததை எடுத்து வீசினார்கள்" என்கின்றனர் மும்பைக்காரர்கள். ஆனால் மாதேரான் சொல்வதென்ன?- ஏற்கெனவே இங்கே தண்ணீர் கஷ்டம்! இந்தக் கோடைவாசஸ்தலத்தில் உள்ள ஹோட்டல்கள் எல்லாம் 'ஸ்விம்மிங் பூல்' வைத்திருக்கின்றன! போதாக்குறைக்கு தினம் ஒன்றாக முளைக்கும் ஹோட்டல்களின் கட்டட வேலைகளுக்கும் தண்ணீர் வேண்டும்! இந்நிலையில் ஓட்டல்களில் சச்சரவு சகஜம்தான்!" - போகிற போக்கில், உண்மையைக் கண்டுபிடிக்க, சி.பி.ஐ., என்கொயரி வந்துவிடுமோ என்னவோ?



• குஜ்ரால்



• பால் தாக்கரே

காருக்கும் 'தோஷமா?'

சீப்பாகக் கார் வேண்டுமா? மும்பை வட்டாரங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களை ஒரு ரவுண்டு அடியுங்கள். எந்நேரமும் 10, 12 கார்கள் வெயிலிலும், மழையிலும் நனைந்துகொண்டு, 'காயலான் கடைக்குத் தயார்' போர்டை மாட்டாத குறையாக நின்று கொண்டிருக்கும். அடிக்கடி நடக்கின்ற "ஷூட் அவுட்"களுக்கென்று, 'அண்டர் வால்ட்' காங்குகள் யாருடைய காரையாவது திருடிக் கொண்டு வந்து, காரியம் முடிந்த பின் 'அம்போ'வென்று நடுரோட்டில் விட்டுவிட்டு ஓடி விடுகிறார்கள். கார் சொந்தக்காரர்கள் இன்ஷ்யூரன்ஸ் பெறுவதில் குறியாயிருக்கிறார்களேயன்றி, திருட்டுப் போன, கொலைக்குற்றத்தில் பங்கு கொண்ட காரில் ஆர்வம் காட்டுவதில்லை. கோர்ட்டுக்கு சென்று, முறைப்படி ஏலம்விட அனுமதி பெற்று, போலீசார் இவற்றை ஏலம் போட்டாலும் கூட, வாங்குவதற்கு ஆளில்லை. 4 அல்லது 5 லட்சம் பெறுமானமுள்ள கார்களை, சட்டவிரோதக் கும்பல்களே 20-30 ஆயிரங்களுக்கு வாங்கிக் கொள்கின்றன.

அனுபவம் புதுமை

"காற்று வாங்கப் போனேன்... அறிவுரை வாங்கி வந்தேன்" என்று மும்பைக்காரர்கள் பாட ஆரம்பித்தாலும் ஆரம்பித்து விடலாம். சௌபாத்தி, தாதர், ஜுஹூ, வர்ஸோவா என்று .. எந்த பீச்சுக்குப் போனாலும், திடீரென்று ஓர் இளைஞர் கூட்டம் நம்மை வளைத்து, 'கடற்கரையை சுத்தமாக வைத்துக் கொண்டு அதன் அழகைப் பாதுகாப்பது எப்படி?' என்று ஒரு குட்டி லெக்சர் அடிக்கத் தயாராக இருப்பதைக் காணலாம். WWF உடன் இணைந்து, 'அனுபவ்' க்ரூப்காரர்கள் ஆரம்பித்திருக்கும் இந்த "க்ளீன் - பீச் டிரைவ்", கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, சிறு குழுக்களாக்கி, குட்டி நாடகங்களெல்லாம் போட வைத்து, மக்களை இயற்கையின் அழகை மாசுபடாமல் அனுபவிக்கக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீ ராஜ்**

அடித்துத் துவைத்துப் போட்ட போர்வைத் துணி போல கிடக்கிறாள் நபீஸா. தேசிகாச்சாரி ஓடிப் போய் லாந்தரை எடுத்து வருகிறார். வெளிச்சம் அவளது ரத்த சகதியைக் காட்டுகிறது.

குரூரமான கத்திக் குத்து... முதுகு, இடுப்பு என்று வெள்ளைச் சோளிப் பரப்பிலெல்லாம் ரத்தத் தோய்வு!

''பாட்டி... யார் இப்படிச் செய்தது?'' நரம்பறுந்தது போல கத்துகிறான் இஸ்மாயில்.

23

இந்திரா சௌந்தர்ராஜன்

இசை ஓசை

தேசிகாச்சாரி கணமும் தாமதிக்காமல் லாந்தரை பானு வசம் தந்துவிட்டு குனிந்து இஸ்மாயிலுடன் சேர்ந்து நபீஸாவைத் தூக்குகிறார்.

''யாரைக் கேட்டு நீ இந்த ராத்திரி வேளைல கிளம்பி வந்தே? ஆமா இப்படிக் குத்துனது யாரு...?''

''சொல்றேன்... சொல்றேன்... முதல்ல தண்ணி!'' – ஈனக்குரலில் தத்தளிக்கும் கிழவியின் உலர்ந்த இதழ் பிளந்து நீரை நிரப்பத் தயாராகிறான் இஸ்மாயில்.

தேசிகாச்சாரி பச்சிலைக் கட்டுக்கு ஆயத்தமாயிருக்கிறார்.

கண்ணில் கண்ணீர் உருண்டைகளுடன் லாந்தர் கையோடு நிற்கும் பானுவை அந்த நிலையிலும் நபீஸாவின் துவண்ட கரங்கள் அருகில் அழைக்கின்றன.

''நல்லா இருக்கியாம்மா?'' – நலம் விசாரிக்கும் வேளையா இது?

''நல்லாருக்கேன் பாட்டி.... உங்களுக்கு எப்படி இப்...?'' – பானுவின் தொண்டைப் பாலம் தாண்ட மறுக்கிறது சொற்கள்.

''சொல்றேன்... சொல்றேன்'' – அவள் முனகவும் இஸ்மாயில் நீரை உதட்டில் வார்க்கவும் வேகமாக விழுங்குகிறாள்.

அத்தனை தாகம்.

தேசிகாச்சாரி கட்டுப் போட ஆயத்தமாகிறார்.

பதற்றம் என்பதே அறியாதவர் கைகளிலும் நடுக்கம்.

''பாட்டி... யார் பாட்டி இப்படிச் செஞ்சது. அந்த தாமுதானே?''


''அவன் பேரெல்லாம் தெரியாது இஸ்மாயில். தாடியும் மீசையுமாக இருந்தான். இருட்டுல தெளிவா பாக்க முடியல. ஆனா குரல் நல்லா காதுலே விழுந்துச்சு. விடியும்போது இந்து-முஸ்லீம் சண்டையா பொழுது விடியப் போகுது பாருன்னு யார்கிட்டையோ அவன் சொல்லிக்கிட்டுப் போனது என் காதுல விழுந்துச்சு. நான் செத்துப் போயிட்டதா நினைச்சுட்டாங்க. அல்லா எனக்கு இந்த நொடி பேசற சக்திய கொடுத்துருக்காரு. அதுக்குக் காரணம் இருக்கு இஸ்மாயில். இப்படி மறைஞ்சிருந்து தாக்கற பேடிங்க ஆசைப்படி எதுவும் நடந்துடக் கூடாது...''

''நீ என்ன சொல்றே? அவனை சும்மா விடக் கூடாது பாட்டி...''

''உணர்ச்சி வசப்படாதே. அல்லா மேல சத்யம். பாட்டிக்கு ஒண்ணும் ஆகலை. இதை ஞாபகத்துல வெச்சுக்கோ.''

''பாட்டி அவனை பதிலுக்கு குத்தினாத்தான் என் ஆத்திரம் அடங்கும். நா இப்பவே...'' – ஆவேசமாக கிளம்பப் பார்த்தவனை நபீஸாவின் கரங்கள் இழுத்துக் கட்டுகின்றன.

''வேண்டாம்... சொன்னா கேள். இப்ப எது செஞ்



சாலும் பிரச்னை பெரிசாயிடும். இது ஒரு குடும்பப் பிரச்னை. இதை சமுதாயப் பிரச்னையா ஆக்கிடாதே. நீ போனா சத்யமா நான் உசுரை விட்டுடுவேன்..." - கிழவியின் அஸ்திரம் நன்றாகவே வேலை செய்கிறது. அதே சமயத்தில்..

இன்டென்சிவ் கேரில் இன்னமும் மோகன்ராம் கண் திறந்திருக்கவில்லை. வெளியே குட்டி போட்ட பூனை போல ஒரு கூட்டமே நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக பகவந்த ராவ்! நடந்ததையறிந்து ஏரியா இன்ஸ்பெக்டரே வந்திருக்கிறார்.

வந்தவரை பகவந்த ராவ் ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. "சார்... இன்ஸ்பெக்டர் வந்திருக்கார். நடந்ததைச் சொல்லுங்க" - ஒருவன் அவரைத் தூண்டி விடுகிறான்.

தொழில் நிமித்தம் இன்ஸ்பெக்டருக்கு பகவந்தராவை நன்கு தெரியும். எனவே நேராக அவர் கால்கள் பகவந்தராவிடம் தான் வந்து நிற்கின்றன.

"என்ன மிஸ்டர் ராவ்... நீங்கள்ளாம் இருந்தும் கலவரம் கத்திக் குத்துன்னு நடந்துருக்கே. நல்லவேளை உங்களுக்கு ஒண்ணும் ஆகலை போல. கலவரம் ஆரம்பிச்ச உடனேயே ஓடி ஒளிஞ்சு தப்பிச்சுக்கிட்டீங்களா?"

இன்ஸ்பெக்டர் வார்த்தைக்கு வார்த்தை கலவரம் என்கிற சொல்லைப் பயன்படுத்துவதன் பொருள் பகவந்தராவுக்கும் புரிகிறது.

மெல்ல இன்ஸ்பெக்டரின் காதை நெருங்கி சற்று உக்ரமாகவே கிசுகிசுக்கிறார்.

"ஒரு பிளானோட வந்திருக்கீங்கங்கறது நல்லாத் தெரியுது இன்ஸ்பெக்டர். கலவரம் நடக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டீங்க போல. அப்பத்தானே நினைச்சவனை எல்லாம் பிடிச்சு உள்ள போடலாம். ஒண்ணு தெரிஞ்சுக்குங்க. இந்த இன்டர்நெட் யுகத்துல ஒரு தற்குறிக்குக் கூட உங்க செயல்பாடுகள் பத்தி நல்லாவே தெரிஞ்சிருக்கு. ஆகையால் பேசாம வந்த வழியே திரும்பி நடங்க. இங்க பாதிக்கப்பட்ட யாரும் கம்ப்ளையிண்டே கொடுக்கலை. இது எங்க சொந்த பிரச்னை. கிட்டத்தட்ட குடும்பப் பிரச்னை. எங்களால தீர்த்துக்க முடியலைன்னா உங்ககிட்ட வருவோம். அப்ப



பேசிக்கலாம்...''

பகவந்தராவின் உணர்ச்சி மிகுந்த பேச்சுக்கு என்ன பதில் சொல்வதென்று இன்ஸ்பெக்டருக்கே தெரியவில்லை.

கசகசப்பாக நிற்கிறார். கண்ணைக் கசக்கிக் கொண்டு மூலையாய்ப் பார்த்து முடங்கியிருக்கும் மகாலட்சுமியை நெருங்கி ஒரு பார்வை பார்த்தும் பலனில்லை.

கனகா அருகிலேயே நின்றபடி அத்தையைத் தாங்கிய வண்ணம் உள்ளாள். அவளைப் பார்க்கிறார். அவளும் வேறுபுறம் முகத்தை திருப்பிக் கொள்கிறாள். சுற்றி அங்கும் இங்குமாய் மேல் சட்டை இல்லாத நெசவாள ஆண்கள் பீடிக்கையோடு இன்ஸ்பெக்டரை பார்த்துவிட்டு ஒன்றுமே நடக்காத மாதிரி



"தலைவரே! ஒரு சந்தேகம்."
"என்ன?"
"பொதுக்குழு உறுப்பினர்கள் மொத்தமே 800 பேர்தான் இருக்காங்க; பிறகு எப்படி நமக்கு ஆதரவா 600 பேரும் போட்டி அணிக்கு ஆதரவா 600 பேரும் கையெழுத்துப் போட முடியும்?"

– சீர்காழி வி. ரேவதி

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

ஆஸ்பிடல் கேஸ் ரிக்கார்டிலும் கத்தி தவறி வயிற்றில் குத்தி விட்டதாக ஒரு திட்டமிட்ட பதிவு!

அனைத்தின் பின்னாலும் பகவந்தராவ் இருக்கிறாரா?

இன்ஸ்பெக்டரின் கோபப் பார்வை பகவந்தராவை முறைக்கிறது.

ஆனால் உண்மை நிலையோ வேறு.

ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப் பார்த்த அந்த பதற்றமான வேளையில் மோகன்ராம் பகவந்தராவை அழைத்து தீர்க்கமாகக் கட்டளை இடுகிறான்.

"சார்... இந்த விஷயத்தை போலீஸ் கோர்ட்டுன்னு கொண்டு போயிடாதீங்க. அது எந்த விதத்துல பார்த்தாலும் நல்லதுக்கில்லை. திருவிழா சமயத்துல அவங்க வந்து விழா சந்தோஷத்தை கெடுத்துடப் போறாங்க. என் ஒருத்தனுக்காக ஒரு கூட்டத்தோட சந்தோஷம் கெட்டுடக் கூடாது. என் பிரச்னையை எனக்குத் தீர்த்துக்கத் தெரியும். தயவுசெய்து போலீஸ்கிட்ட போயிடாதீங்க. மீறிப் போனா வாக்குமூலம் கொடுக்க வரும்போது என்னை யாரும் குத்தலைன்னு சொல்லிடுவேன்...''

பகவந்தராவின் காதில் அவன் சொன்னது ஓடிக் கொண்டேயிருக்கிறது. நின்று பார்த்துவிட்டு கை பிசைந்து கொண்டு வெளியேறும் இன்ஸ்பெக்டருக்குள் அது ஒருவகை புத்திசாலித்தனமான தப்பித்தல் உணர்வாக ஓடினாலும் விதியைப் பொருத்த மட்டில் மோகன்ராம் பற்றிய பரிமாணம் உயர்ந்து விட்டிருக்கிறது.

'தாமு கூட்டம் செய்தது கொஞ்சமும் சரியில்லை. இவர்களை வளர்த்து விட்டு இன்று நாம் அனுபவிக்கிறோம்...'

அடர்ந்த இரவில் உறக்கம் பிடிபடாமல் எல்லோரும் மல்லாந்த நிலையில் யோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

தெரு முழுக்க திருவிழா விளக்கொளி...

நடுத்தெரு பந்தலில் அனாதையாக விடப்பட்டவள் போல ரேணுகா தேவி அமர்ந்திருக்கிறாள்!

விடிந்து விட்டது.

தாமுவும், மணியமும், ஜவஹரும் திட்டமிட்ட மாதிரி ரசாபாசப் பொழுதாக விடியவில்லை. எப்பொழுதும் போல பால்காரன் மணி ஆட்டியபடி வந்து கொண்டிருக்கிறான்.

பேசி வைத்துக் கொண்டது போல நபீஸாவும், மோகன்ராமும் உணர்ச்சிவயப்படாமல் பெருந்தன்மைக்குள் புகுந்து கொண்டதன் எதிரொலி, மிக அமைதியான பொழுதைத் தந்திருக்கிறது.

ரங்காச்சாரி கடையை நோக்கி நடந்து வரும் தாமு, அந்த அமைதியை ஜீரணிக்க முடியாமல் சகலரையும் பார்க்கிறான்.

வந்து நின்றாலே நுரை ததும்ப காப்பியை நிரப்பி பயந்த புன்னகையுடன் தரும் ரங்காச்சாரியிடம் இன்று பயமில்லை. மாறாக வெறுப்பு தெரிகிறது.

டீக்கடையில் கூடி நிற்கும் கூட்டத்தின் கண்களில் எல்லாம் அது ஏறித் தெரிகிறது. எல்லோரும் ஒருமித்து முறைத்தே எரித்துவிடுவார்கள் போலத்தான் இருக்கிறது. ஆனாலும் எதற்கோ, யாருக்கோ கட்டுப்பட்டு அவர்கள் முறைப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

இப்படி யாராவது முறைத்தாலே தாமுவுக்

ரும் பிடரியை உகப்பிக் கொண்டு கோபம் வரும். இன்று அப்படி வரவில்லை. அவனே அவளுக்குத் தடையாகி விட்டது போல ஒரு இம்சை.

பிடியை பற்றவைத்துக் கொண்டு, அங் கிருந்து நேராக ஜவஹர் வீட்டை நோக்கி நடக் கிறான். வழியிலேயே கிளை விடும் ராவுத்தர் தெருவைப் பார்க்கிறான்.

கறிக்கடை பாய், மரத்துண் டில் ஊதுபத்தி பற்றவைத்து செருகிக் கொண்டிருக்கிறான்.

"பாய் என்ன எதுவும் விசேஷ மில்லையா?"

"என்ன விசேஷம்?"

''இந்தப் பக்கம் எதுவும் கலாட்டா கத்திடுத்து..''

''ஏன் நடக்கலேன்னு கவ லையா இருக்கா... காலங்கார்த் தால வந்து பேசற பேச்சைப் பாரு..'' - பாய் விட்டால் கடைக் கத்தியால் அவனையே கைமா போட்டாலும் போட்டு விடுவார் போலும். தாமு சொல்லால் பட்ட அடி போதும் என்று நடையை எட்டிப் போடு கிறான்.

கிட்டத்தட்ட அவனைப் போலவேதான் புழுக்கத்தில் இருக்கிறான் ஜவஹர். அடிக் கொரு தடவை கட்டிலில் அமர்ந்திருக்கும் மணியத்தை நோக்கி முறைக்கிறான்.

குமரன் காட்டுக்கும் நாமமலைக்கும் இடை யில் கலீரென்று சூரியக்கதிர் கொத்து பாயும் போது வீதி முழுக்க வெண்பட்டுப் பாவு விரித்து நீட்டப்பட்டு, பிசிறு நீக்கப்பட்டுக் கொண்டிருக்கும். மழை நாளில்தான் இந்த மாதிரி காலைப் பொழுதில் வீதியில் கைவீசி நடக்கலாம்.

ஆனால் இன்று அப்படித்தான் இருக்கிறது.

எட்டிப் பார்த்தபோது எல்லோரும் மோகன்ராமை பார்த்து வர ஆஸ்பத்திரிக்கு கிளம்பிக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு கத்திக் குத்தும் அதன் எதிரொலிகளும், மிக அதிசயமாக இந்த தேசத்தில் ஒரு அழுக்கு விதியை முற்றிலும் எதிர்பாராத திசைக்குத் திருப்பியிருக்கிறது.

வேடிக்கை பார்த்தே பழக்கப்பட்டவர்கள் சற்று நெகிழ்ந்து கசிந்து போயிருக்கிறார்கள்.

சகலத்தையும் உணர்ந்த நிலையில் உடைந்து போய் வீட்டுக்குள் நுழைகிறான் தாமு.

"மாமா... கணக்கு தப்பா போச்சு மாமா.. தப்பாப் போச்சு!" - என்றவனாய் மணி யத்தின் கட்டிலில் அருகில் போய் அமரு கிறான்.

மணியம் பதிலே பேசவில்லை. ஆனால் ஜவஹருக்கு கொதிப்பு அடங்கவில்லை.

"நீயும் உன பிளானும்... அவனை குத்தத் தெரியாம குத்தி ஹீரோ ஆக்கிட்டோம். ஆமா கிழவியைக் குத்தினேன்னு சொன்னியே. அந்த நெருப்பாச்சும் பத்திக்கிச்சா, இல்லை அதுவும் அம்பேலா...?"

"ஒன்னும் தெரியல ஜவஹர். ராவுத்தர் தெருப் பக்கம் எப்பவும் போலத்தான் அமை தியா இருக்கு. ஸ்டேஷன்லையும் கம்ப்ளை யின்ட் எதுவும் பதிவாகலைன்னு நல்லாத் தெரியுது. இன்னேரம் ஒரு களேபரம் நடந்து முடிஞ்சிருக்கும்னு நினைச்சேன். ஆனா எங்க கோட்டை விட்டேன்னு தெரியலை."

சொன்ன கையோடு அடுத்த பிடிக்குத் தாவினவன் நிமிரும்போது நிலைக்கால் படியில் நிழல் ஒன்று விழுந்தது. நிழலுக்குக் காரணம் பகவத்தராவ்!

(தொடரும்)

படிக்கிற பழக்கம் குறைஞ்சு போச்சா?

அடையாறில் உள்ள பிரம்மாண்ட மான புத்தகக் கடை ஒடிஸி. 'முடிவில்லாத ஒரு பயணம்' என்பது பொருள்.



''டெலிவிஷன், சாடி லைட் சானல்களின் ஆக்கிர மிப்பால், மக்களிடையே படிக்கிற பழக்கம் குறைந்து வருவதாகக் கூறப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?'' என்று கேட்ட போது, ஒடிஸியின் அஸ் வின் சொன்னார்:

''ஆங்கிலப்புத்தகங் களைப் பொருத்தவரை அந்தக் கருத்து சரியல்ல. மற்றெந்த இந்திய நகரத் தையும்விட சென்னையில்தான் பெரிய புத்தகக் கடைகள் அதிகம். இந்த ஏழெட்டு கடைகளிலுமே, விற்பனை நன்றாக உள் ளது. அதுவே, புத்தகம் வாங்கும், படிக்கும் பழக்கம் குறையவில்லை என்பதற்கு 'அத் தாட்சி!''

–மௌஷ்மி

படம்: யோகா

ஒத்தாசை

ராஜா சந்துக்குக் குடிவந்த புதிதில், நான் முதன்முதலில் சந்தித்ததும், அறிமுகம் கொண்டதும், சிவாவைத்தான். ராஜா சந்து, எந்தப் பழங்காலத்து ராஜாவோடும் தொடர்பு கொண்டதாக எனக்குத் தோன்றவில்லை. அப்படி ஏதாவது இருக்கும் என்றால், அது, அந்த ராஜாவுக்குப் பெருமை தரும் விஷயமாக இருக்காது.

ஏராளமான சொறி நாய்கள், அவ்வப்போது, நிறைய பிள்ளை குட்டிகளுடன் உலா வரும் பன்றிகள், அமைதி தவழ்கிற கண்கள். ஒரு சாமியாரைப் போன்ற நிதானத்துடன் நடக்கும் பசுக்கள், நாகூருக்கு நேர்ந்து கொண்ட ஒரு கொழுத்த ஆடு, மற்றும் அம்மணமான குழந்தைகள், ஆண்கள் பெண்கள், இருமல் கிழங்கள், கண் தெரியாத கிழவிகள், ஆட்டோவில் சர் சர் என்று விரையும் அதிகம் மை பூசிய கண்களுடைய பெண்கள் நிறைந்த சாம்ராஜ்ஜியம் அது.

இந்தச் சந்தில், பல்வேறு காரணங்களால் மிகவும் பிரபலம் அடைந்திருந்த தனபாக்கியம் அம்மாள் என்பவளுக்குச் சொந்தமான போர்ஷன்களில் ஒன்றில் நான் குடிபுகுந்தேன். கதவைத் திறந்தால், பெண்களின் வகிடு மாதிரி ஒரு நடைபாதை. அதன் இரு பக்கமும், புறாக் கூண்டுகளை விடவும் சற்றே பெரிய கூண்டுகள். அவற்றை வீடுகள் என்றும், போர்ஷன் என்றும், எந்தப் பெயரிட்டும் அழைக்கலாம்.

சாவியைக் கொடுக்கும்போது, தனபாக்கியம், வெற்றிலை குதப்பிய, குழகுழத்த சொற்களில், பிரும்மாண்டமான தன் ஆகிருதியோடும் என்னிடம் சொன்னாள்.

"பார்த்தா படிச்சவன் மாதிரி தெரியுது. நீ உண்டு உன் வேலை உண்டுன்னு இருக்கணும். அப்படி இப்படி சங்கதிகள் இங்க வேணாம். ராத்திரியிலே பொம்பளைகளை அழைச்சுக்கிட்டு வர்ற சமாசாரம் உதவாது. நான் அந்த விஷயத்துல ரொம்பக் கடுமையா இருப்பேன். தனபாக்கியம் வீடுன்னா, ரொம்ப ரீஜண்டான இடம்னு அர்த்தம்.... புரிஞ்சுதா?"


நான் புரிந்து கொண்டதாகத் தலையை அசைத்தேன்.

வீட்டுக்குள் பிரவேசித்து, ஜன்னலைத் திறந்தேன். இருட்டு, மெதுவாகவும், காற்று அவசரமாகவும் உள்ளே நுழைந்தது. விளக்கைப் போட்டேன். தயங்கி, பிறகு தெளிவு கொண்டது போல் குழல் விளக்கு எரிந்தது. ஒரு அறை. மூலையில் அடுப்பு. பொதுக் குளியல் அறை. நடைபாதை இறுதியில் கிணறு. வாளியும் கயிறும் ராட்டினமுமாக. ராட்டினத்தைப் பார்க்கத்தான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது? மறைந்து வரும் இனங்களில் ஒன்றல்லவா அது?


நான் பாயை விரித்து அமர்ந்தேன். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு, அடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளில் மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

வாசலில் ஒரு தலை. "யார்?" என்றேன்.

"உங்க பக்கத்து வீட்டுக்காரன் சார்."







"உள்ளே வாங்க."

வந்தவன் என் எதிரில் அமர்ந்து கொண்டான். சுமார் முப்பது வயது இளைஞன். கைலியும், மேலே பழைய சட்டையும் அணிந்திருந்தான்.

"புதுசா வந்திருக்கீங்களே, பார்த்துட்டுப் போக வந்தேன், சார்."

"என்ன பண்றீங்க?"

"கூட்டுறவு வங்கியிலே பியூனா இருக்கேன், சார்... நீங்க..."

"பத்திரிகையிலே வேலை செய்றேன்" என்று என் பத்திரிகையின் பெயரைச் சொன்னேன்.

"கதை எழுதறவரா?"

"எழுதுவேன்."

"சினிமாவிலே எழுதுவீங்களா?"

"இல்லை."

சிவாவுக்கு நிச்சயம் ஏமாற்றமாக இருந்திருக்கும். அவனிடம் இருந்து, லேசான பழவாசனை வந்து கொண்டிருந்தது. குடித்திருந்தான். சிவா, அறையைப் பார்த்தான்.

"தண்ணிக்கு பானை வாங்கிக்குங்க சார்."

"எல்லாம் இனிமேத்தான் வாங்கணும். பக்கத்துல மார்க்கெட் இருக்கா?"

"வாங்களேன். போய் தேவையானதை வாங்கிட்டு வந்துறலாம்."

நானும் புறப்பட்டேன். இருவரும், அருகிலேயே இருந்த கடைத் தெருவுக்கு வந்தோம். குளிக்க பக்கெட், குடி தண்ணீருக்குப் பானை, ஒரு தலையணை, பிரஷ், பேஸ்ட் போல, என் தேவைகளை வாங்கிக் கொண்டோம். சிவா,

பிரபஞ்சன்

வெறும் பார்வையாளனாக இருக்கவில்லை. மாறாக, எல்லாம் விலை பேசியே வாங்கிக் கொடுத்தான்.

வீடு வரை, என் பொருட்களை, நான் தடுத்தும் கேளாமல் அவனே சுமந்து வந்தான். வீடு வந்து, புத்தகங்கள் மற்றும் துணிகளை அடுக்கும் வரை எனக்கு உதவியாக இருந்த அவன், பிறகே விடைபெற்றுப் போனான். அவன் போன உடனே, வீட்டுக்காரி தனபாக்கியம், வந்தாள். ரகசியமாகச் சொன்னாள்.

"இல்லைடா... சிவா ரொம்ப இழையறானே உன்னோடே. இன்னா சங்கதி? பணம் ஏதாச்சும் கேட்டானா, உன்னண்டை? பெரிய குடிகார சோமாரிப்பா அவன். சதா குடிச்சுகினே இருக்கணும் அவனுக்கு. 'டக்கா' பேசி பணம் கேட்பான். குடுத்துடாதே. உன் மூஞ்சைப் பார்த்தா ஒன்னாம் நம்பர் கோலி சோடா மாதிரி இருக்கு."

"அப்படீன்னா?"

"ஏமாளின்னு எழுதி ஒட்டி இருக்கு."

தனபாக்கியம் போனதும், என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தேன். அப்படி ஒன்றும் இல்லை.

ஒரு வித்தியாசமான சப்தம் என்னை எழுப்பியது. வெளியே வந்து பார்த்தேன். இருள் பிரியாத நேரம். ராட்டினம். அதுதான் என்னை எழுப்பி இருப்பதை அறிந்து கொண்டேன். நகரத்துக்குள், நகரம் அறியாத சப்தம். ராட்டினம், அழுகிறதா, சிரிக்கிறதா?

"என்ன எழுத்தாளரே... உங்க தூக்கத்தைக் கெடுத்துட்டனா?" என்றான் சிவா.

"சேச்சே. ராட்டின சப்தம், ரொம்ப புதுசா இருக்கு."

"காலையிலே ஆறு மணிக்குள்ளே குளிச்சிடணும். இல்லேன்னா, பொம்பளைகளும் ஆம்பிளைகளும் வந்துடுவாங்க. என்ன அநியாயம் பாருங்க. இந்த சாரியிலே ஆறு வீடும், அந்த சாரியிலே ஆறு வீடும் இருக்கு. பன்னண்டு வீடு. அதுக்கு ரெண்டே ரெண்டு லெட்ரின், ரெண்டு குளியல் அறை. காலையிலே ஆறு மணியானா, அதுகளுக்கும் கியூ. வெட்கம் பிடுங்கித் தின்னுது..."

அது சங்கடமான அனுபவம்தான். திருவல்லிக்கேணி சந்து வீடுகளில், குடியிருந்து அனுபவம் பெற்ற எனக்கு, அது நன்றாகவே தெரியும். உள்ளே இருக்கையில், வெளியே ஒரு ஜீவன் காத்திருக்கும் அவஸ்தை.

சிவாவின் நுணுக்கமான உணர்வு எனக்குப் பிடித்து இருந்தது. நானும், இரைற்றின் மறு

வளைவில் நின்று கொண்டு குளிக்கத் தயார் ஆனேன். கதவு திறந்து கொண்டு வெளியே வந்தாள் ஒரு பெண். வெளிச்சம், ஒரு பலகை மாதிரி தரையில் விழுந்தது. "சார்... என்னோட சம்சாரம்" என்று சிவா சொன்னான். அந்தப் பெண் தலைகுனிந்து சிரித்துக் கொண்டாள்.

"வாகினி ஸ்டூடியோவில பெருக்கிற வேலை. அப்பப்போ கும்பல் காட்சிகள்ளே சினிமாவிலே நடிக்கும்."

"கும்பல்லே எப்படிங்க நடிக்கிறது? நிப்பேன். அவ்ளோதான்" என்றாள் அவள் சிரித்துக் கொண்டு.

"ஏன், நீங்க நடிக்கலாமே. ஆரோக்கியமா இருக்கீங்களே" என்றேன். நல்ல உடம்போடும், களையான முகத்தோடும் அவள் இருந்தாள்.

"பார்த்தியா... சாரே சொல்லிட்டாரு..."

"சார், படம் எடுத்து, என்னை ஹீரோயின் ஆக்கட்டுமே. வேண்டாம்னா சொல்லப் போறேன்... அது சரி. எள்ளு காயுதுன்னா எண்ணெய்க்கு ஆவும். சார், குளிச்சுட்டு எழுதுவாரு. நீ என்னத்துக்குக் குளிக்கறே. இத்தனை காலையிலே? எலிப்புழுக்கை, எள்ளோடு சேர்ந்து காய்ஞ்சா என்ன பிரயோசனம்?"

"பேசாம போம்மா" என்றான் சிவா. பதிலுக்கு அவன் சிரித்துக் கொண்டே போனான்.

நான் உடை மாற்றிக் கொண்டு எழுத அமர்ந்தேன். சாந்தி, உள்ளே வந்து எனக்கு முன் டீ கிளாசை வைத்தாள்.

"அடடா, உங்களுக்கு எதுக்கு சிரமம்?"

"சிரமம் என்ன சார். எனக்கும் சிவாவுக்கும் போட்டேன். அப்படியே உங்களுக்கும். டீ சாப்பிடவும் நீங்க தெரு முனை வரைக்கும் போகத் தானே வேணும். அந்த நேரத்துக்குள்ளே ஒரு பக்கம் எழுதலாமே..."

டீ நன்றாகவே இருந்தது. சொன்னேன். அவள் சிரித்துக் கொண்டாள்.

"இம்மாம் புஸ்தகம் இருக்கே. எல்லாமும் நீங்க படிச்சதா?"

"ஊம்."

"ஐயையோ. இவ்ளோ படிச்சா, தலை என்ன சார் ஆவும்? வீங்கி வெடிச்சுடுமே... பாவம் சார் நீங்க?"

அவள் போகுமுன் சொன்னாள்.

"சித்தே நாழியில, இட்லி வார்த்துடுவேன். நாலு கொண்டு வர்றேன். சாப்பிடணும்... என்ன?" அதிகாரத்தோடு இருந்தது அவள் குரல். நான் திடுக்கிட்டுப் போனேன்.

"வேணாமே. தோ... பக்கத்துல இருக்கு ஓட்டல்..."

"அது ஒரு ஓட்டலா சார்? கழுதை கூட அந்த ஓட்டல் இட்லியை வாயில வைக்காது தெரியுமா? அரிசி அரைப்படி, கல், மண் அரைப்படி. போட்டு அரைச்சு இட்டலின்னு வைக்கறான். ரெண்டு இட்லி மூணு ரூபாய். அதைப் போயி திங்கறேன்னு சொல்றீங்களே..."

"இருந்தாலும், உங்களுக்கு எதுக்கு?"

"சிரமங்கறீங்க. பொம்பளைக்கு இதெல்லாம் சிரமங்களா சார். அதுக்கு ரெண்டு இட்டலி அதான் தண்ணி வண்டி, என் ஊட்டுக்காரரு அப்புறம் எனக்கு. இப்போ உங்களுக்கு நாலு, வார்க்கிறதுல எனக்கு என்ன சிரமம்? ரொம்ப பிகு பண்ணிக்கிறீங்களே, சார். எங்களை மாதிரி ஏழைங்க வீட்டுல சாப்பிட மாட்டீங்களா?"

"நானும் உங்களை மாதிரிதாமா. நான் ஒன்றும் பணக்காரன் இல்லை."

"அப்போ, வாயை மூடிக்கிட்டு சாப்பிடுங்க..."

நான் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் அமர்ந்திருந்தேன். அரைமணியில், இட்டலிகள் வந்தன. நன்றாகவே இருந்தது. கருவேப்பிலைத் துவையலும், இட்டலியும்.

"தனியா இருக்கியே, சார். உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு. அதுக்கோசரம் தான் இதெல்லாம்..." என்றாள் சாந்தி.

வெயில் உக்கிரமாக் காய்ந்தது. உலர்த்திப் பிழிந்த வெள்ளை வேட்டி மாதிரி. வெயில், நடைபாதையில் விழுந்தது. தரையின் உஷ்ணம், அறைக்குள்ளேயும் வந்தது.

சிவா, தலையைக் காட்டினான். என்னிடம் சொன்னான்.

"டூட்டிக்குப் போறேன் சார். ஏதாவது வேணும்னா, அவகிட்டே சொல்லுங்க. செய்வா, என்ன..."

அவன் போன பிறகு, சாந்தி வந்தாள்.

"வேலைக்கார அம்மா வந்து தண்ணி வச்சாளா, சார்?"

"வைச்சது."

"மத்தியானம் என்ன பண்ணப் போறே? எனக்குப் பதினோரு மணிக்கு ஸ்டூடியோவுக்குப் போகணும். டைரக்டரு, வசனம் பேசற வேஷம் தர்றேன்னு சொன்னாரு. சார்... சாப்பிட ஏதாச்சும் பண்ணித் தரட்டுமா சார்?"

"ஐயோ... வேணாம் சாந்தி. என் வேலையும் சீக்கிரம் முடிஞ்சுடும். நானும் பத்திரிகை ஆபீசுக்குப் புறப்படணும்."

அவளும் புறப்பட்டாள். அசத்துகிற சிவப்பு வர்ணப் புடைவை. வெற்றிலைச் சிவப்பில் உதடுகள். கண்ணில் நிறைய மையுடன்.

எனக்கு, எழுத வேண்டி இருந்தது. மனசுக்குள் சிவாவும், சாந்தியும் வந்து வந்து போனார்கள். இவர்களின் இந்த உபசரிப்புக்குப் பின்னால், மறைந்திருக்கும் நிழல் எது? அப்படி ஏதேனும் இருக்குமா? இவர்களுடன்

என் நடபை எந்த நீளத்துக்கு விஸ்தரித்துக் கொள்வது?

வெயில், என் அனுமதி இன்றியே, படி ஏறி உள்ளே வந்து கொண்டிருந்தது. வாசற்படியில், தலை ஒன்றின் நிழல் பதிந்தது. வீட்டுக்காரி தனபாக்கியம் அம்மாள் நின்றிருந்தாள். சுவாதீனமாக உள்ளே வந்த அவள், என் எதிரே சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

"இன்னாபா... சாந்தி உன் வீட்டுலதான் காலைலே இருந்து இருக்கா போலே... என்ன சங்கதி?" என்று கேட்டாள், குரலை மிகவும் ரகசியமாக மாற்றிக்கொண்டு.

எனக்கு லேசான அச்சம் ஏற்படத்தான் செய்தது.

"சும்மாத்தான். டீ கொண்டு வந்துச்சு. அப்புறம் பலகாரம்."

"நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக் காதே. பார்த்தா பசு மாதிரி இருக்கே... பாவம் மாதிரி. வம்புல மாட்டிக்காதே.. இந்த சாந்தியோட கதை உனக்குத் தெரிஞ்சிருக்காது. சொல்றேன், கேளு. படிச்சுக்கிட்டு இருந்தவ இவ. எவனோ, ஒருத்தனை நம்பி வீட்டை விட்டு ஓடி வந்துட்டா. நேரா, என்கிட்டே தான் வந்தாங்க ரெண்டு பேரும். இந்தச் சனியனைச் சேர்த்துக்கணுமான்னு இருந்துச்சு. போனா போவுதுன்னு இரக்கப்பட்டு இடம் கொடுத்தேன். அப்பவே... என்னா நடந்துச்சு? திடும்னு, அந்தப் பய, அதாம்பா சாந்தியோட முதல் புருஷன் ஓடிட்டான்... அப்புறம், சிவா, இங்கயே தங்கிட்டான். இவன், நல்லவன்தான். ஆனாலும் தண்ணி வண்டி... இவ திணுக்கிறதும், குலுக்கிறதுமா இருக்கா. வரவர இவங்க சமாச்சாரமே எனக்குப் பிடிக்கலை. இடத்தைக் காலி பண்ணுடியம்மான்னு சொல்லிட்டேன். ஜாக்கிரதை. கையில தூண்டில வச்சுக்கிட்டு அலையறாளுவ. மாட்டிக்காதே. சொல்லிட்டேன். பார்த்தா, 'பேக்கு' மாதிரி இருக்கே... பாவம்."

மனிதர்களைக் குறித்து எனக்கு நிறைய யோசனைகளை, ராஜா சந்துதான் தந்தது. மனிதர்கள், முதலில் மற்றவர்களையே ஒற்று வேலை செய்கிறார்கள். மற்றவர்களையே விமர்சிக்கிறார்கள். மற்றவர்களோடு, தங்களை ஒப்பிட்டுக் கொண்டு, மனநிம்மதியை இழக்கிறார்கள். ஒரு போதும், தங்களை ஆராய்ந்து கொள்வது மட்டும் இல்லை.

அந்த வாரம், சிவா, எனக்கு புத்தக ஷெல்ஃப் செய்து கொடுத்தான். நானும் அவனும், ஒருநாள் மாலை, சும்மா காலாற நடந்து கொண்டிருந்தோம். ஒரு பிராந்திக் கடையின் வாயிலில், ஜாதிக்காய் பலகைப் பெட்டிகள், விற்பனைக்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"சார்— ஆறு பெட்டி வாங்கிக் கொடு சார். சோக்கா. ஒரு ஷெல்ஃப் பண்ணித் தாரேன்."

"உங்களுக்கு செய்யத் தெரியுமா?"

"தெரியாமலா கேக்கறேன்."

பெட்டியோடு திரும்பினோம். அன்று இரவே, எங்கேயோ, சென்று, கருவிகளைச் சம்பாதித்துக் கொண்டு வந்தான் சிவா. மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாய் இருந்தது. காலையிலேயே போய், லேசாகத் 'தீர்த்தம்' சாப்பிட்டு வந்திருந்தான், அவன் பாஷையில்.

"காலையிலேவா, சிவா?"

"உங்களுக்குக் காப்பி. எனக்குக் கடா..."

'கடா' மார்க் சாராயம் பிரபலமாக இருந்த நேரம் அது.

பலகைகளை அறுப்பதும், இழைப்பதும், ஆணி அடிப்பதுமாக, அன்று முழுக்க, வேலை' செய்து கொண்டிருந்தான், சிவா. குழந்தைகள், தனபாக்கியம், சும்மா இருக்கும் வேளையில் பெண்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ஷெல்ஃப் உருவாயிற்று. திடுமென மண்ணைப் பிளந்து கொண்டு வந்தது போல, ஒரு கலைப் பொருள் எனக்கு முன் உருவாகி இருந்தது. தரையிலும், எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்த என் புத்தகங்களை, ஒழுங்கு பெறச் செய்தான். ஒரு தேர்ந்த தச்சுக் கலைஞன் ஒருவன், ராஜா சந்தில் இருக்கிற சிவாவிடம் இருப்பதை, பிரமிப்போடுதான் நான் பார்த்தேன்.

அன்று மாலை, இருவரும், சேர்ந்து டிபன் சாப்பிட்டோம். எங்கள் பகுதியில் இருக்கும் மாந்தோப்புக்குச் சென்று உட்கார்ந்தோம். கையெட்டும் தூரத்தில் பழங்கள், காய்த்தும், கனிந்தும் தொங்கிக் கொண்டிருந்தன. தோட்டக்காரர், சினேகமான முறையில் இருந்தார். அவரது கயிற்றுக் கட்டிலில் நாங்கள் உட்கார இடம் தந்தார். பொதுவாகப்

''தொகுதிக்கு இன்ஜினியரிங் காலேஜ் கொண்டு வந்தேன், ஸ்பின்னிங் மில் கொண்டு வந்தேன், பெட்ரோல் பங்க் கொண்டு வந்தேன் அப்படியும் புகாரா?''

''ஆமாண்ணே, அதெல்லாம் உங்க மச்சான், மாமா பேரில் இருந்ததுதான் புகார்!''

– கீழை. அ. கதிர்வேல்





தவணையில் கிடைக்குமா புத்தகம்?

வீட்டு உபயோகப் பொருள்களை மாதாந்திரத் தவணைகளில் வாங்கிக் கொள்கிற மாதிரி, ஆசைப்படும் புத்தகங்களையும் அப்படி வாங்கிக் கொள்கிற முறை தமிழகத்தில் இருக்கிறதா? ''மிகத் தெரிந்த நண்பர்கள், ஆசிரியர்கள் போன்றோருக்கு அவ்வப்போது நான் கடன் கொடுப்பதுண்டு. ஆனால் வசூலிக்க முடிகிறதா? சிலரிடம் முடிவதேயில்லை. இந்த நிலையில் மாதாந்திரத் தவணையில் கொடுத்து விட்டு யார் நஷ்டப் படுவது?'' என்கிறார் 'ஐந்திணை பதிப்பகம்' குழ.கதிரேசன்.

பேசிக் கொண்டிருந்தோம்.

நான் சிவாவிடம் கேட்டேன்.

''சாந்தியை எப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க, சிவா? காதல் கல்யாணமா?''

"அப்படியும் சொல்லலாம் சார்... பாலு தான் எனக்குச் சினேகிதன். என்னோட, பெட் ரோல் பங்குல வேலை செஞ்சான். அந்தப் பழக்கம். ஒருநாள் என்னண்டை வந்து, ஒரு பொண்ணை 'இழுத்தாந்துக்கிட்டேன்'னு சொன்னான். என்ன பண்றது? ரெண்டு பேருக்கும், சம்மதம்தானே? நம்மோட கடமை என்ன சார்? அதை முறைப்படுத்தறதுதானே? வட பழனி கோவில்லே வச்சுக் கல்யாணம் பண்ணி வச்சேன். சந்தோஷமாத்தான் இருந்தாங்க. நானும் அப்பப்போ இங்க வந்து போயிட்டு இருந்தேன். ரொம்ப அன்பாத்தான் இருந்துச்சு, அந்தப் பொண்ணு, எம் பேரிலும்! அந்த பயல், ஒரு கேப்மாரி சார். இவளை உட்டுட்டு வேறு பொண்ணோட சங்காத்தம் பண்ணிக்கிட்டான்."

"என்ன காரணம்?"

"தெரியலை. ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் விரிசல் வந்துட்டா, அதுக்குக் காரணம், மூணாவது மனுசன் கண்டுபிடிக்க முடியாது, சார். ரொம்ப நுணுக்கமான காரணமா இருக்கும். அதை அவனும் சொல்ல மாட்டான். அவளும் சொல்ல மாட்டா. ரெண்டு பேருமே, உண்மையை ஒளிச்சுட்டு, தாங்கள் விரும்பினதைப் பேசிக்கிட்டு இருப்பாங்க... என்ன சொன்னேன். அந்த பேமானி ஓடினப்புறம், அந்தப் பொண்ணு தனியா நின்னா. நான்தான் 'வாகினியிலே' வேலை வாங்கிக் கொடுத்தேன். அப்புறம், நாங்க சேர்ந்து வாழ ஆரம்பிச்சோம்..."

''இந்த சேர்ந்து வாழற யோசனையை முதல்லே சொன்னது யார்?''

''ரெண்டு பேர் மனசுலயும் இருந்துச்சு. அந்தப் பொண்ணுதான் ஒருநாள் சொல்லிச்சு. 'நீயும் தனி ஆம்பிளை. நானும் தனி. எதுக்கு வேற வேற இடத்துல இருக்கணும். நாம் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசையா இருந்துடலாமே' அப்படின்னு சொன்னா. நானும் சம்மதிச்சேன். எதுக்கு சார் இந்த பொழப்பு. உசுரு வாழ்க்கை. ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்தாசையா இருக்கிறதுக்குத்தானே?''

தவிர்க்க முடியாமல், என் புத்தகங்களுக்கு அவன் செய்து கொடுத்த ஷெல்ஃப் நினைவுக்கு வந்தது.

''அண்ணே... ஒரு நிமிஷம். என் வீட்டுக்கு வாங்களேன்" என்றாள் சாந்தி. இந்த ஆறு மாசத்தில், நாங்கள் ஒரு குடும்பமாகப் பழகத் தொடங்கி இருந்தோம். நான், பேனாவை மூடி வைத்துவிட்டு அவனுடன் சென்றேன். அவன் வீட்டில் இருந்த ஒரே ஒரு நாற்காலியில் ஒருவன் அமர்ந்திருந்தான்.

"இவர்தான் நான் சொன்ன சார்" என்று அவனிடம் சொன்னாள் சாந்தி.

நாங்கள் அறிமுகம் ஆனோம். என்னை அவனுக்குத் தெரிந்திருந்தது. அவன், ஒரு அசிஸ்டெண்ட் டைரக்டர் என்று தன்னைச் சொல்லிக் கொண்டான். பெயர் மூர்த்தி.

"மூர்த்தி அறிமுகம் கிடைச்ச அப்புறம் தான், எனக்கு சினிமாவிலே வசனம் பேசற 'சான்சே' கிடைச்சது சார்."

"நீங்க தகுதியுடைய பெண்ணுக்கு உதவு கிறீங்க சார்" என்றேன்.

அவன் சிரித்தான்.

"நான் டைரக்டரானா, சாந்திதான் ஹீரோயின்'' என்றான் அவன். சாந்தி முகத்தில், ஏராளமான வெளிச்சம், தெரிந்தது.

எனக்கு எங்கோ இடறிற்று. எங்கோ ஒரு மூலையில், லேசாக இருள் படர்ந்து இருப்பது மாதிரி எனக்குத் தோன்றியது. எட்டுக்கால் பூச்சியின் எச்சில் நூலிழை. இது கயிறா? மனப்பிரமையா? விஷயம், என் கைகளில் இல்லை. நான் வேடிக்கை பார்க்கிற இடத்தில் அமர்ந்திருந்தேன்.

சாந்தி, எதைப் பற்றி ஏற ஆசைப்படுகிறாள்?

அன்று மதியம், நான் நல்ல உறக்கத்தில் இருந்தேன்.

"சார்... சார்" என்று ஒரு கடுமையான குரல் என்னை எழுப்பியது. கதவைத் திறந்தால், தன பாக்கியம்.''

''என்னப்பா, 'லூஸ்' மாதிரி தூங்கிட்டு இருக்கியே... அங்கே ஒரு பட்சி பறக்குது...''

அவள் என்ன சொல்கிறாள் என்பதே



இந்திக்கு இருக்கிறதா வரவேற்பு?

இந்திக்கும் தமிழகத்துக்கும் உள்ள 'பொருத்தம்' அனைவரும் அறிந்த விஷயம். இந்த நிலையில் இந்தி-இந்தி-தமிழ்-ஆங்கிலம் என்று ஓர் அகராதியை வெளியிட்டால் விற்பனை எப்படியிருக்கும்? ''இந்தித் திணிப்பைத்தான் தமிழக மக்கள் எதிர்க்கிறார்களே தவிர, இந்தியை அல்ல. அதனால் நாங்கள் வெளியிட்ட இந்த அகராதிக்கு மக்களிடம் – குறிப்பாக இளையதலைமுறையினரிடம் நல்ல வரவேற்பு!'' என்று சந்தோஷமாகச் சொல்கிறார், திருச்சியிலுள்ள 'அகஸ்தியர் புத்தக நிலையம்' கோபாலகிருஷ்ணன்.

எனக்கு விளங்கவில்லை. நான் பறவை வளர்க்கவில்லையே.

"என்னங்கம்மா?"

"சாந்தி, அந்த டைரக்டரு பையனோட, அலங்காரம் பண்ணிக்கிட்டு எங்கயோ, போறா. நீ சும்மா தூங்கிட்டு இருக்கையே."

"அது போனா, நான் என்ன பண்ணட்டும். என்கிட்ட சொல்லிட்டுப போகணும்னு எதிர் பார்க்கலாமா? அது, அவரோட, சினிமா ஷூட்டிங்குக்கு போகுது. இதையெல்லாம் கேள்வி கேட்க நாம யாரு. இது அவங்க சொந்த விஷயம். என் ஜன்னல் வழியா காற்றும் வெளிச்சமும் வரணும்னுதான் நான் எதிர் பார்க்கிறேன். மற்றபடிக்கு, அடுத்தவங்க சமாச் சாரம் எனக்கு எதுக்கு?"

"சும்மா கெடப்பா. நீ ஒரு விவரம் கெட்ட ஆளா இருக்கியே. அவ, அந்தப் பையனை 'செட்டப்' பண்ணிட்டாப்பா."

"அப்படீன்னா?"

"முந்தானையில வச்சு முடிஞ்சுக்கினா."

"எனக்கு அது நஷ்டம் இல்லை. எந்தவிதத் திலும்."

"நான் சொல்றேன். அவ அவனோட ஓட நினைக்கிறா. சாந்திய, சிவா, ஒரே வெட்டா வெட்டத்தான் போறான். இந்த இடத்துல ஒரு கொலை நடக்கத்தான் போவுது... ஐயோ..."

கொலை என்கிற வார்த்தை, என்னையும் கிலி அடையவே செய்தது.

"எதையும் தடுக்கும் சக்தி, நமக்கு இல்லை. நடக்கிறது நடக்கும்'' என்றே என்னால் சொல்ல முடிந்தது.

தினமும், ஒன்பது மணிக்கோ, பத்து மணிக்கோ, சிவா என்னைச் சந்திப்பது வழக்கம். நான் அன்று எதிர்பார்த்தேன். அவனிடம் இது பற்றிப் பேச முடியுமா? எப்படிப் பேசுவது? ஏன் பேச வேண்டும். விஷயம், கொலை, தாக்குதல் போன்ற தளங்களில நடந்தால் பிரச்னையாகுமே. சிவாவைக் காப்பாற்ற வேண்டும் போல் எனக்குத் தோன்றியது.

அவன் அன்று இரவு வந்திருந்தான். அன்றும் குடித்திருந்தான். ஏதோ மகிழ்ச்சியாக் இருப்பவன் போல் இருந்தான்.

''சார்... ஒரு விஷயம் உங்ககிட்டே சொல்லணும்'' என்றான் சிவா.

"சொல்லுங்க, சிவா."

"நான் வீட்டைக் காலி பண்ணப் போறேன், சார்."

"காலி பண்றதா? ஏன்?"

"அது... சாந்தி. அந்த டைரக்டரோட வாழப் போகுதாம். சொல்லிச்சு..."

"அதுவா சொல்லிச்சா?"

"ஆமாம். ரெண்டு நாளைக்கு முன்னாடி. அது சரிதான். அவன், அதுக்கு ரொம்ப ஒத்தாசையா இருக்கான். அதுக்கு, ஹீரோயினி ஆக ஆசை. அவன் அதைச் செய்ய முடியும். அதோட, அவங்க ஆசைப்பட்டுட்டாங்க. நாம ஒதுங்கிக்கிறதுதானே மரியாதை..."

நான் பேசாமல் அமர்ந்திருந்தேன்.

"உங்களுக்கு வருத்தமே இல்லையா, சிவா?"

"சேச்சே. இல்லை சார்."

"நீங்க ஏன் காலி பண்ணணும்? அவங்க காலி பண்றதுதானே முறை?"

"பாவம். அவகிட்டே அட்வான்ஸ் கொடுக்கறதுக்கு ஏது சார் காசு? அந்தப் பையனும் பசை இல்லாதவன். நமக்கு என்ன சார் குறை? ராஜா மாதிரி. மாசம் பொறந்தா சம்பளம் வருது."

"தனி ஆயிடுவீங்களே, சிவா?"

"யாரும் தனி இல்லை. பூமியில, நானா கடைசி மனுஷன்? கடைசி மனுசன்தானே தனி. நீ கவலைப்படாதே, சார்."

அந்த மாதக் கடைசியில், சிவா வீட்டைக் காலி செய்தான். சாந்தி, முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

"இன்னாத்துக்கு அழறே. நீ நினைச்ச மாதிரி ஹீரோயினா ஆகி, இந்த வருஷமே சினிமாவுலே உன்னை நான் பார்க்கணும். இன்னா..."

அவன் புறப்படும்போது, என்னிடம் சொன்னான்.

"சார், நம்மளை மறந்துடக் கூடாது. மாசத் துக்கு ஒரு தபா என்னை வந்து காணணும்."

அவன் உருவாக்கித் தந்த ஷெல்ஃப் இன்னும் இருக்கிறது, என்னிடம்.



• ரேணுகா, ரத்னமாலா, கமலா, ஜெயந்தி

அமைச்சரவையில் ஐவர்!

தேவே கௌடா அமைச்சரவையில் பெண் அமைச்சர் என்று (பெயருக்கு) ஸ்ரீமதி காந்தி சிங் மட்டுமே தன்னந் தனியாக இருந்தார். தமக்குப் பதவி கிடைக்கக் காரணமே பீகார் முதல்வர் லாலு பிரசாத் யாதவ்தான் என்று வெளிப்படையாகச் சொன்ன லாலு-விசுவாசி. பின்னர் குஜ்ரால் அமைச்சரவையிலும் இடம்பிடித்துக் கொண்டார்.

இவருக்கு அமைச்சரவைத் தோழிகள் நான்கு பேர் இப்போது கிடைத்திருக்கிறார்கள். காந்தி சிங்கோடு ஐவரானார்கள்!

ஒருவர் நமக்கெல்லாம் ஏற்கெனவே தெரிந்த ஜெயந்தி நடராஜன். முன்பு டிவியில் ஆங்கிலச் செய்திகள் வாசித்து எல்லாருக்குமே அறிமுகமானவர். வக்கீல். பிறகு இளைஞர் காங்கிரஸ் உறுப்பினராகி ராஜ்யசபா எம்.பி. பதவியை எட்டிப் பிடித்தவர். (உபயம் : ராஜீவ்காந்தி.) இப்போது மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரசில் இருந்தாலும், டெக்னிகலாக காங்கிரஸ் உறுப்பினர். பீட்டர் அல்போன்ஸ், ஜெயந்தி நடராஜன் ஆகிய இருவருக்குமே மத்திய அமைச்சரவையில் ஒரு கண் இருந்த நிலையில், ஜெயந்திக்கு அடித்திருக்கிறது அதிர்ஷ்டம். கணவர் நடராஜன் துபாயில் பிஸினஸ்மேன்.

ரத்னமாலா சாவனூர் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதா தளக்காரர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் முதல் முறையாக நுழைந்திருப்பவர். முன்னாள் மத்திய அமைச்சர் சங்கரானந்தை, அவரது சிக்கோடி தொகுதியிலேயே தோற்கடித்து லோக் சபாவுக்குள் கம்பீரமாகக் காலடி எடுத்து வைத்த பெண்மணி.

ஸ்ரீமதி கமலா சின்ஹா பீகார் மாநிலக்காரர். மூத்த தொழிற்சங்கத் தலைவர். எச்.எம்.எஸ். எனப்படும் ஹிந்த் மஸ்தூர் சபாவில் முக்கியப் பொறுப்பு வகிப்பவர். பீகார் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்காக உழைத்து வரும் பெண்மணி. "இந்திய சுதந்தரப் பொன்விழா ஆண்டில், பெண்களுக்கு ஐக்கிய முன்னணி அரசு அளித்த மகத்தான கௌரவம் இதுதான்" என்று பெருமையாக முதல் அறிக்கை விட்டவர் கமலா சின்ஹா. ஜனதா தளத்தைச் சேர்ந்தவர்.

ரேணுகா சௌத்ரி தெலுங்கு தேசக் கட்சியைச் சேர்ந்த ஆஜானுபாகுவான பெண்மணி. ஆள் பார்க்க எப்படி இருக்கிறாரோ, அப்படியே இருக்கும் இவரது அதிரடி பேச்சும், தோரணையும். முன்பு, கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்லி, தெலுங்கு தேசக் கட்சியிலிருந்து விலக்கி வைக்கப் போக, 'எப்படி என்னை விலக்கலாம்?' என்று பிலுபிலு எனப் பிடித்து, டிவியிலும், செய்தித்தாள்களிலும் தாராளமாகவே ஆக்ரமிப்புச் செய்த சாமர்த்தியம் மிக்க பெண்மணி!

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கீதா முகர்ஜிக்கு இடம்கொடுக்க முன்வந்தார் குஜ்ரால். கீதா வேண்டவே வேண்டாம் என்று மறுத்து விட்டார். பெண்களுக்கான 33 சதவிகித இடஒதுக்கீட்டில் அரசு தீவிரமாகச் செயல்பட்டால் மட்டுமே தம்மால் அமைச்சராகப் பதவி ஏற்க முடியும் என்று பிரதமரிடம் கண்டித்துச் சொல்லி விட்டார்.

— சித்தார்த்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கு

ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள உஜாலா பரிசுகள்



உங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு எழுதவும்

இப்போது உஜாலாவின் டாம்ப்பர் - ப்ரூஃப் மூடியும், ஃபில்ஃபர் - ப்ரூஃப் டிராப்பரும் ஜோதி ஆய்வுக்கூடத்தில் டிசைன் செய்யப்படுகின்றன. உங்களைப் பாதுகாக்க அவை எவ்வாறு வேலை செய்கின்றன ?

இன்று, தின் லேயர் க்ரோமெடோகிராஃபி (TLC) மற்றும் காஸ் க்ரோமெடோகிராஃபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (GCMS) பரிசோதனைகளில் முன்னேற்ற நாடான ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ள அமின்ஸ் இல்லாத ஒயிட்னர் உஜாலா-வுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சருமத்தில் எரிச்சல் மற்றும் வாயில் பட்டால் விஷத் தீங்கு இல்லை என்று பரிசோதனையில் தெரிகிறது. மேலும் விஷத்தன்மையற்றது. அதோடு, உஜாலா பல இதர தனித்தன்மை வாய்ந்த குணங்களைக் கொண்டுள்ளது. அவை என்ன ?

உஜாலாவை உபயோகிப்பதற்கு சரியான முறை என்ன ?

விஞ்ஞான ரீதியற்ற ஒயிட்னர்களை நீண்ட நாட்களுக்கு உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கும், உடைகளுக்கும் நல்லதல்ல. ஆகவே அதுபோன்ற தயாரிப்புகளை உபயோகிக்கத் துவங்கியவர்கள் மீண்டும் உஜாலாவையே உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்

Write to : **Jyothy Laboratories (UJALA)**, 2- A. Singarayar Mansion, Abhirami Avenue, Meenambal Salai, K. Kannadasan Nagar, Madras - 600 118.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka